உள்ளே...

1. பார்வை 5
2. புரியாத வயசு 84

# பார்வை



## 1

ஜெகன்னாதன் மெதுவாக எழுந்து, தன் அறையிலிருந்து ஜன்னல் கதவுகளைத் திறந்து விடுகிறார். சில்லென்ற தூய்மையான காற்று பக்கத்தில் மல்லிகையின் மேல் பட்டு மணத்தையும் ஏற்றிக் கொண்டு வர, ஒரு நிமிடம் நின்று மூச்சை உள்ளே இழுத்து விட்டுக் கொள்கிறார். மறுபடியும் தத்தி, தத்தி நடந்து வந்து கட்டிலின் விளிம்பில் அமர்ந்து கொள்கிறார். பிண்ட தைலத்தை எடுத்து காலில் தேய்த்துக் கொள்கிறார். லேசாக நீவி விட்டுக் கொள்கிறார். எத்தனை சுறுசுறுப்பாக எப்படி எல்லாம் இருந்தார்.

Vennila

ஆறு மாதம் முன்பு வரை தன் வாழ்க்கை எப்படி இருந்தது? ஒரு அரசாங்க வேலையில் உயர் அதிகாரியாக இருந்தவர். ஓய்வு பெற்ற பின் தன் பழக்க வழக்கங்களை அதற்கேற்றாற் போல் மாற்றிக் கொண்டார். தினம் காலையில் ஐந்து மணிக்கு எழுந்து விடுவார். பல்லை விளக்கி விட்டு காலைக் கடன்களை முடித்துக் கொண்டு நடை பயிற்சிக்கு கிளம்பி விடுவார். மனைவி இருந்த வரை அவருடைய தேவைகள் பார்த்து, பார்த்து கவனிக் கப்பட்டு வந்தது.

ஆறு வருடத்திற்கு முன்பு, மனைவியை இழந்தபின் வீட்டு நிர்வாகத்திற்கு தன் ஒரே மருமகள் புவனா வந்து விட்டாள். மனைவியைப் போல் பாந்தமாக கவனிக்கா விட்டாலும் ஓரளவு வீட்டு நிர்வாகம் நடக்கத்தான் நடந்தது. தான் வேலையிலிருந்தவரை அவசரம் அவசர மாக காலையில் எழுந்து கொடுத்ததை சாப்பிட்டு ஓடி விடுவார். மனைவி இருந்தவரை அவருக்குப் பிடித்த உணவுகள் காலையில் செய்யப்படும். இரவும் அவருக் காக விசேஷ உணவுகள் இருக்கும். பார்த்துப் பார்த்து கவனித்து ஆசையாக பரிமாறுவாள் மனைவி. அவள் இறந்து போன பிறகு பாதி நாட்கள் காலையில் வெறும் காபியைக் குடித்துவிட்டுக் கிளம்பி விடுவார். சில நாட்கள் கொடுக்கும் டிபனை முழுங்கி விட்டு போவார். இரவு நேரமாகி விட்டால் பல நாட்கள் அலுவலகத்தின் பக்கத்தில் இருக்கும் உணவு விடுதியிலே உணவை முடித்துக் கொண்டு கிளம்பி விடுவார்.

தான் உணவு நேரத்துக்கு வரவில்லை என்று மறக் காமல் மருமகளிடம் சொல்லிவிட்டுக் கிளம்பி விடுவார். வேலைக்குப் போகும் மருமகள் தன்னால் கஷ்டப்படக்



கூடாது என்ற உணர்வுடன் சொல்லி விட்டுக் கிளம்புவார். அது மட்டுமல்ல மனைவி இருந்தவரை தான் உண்டு, தன் அலுவலகம் உண்டு என்று இருந்தவர் மனைவிக்கு எந்த உதவியையும் செய்யாதவர். ஆபீஸ் போகணும். ஆபீஸ் போகணும் என்று இறக்கை கட்டி பறந்தவர். தன் ஒரே மகனிடம் கூட அதிக பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளாதவர். பிள்ளைக்குத் திருமணம் முடிஞ்சதும், அப்பாவை விட அம்மாவைத்தான் பிள்ளைக்குப் பழக்கம். மனைவி இறந்த பின் தான் தான் இழந்தது என்ன என்று அவருக்குப் புரிய ஆரம்பித்தது. 'வேண்டும்' என்று நினைப்பதற்குள் எண்ணெயாக வந்து நிற்கும் மனைவி இல்லை. மருமகளிடம் ஒன்றுக்கு இரண்டு தடவை கேட்டால் தான் எதுவுமே நடக்கிறது. போதாத குறைக்கு மருமகளும் அலுவலகம் செல்பவள்.

''சாரி மாமா மறந்து போச்சு'' உதட்டளவில் மன்னிப்பு கேட்டுவிட்டு நகர்ந்து விடுவாள்.

மனைவி இறந்தது ஒரு துக்கம் என்றால் வேலையில் இருந்து ஓய்வு பெற்றது ஒரு பெரிய இடிதான். எத்தனையோ வருடங்கள் குடும்பத்தை பிடித்திருப்பது போல் உடும்புப் பிடியாக பிடித்துக் கொண்டிருந்த வேலை முடிந்தது. தனக்கு வயதான உணர்வே இல்லாமல் தான் சுறுசுறுப் பாக இருந்தார். ஏன் தன்னை வீட்டிற்கு அனுப்பி விட் டார்கள். மனக்கசப்புடன் தான் ஓய்வு பெற்றார். ஆனாலும் தன் பழக்க வழக்கங்களை பாந்தமாக மாற்றிக் கொண்டு விட்டார்.

ஓய்வு பெற்றதும் விடியற்காலை எழுந்து நடை பயிற் சிக்கு கிளம்பி விடுவார். திரும்பி வரும்போது, வரும் வழியில் இருக்கும் பால் பூத்திலிருந்து பால் வாங்கி

Vennila

வருவார். வந்தும் மருமகள் எழுந்திருக்கவில்லை என்றால் தானே டிகாஷன் போட்டு காபி கலந்து சாப்பிடுவார். எப்போதும் முன்னால் எழுந்திருக்கும் மகனுக்கும் கலந்து கொண்டு போய் கையில் கொடுப்பார். மகன் செய்தித் தாள் படிக்கும் வரை சற்றுப் பொறுமையாக காத்து நிற்பார். மருமகள் காலை நேர அவசரத்தில் இருப்பதால், பேப்பரை இரவு தான் பார்ப்பாள். அதனால் மகன் அலுவலகம் கிளம்ப குளிக்கச் சென்ற பின் மெதுவாக பேப்பரை பிரித்து ஒரு வரி விடாமல் படிக்க ஆரம்பிப்பார்.

இதற்குள் பலமுறை 'தாத்தா, தாத்தா' என்று ஓடி வரும் பேரனை சமாதானப்படுத்தி அவனுக்கு உடைகள் மாற்றி, டிபனை ஊட்டி விட்டு பின் பேப்பரில் விட்டதை படிக்க ஆரம்பிப்பார். மருமகள் காலை டிபனை சில தடவை கொண்டு வந்து தருவாள்.

பலமுறை ''நாழியாச்சு மாமா. அடுப்பு மேடையிலே வச்சிருக்கேன். எடுத்துப் போட்டு சாப்பிடுங்க'' என்பாள்.

''மதியம் சாப்பாடும் ஹாட் பேக்கிலேயே இருக்கு'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பி விடுவாள். மருமகள், மகன், குழந்தை மூவரும் புறப்பட்டுச் சென்ற பின் பேப்பரை முழுவதும் படித்துவிட்டு டிபனை சாப்பிட்டு விட்டு அங்கே குவியலாக அப்படியே போட்டு வைத்திருக்கும் பாத்திரங்களை துலக்கி வைப்பார். ஒரு முறை பரிதாபப்பட்டு மருமகளுக்காக செய்த பின், அதுவே தினசரி வாடிக்கை ஆனது.

தினமும் மருமகள் மகன் எல்லோரும் அலுவலகம் சென்ற பின் அப்பப்படியே போட்டு வைத்திருந்த பாத்திரங்களை சுத்தம் செய்து அடுக்கி, அதனதன் இடத்தில் வைத்து, இறைந்து கிடந்தவற்றை எல்லாம் ஒழுங்கு



படுத்தி, சமையலறையும் கூட்டி ஹாலில், படுக்கை அறையில் அப்பப்படியே போட்டு விட்டுச் சென்றதெல்லாவற்றையும் ஒழுங்கு படுத்தி வீட்டைச் சுத்தமாக வைத்து விட்டுக் குளிக்கச் செல்வார்.

பின் வீட்டைச் சுற்றி இருக்கும் காய்கறித் தோட்டத்தில் போய் அமர்ந்து கொண்டு, கொத்த வேண்டியதைக் கொத்தி களை பிடுங்கி என்று அங்கேயே பல மணி நேரங்கள் செலவிடுவார். பின் வீட்டிற்குள் வந்து மதிய உணவை சாப்பிட்டு விட்டு, நூலகத்தில் இருந்து கொண்டு வந்திருந்த புத்தகத்தில் ஆழ்ந்து விடுவார். மாலை காபி குடித்து விட்டு, பிள்ளை, பேரன், மருமகள் துணிகளை இஸ்திரியிலிருந்து எடுத்து வந்து... இதற்குள் பக்கத்து வீட்டு எதிர்த்த வீட்டு நபருடன் அரட்டை அடித்தவாறே இவ்வாறே... வாழ்க்கை ஓரளவு சுகமாகத் தான் போனது.

தன் ஓய்வு பெற்ற வாழ்க்கையையும் திட்டமிட்டு அற்புதமாகத்தான் வாழ்ந்து கொண்டிருந்தார்.

இப்போது எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி வந்து விட்டதே, நினைத்தவர் மூக்குக் கண்ணாடியை எடுத்து அழுந்தத் துடைத்து அணிந்து கொள்கிறார். நன்றாகப் போட்டு உறுத்து, உறுத்துப் பார்க்கிறார். எதிரில் இருந்த வீட்டிலிருந்து, பக்கத்தில் உள்ள மரம் வரை எல்லாம் சற்று மங்கலாகத் தெரிய லேசாக எரிச்சலுருகிறார். கண்ணாடியை மாத்தணும், மாத்தணும்னு எத்தனை நாட்களாக நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஏனோ அது மட்டும் இன்று வரை நடக்கவில்லை. அன்று நடை பயிற்சிக்குச் செல்ல வேண்டி படுத்து இருந்தவர் எழுந்து கொள்ள முயற்சி செய்ய, எழுந்து கொள்ள முடியாமல் முதுகு வலிக்க, கையும் காலும் இழுத்தது.

Vennila

# 2



எழுந்துகொள்ள முயற்சிக்கிறார். துடிக்கிறார். திரும்பி படுத்தாலும் வலி கொல்கிறது. என்ன செய்வது என்று தெரியவில்லை. மகனை பெயர் சொல்லி அழைக்கிறார்.

''பாஸ்...கரா... பாஸ்கர்...'' பெயர் சொல்வதற்குள் மூச்சு இறைத்தது. குரல் நடுங்கியது. வாயைத் திறந்து பலம் கொண்ட மட்டும் கத்துகிறார். குரல் குழைந்து போனது. மீண்டும் அழுகை வந்தது. எத்தனையோ முறை கூப்பிட்டும், கத்தியும் யாரும் வரவில்லை. இன்னும் எழுந்திருக்கவில்லை போலும். அழுகையோடும், பயத்தோடும் காத்திருந்தார். யாருமில்லாத தனிமை பயமுறுத்தியது. ஒருவேளை தன்னை பார்க்காமலேயே இருவரும் அலுவலகம் சென்று விடுவார்களோ. பயம் நெஞ்சை பந்தாக அடைத்துக் கொண்டது.

முதன் முறையாக மனைவியின் ஞாபகம் வந்தது. எத்தனை பெரிய சொந்தத்தை இழந்திருக்கிறார். அவள் இருந்தால் விட்டு விடுவாளா? அவளின் அருமை இப்போதல்லவா புரிகிறது. எத்தனை நாட்கள் தனக்காக காத்திருப்பாள். எப்போதும் வேலை. வேலை என்று பறந்து கொண்டிருப்பவர். வீட்டிற்கு வந்தும் வேலையை சுமந்து கொண்டுதான் இருப்பார். சாப்பிடுவார். டி.வி. பார்ப்பார். நாள் முழுவதும் தனியாக இருக்கும் மனைவியிடம் ஒரு இரண்டு வார்த்தை கூட பேச மாட்டார். ஒரு



பெண்ணுக்கு கணவன் என்பவன் தான் அனைத்துமே. அவனிடம் பேச எத்தனையோ விஷயங்கள் இருக்கும். மற்றவர்களிடம் பேச முடியாத விஷயம் கூட அவனிடம் தான் பேச முடியும். ஆனால் எப்போதுமே தான் தன் வேலை என்று மூழ்கி இருப்பவனிடம் என்ன சொல்ல முடியும்? கணவனிடம் பகிர்ந்து கொள்ள எத்தனையோ வீட்டு விஷயங்கள் காத்துக் கிடக்கும். ஆனால் அவர் எதையுமே பொருட் படுத்தியதில்லை. சில நாட்கள் தன்னையும் மீறி அவரிடம் பேச முயற்சி செய்து அவரிடம் திட்டு தான் வாங்கி கட்டிக் கொண்டு இருக்கிறாள். மருமகள் வந்ததும் இன்னும் தான் பேசுகிற அரை வார்த்தை, ஒரு வார்த்தையும் குறைந்து போனது. பின் பேச்சே சுத்தமாக நின்றே போனது.

இப்போது அதை எல்லாம் நினைத்தாலே வேதனையாக இருந்தது. அவளுக்கும் தன்னிடம் சொல்ல எத்தனையோ விஷயங்கள் இருந்திருக்கும். தான் ஏன் அவளை பொருட்படுத்தவில்லை. தன்னுடைய தெரியாத்தனமா? தெரியவில்லை. எப்போதோ செத்துப் போன மனைவியைப் பற்றி இப்போது வருத்தப்படுகிறார்.

''சாரி கண்ணம்மா என்னை மன்னிச்சிடு. எதுவும் இருக்கும் போது அதன் மதிப்பு தெரியாது.'' நினைத்து, நினைத்து அழுகிறார். தான் அவள் இருக்கும்போது இப்படி படுத்துக் கிடந்தால் விட்டிருப்பாளா? எத்தனை கத்தி கூச்சல் போட்டு அமர்க்களப்படுத்தி இருப்பாள். அவள் இருந்தபோது ஒரு நாள் டென்ஷன் காரணமாக தான் லேசாக மயக்கம் போட்டு விழ, துடித்துப் போய் பிள்ளை மருமகளை லீவு போடச் சொல்லி எத்தனை எல்லாம் செய்தாள். ஏன் அப்போது கூட தான் அவளை

Vennila

புரிந்து கொள்ளவில்லை. பொருட் படுத்தவில்லை. மீண் டும் அழுகிறார்.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. மீண்டும் தன்னை சமாளித்துக் கொண்டு கத்துகிறார். இந்த முறை சொற்கள் தெளிவாக வராமல் குழற, மீண்டும் கத்துகிறார்.

"உங்கப்பா இன்னிக்கு பால் கூட வாங்கிட்டு வரலை, எப்படி நான் காபியை போடறது."

"அப்பா எப்பவுமே வாங்கிட்டு வரவர்தானே. இன் னிக்கு இன்னும் எழுந்திருக்கலை போலருக்கு. அவுங்க, அவுங்க டியூட்டியை அவுங்கவுங்க செய்ய வேண்டாமா?"

"என்னாச்சு இப்ப? அதான் நான் வாங்கிட்டு வந்துட் டேன் இல்லே."

பிள்ளை கத்த,

"ஆமா... எத்தனை டென்ஷன்? இத்தனை நேரம் எல்லா வேலையும் முடிஞ்சிருக்கும்."

"த்சு... ஒரு நாள் அசதியிலே அவர் தூங்கிட்டு இருக் கலாம்."

கணவன் சொல்ல புவனா மௌனமானாள். முடியாமை, தள்ளாமை என்பது எல்லோருக்கும் உண்டு. தனக்கே ஒரு நாள் எழுந்து கொள்ள முடியாமல், அன்று அலுவலகத் திற்கு விடுமுறை எழுதிக் கொடுத்தது ஞாபகத்திற்கு வந்தது. இருந்தும் காலையில் காபி லேட்டானதால் எல்லா வேலைகளும் தள்ளிப் போய் விட்டது.

லேசாக முணுமுணுத்தவாறே மதிய சாப்பாட்டை செய்து, தனக்கு கணவனுக்கு குழந்தைக்கு என்று அவரவர் டப்பாவில் அடைத்து மாமனாருக்கு ஹாட் பேக்கில் வைத்துவிட்டு, டிபனுக்கு பிரட் டோஸ்ட் செய்து



உப்பு கலந்த வெண்ணெயைத் தடவி வைக்கிறாள். மாமனாருக்கும் ஒரு தட்டில் போட்டு மூடி வைத்து விட்டு பையனைப் போய் எழுப்புகிறாள்.

மூன்றாவது படிக்கும் மகன் சற்று எரிச்சலுடன் எழுந்து, பல் விளக்கி குளிக்க முரண்டு பண்ணி குளித்து விட்டு, தாத்தாவின் அறைக்கு ஓடி வருகிறான்.

"ஏய் நேரமாச்சு. அப்புறம் போகலாம். இன்னிக்கு லேட் டாயிடுச்சு. சாயந்திரம் வந்து தாத்தாவோட விளையாடு. சாப்பிட வா."

"போம்மா." புவனா சொல்லச் சொல்ல கேட்காமல் தாத்தாவின் அறைக்கு ஓடி வருகிறான். அடுத்த நிமிடம் ஓவென்று அலறியபடி ஓடி வருகிறான்.

"என்னடா?" புவனா சற்று எரிச்சலோடு அதட்ட,

"தாத்தா மயக்கம் போட்டு விழுந்திருக்காரு" அம்மா விடம் போய் கத்தியது போக, அப்பாவிடம் அலறுகிறான்.

"என்னடா?"

"தாத்தா... தாத்தா..." அவன் அழ, பாஸ்கர் விழுந் தடித்துக் கொண்டு அப்பாவின் அறைக்கு ஓடுகிறான். மருமகள் புவனாவும் பயந்து போய் ஓடி வருகிறாள்.

"மாமா... என்னாச்சும்மா?... மாமா" என்று அவள் கூப்பிட அசைவற்றுக் கிடந்தார் ஜகன்னாதன்.

"அப்பா... அப்பா..." மகன் பரிதவித்துப் போனான்.

அடுத்த அரை மணி நேரத்திற்குள் அவரை மருத்துவ மனைக்குத் தூக்கிச் சென்று மருத்துவம் செய்து அழைத்து வந்தனர். அதன் பிறகு சற்று பேச முடிகிறது. கொஞ்சம் நகர முடிகிறது. தன் வேலைகளை தான் செய்ய முடிகிறது.



Vennila

இருந்தும் ஒரு கால் நன்றாகவே இழுத்துக் கொண்டு விட்டது. கையும் லேசாக இழுத்தாற் போலத்தான் ஆனது.

அன்றையிலிருந்து அவர் வாழ்க்கையே இந்த அறையாக போய் விட்டது. ஆஸ்பத்திரியில் முதல் மூன்று நாட்கள் மகன், மருமகள் இருந்தனர். அடுத்த மூன்று நாட்கள் மருமகள், அதற்கு அடுத்த மூன்று நாட்கள் மகன் இருந்தான். அதற்கு அடுத்த நாள் யாருமே இல்லை. இருவருக்குமே அலுவலகத்தில் லீவு கிடைக்கவில்லையாம். ஒரு நர்ஸைப் போட்டு விட்டு, மகன் இரவு தான் வருவான். எப்போதாவது பேரனும் வருவான்.

ஓடி வந்து 'தாத்தா' என்று கட்டிக் கொண்டு முத்தமிடுவான். "நான் தாத்தாவோடவே இருக்கேன்" அழுவான்.

இப்படியாக ஆஸ்பத்திரி வாழ்க்கை முடிந்து, இப்போது வீட்டோடு இருக்கும் அவலம்.

இப்போதெல்லாம் காலையில் நடை பயிற்சி இல்லை. பால் வாங்கி வருவதில்லை. முதலில் கொஞ்ச நாட்கள் மகன் பாலுக்குப் போனான். இப்போது அவனும் போவதில்லை. அதற்கும் ஆளை போட்டாயிற்று. காலையில் ஆறு மணிக்குள் காபி குடிப்பது போய், மருமகளுக்கு எப்போது நேரம் இருக்கறதோ அப்போது காபி வரும்.

ஒரு நாளைக்கு ஏழரை மணிக்கு ஒரு நாளைக்கு எட்டரை வேறு ஒரு நாளைக்கு அவள் கிளம்பு முன்.

"ஐயோ டைம் ஆயிடுச்சு. இந்தாங்க" என்று வைத்து விட்டு ஓடுவாள்.

"எனக்கு ஒண்ணுமே முடியலை, முடியலை" என்று பரிதவிப்பாள். அந்த ஓட்டத்தில் பாதி நாள் சாப்பாடு கூட சரியாக இருக்காது. மாமனாரின் கை, கால் சரியாக



இருந்தவரை ஓரளவு சரியாக இருந்தது. அவரின் கை, கால் விழுந்ததும் மாறிப் போனது. தான் பெரும் பாரமாக அவர் உணர்ந்தார். இதன் இடையில் பார்வை வேறு மங்கிப் போக, பார்வை சரியாகத் தெரியாமல் போக, தன் சொந்த காரியங்களைக்கூட செய்ய தடுமாறி விடுகிறார். இன்று கட்டாயம் பிள்ளையிடம் இதைப் பற்றி சொல்ல வேண்டும் என்று வந்தவர், பிள்ளையும் மருமகளும் பேசுவதைக் கேட்க உறைந்து போகிறார்.



## 3

"ஏங்க உடம்பு சரியில்லைன்னா என்னங்க? கொஞ்சம், கொஞ்சம் அசைஞ்சு நடக்கக் கூடாதா? ஆஸ்பத்திரியிலிருந்து வந்த பிறகு கொஞ்ச நாள் விந்தி, விந்தி நடந்துகிட்டுதானே இருந்தார். என்ன ஆச்சு? ஒரு வயசானவங்க ஆக்டீவா இருக்கக் கூடாதா? சோம்பேறித்தனம். நல்லா படுத்து, படுத்து பழக்கமாயிடுச்சு. இந்த பத்து நாளா காபியைக் கொண்டு போய் கைல கொடுக்க வேண்டியிருக்கு. படுத்துகிட்டே இருக்கார். எழுந்திருக்க மாட்டேங்கறார். ஏங்க நான் ஒருத்தியா எத்தனை லோல் பட முடியும். உங்களுக்கும், குழந்தைக்கும் செய்யறதுக்கே எனக்கு முடியலே."

"அதுனாலே?"

"பேசாம நல்ல பெய்ட் ஓல்ட் ஏஜ் ஹோம்லே அப்பாவை விட்டுடுங்க." நச்சென்று அவன் கன்னத்தில் ஒன்று விழுந்தது.

Vennila

மருமகள் அதிர்ந்து போய் கணவனை பார்க்கிறாள்.

"என்னடி திமிரா? உனக்கும் வயசாகுமில்லே. உனக்கு மட்டும் உடம்பு வராதா? பாவம் அவரு. வேலையிலே இருந்த வரைக்கும் எப்படி இருப்பாரு தெரியுமா? ஏன் அம்மா உயிரோடு இருந்த வரைக்கும் அப்பா ஒரு டம்ளரைக் கூட தொட்டதில்லை. அவர் வேலை உண்டு அவர் உண்டுன்னு இருந்தவர். இப்போ வேலையை விட்டதிலிருந்து அவரால முடிஞ்ச வேலையை உனக்கு அவர் செய்ததில்லையா? காலைல பால் பாக்கெட் வாங்கிட்டு வராரு. ரேஷன் சாமான்களை வாங்கித் தராரு. மார்க்கெட்டுக்குப் போய் காய்கறிகளை வாங்கிட்டு வராரு. இஸ்திரிக்குத் துணி கொடுத்துட்டு வராரு. போதாத குறைக்கு ஸ்கூலில் இருந்து வருகிற பேரனைக் கவனிச்சு கிட்டு அவனோட பிரண்டா இருக்காரு. ஸ்கூலுக்குப் போகறதுக்கு முன்னாலேயும், பின்னாலேயும் நம்ப பையன் யார் கூட இருக்கான்? கவனிச்சே இல்லே. அவரைப் போய் இப்படியெல்லாம் பேச எப்படி மனது வந்தது?"

பாஸ்கரன் எரிச்சலுடன் ஆவேசமாகக் கத்த, புவனா வாயை மூடிக் கொண்டாள். இதுவரை கணவன் மற்றவர் முன் தன்னை அவமானப் படுத்தியதில்லை. இப்போது எட்டிப் பார்த்த மாமனார் முன்னிலையில் அடித்தே விட்டான். மனம் கறுவியது. ஆத்திரம் வந்தது. எரிச்சல் வந்தது. விருட்டென்று அவள் உள்ளே போக, தயங்கிய படியே நிற்கிறாள். என்ன கேட்பது? கேட்டால் பிள்ளை சரியாக எடுத்துக் கொள்வானோ. மருமகள் சொல்வது உண்மைதான். ஆஸ்பத்திரியிலிருந்து வந்த கொஞ்ச நாட்கள் தத்தி, தத்தி நடந்து எல்லா வேலைகளையும் செய்தார்.



கடந்த பத்து நாட்களாக திடீரென்று பார்வை மங்கிப் போக, தன் வேலையைக் கூடச் செய்யாமல் அவதிப்படு கிறார். அன்று காலை வழக்கம் போல் எழுந்திருந்தவருக்கு பார்வை மங்கலாகத் தெரிய, கண்ணைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தார்.

ஒரே நாளிலா பார்வை குறைந்து விடும்.

ஆச்சரியத்தோடு ஒருவித அதிர்ச்சியும் இருந்தது. ஒரு கண்ணை மூடிக் கொண்டு இன்னொரு கண்ணால் பார்க்கிறார். தூரத்தில் இருந்த பொருட்கள் கொஞ்சம் தெளிவில்லாமல் தெரிந்தது. மற்றொரு கண்ணால் பார்த்தபோது அருகில் இருந்த பொருட்களே பிசிறடித்தது. இந்த கண்ணாடியைக் கட்டாயம் மாற்ற வேண்டும். எண்ணியவர் வாஷ் பேசினிடம் செல்ல சட்டென்று தலைக்கு மேல் இருந்த குழாய் இடித்துக் கொண்டு, நெற்றியில் இரத்தம் கசிந்தது.

'ஆ' என்று அலறி நெற்றியைப் பிடித்துக் கொண்டவர். சற்று வேகமாக நடந்தபோது, கால் கட்டிலில் இடித்தது. நெற்றி வலிக்க, கால் வலிக்க அழுகை வந்தது. வாழ்க்கை யில் கொஞ்சம் கூட அடிபடாமல் வாழ்ந்தவர். ஒரே விதமாக வாழ்க்கை நகர்ந்தது. வேலை, பணம் சம்பாதித் தல் நேரத்துக்கு எல்லாமே நடத்தல் என்று வாழ்க்கையே ஒரேவிதமான ஓட்டத்தில் இருந்தது.

இப்படி அடுத்தவர் கையை எதிர்பார்க்கும் நிலமையும், பார்வையில் கோளாறும், உடலில் காயங்களும் என்று இருந்ததே இல்லை. தன் இயலாமையை நினைந்து, நினைந்து வருந்துகிறார். அதன் பின் நடப்பதைக் குறைத்துக் கொண்டார். எங்காவது விழுந்து வைத்து மறுபடியும் நடக்க முடியாமல் போய் விடப் போகிறதே

Vennila

என்ற பயத்தில் நடப்பதைக் குறைத்துக் கொண்டார். மருமகள் படுக்கையில் கொண்டு வந்து நீட்டும் காபியைக் குடிக்கலானார். டிபன், சாப்பாடு எல்லாவற்றையும் படுக்கையிலே சாப்பிட ஆரம்பித்தார். அதற்குத் தான் மருமகளுக்குக் கோபம் வந்தது. பிள்ளையிடம் பேச வேண்டும். இப்படியே இருந்தால் நாளைக்கு நிலமை மோசமானால் பிள்ளையே தன்னை இடித்துக் காட்டலாம்.

மருமகள் உள்ளே சென்றதும் பிள்ளை இன்னும் எரிச்சலில் இருப்பது தெரிந்தது. இதற்குள் மருமகள் பேரனைப் போட்டு அடி, அடி என்று அடித்துக் கொண் டிருந்தாள். பேரன் அலற,

''ஏய் குழந்தையை ஏன் அடிக்கறே?'' எரிச்சலோடு கேட்கிறான் மகன்.

குழந்தை வீல், வீலென்று அலற ஓடிப்போய் தூக்கு கிறான். பெண்டாட்டியின் கன்னத்தில் ஒன்று வைக் கிறான். அவள் கோபத்தில் பாத்திரத்தை தூக்கிப் போட, குழந்தையைத் தூக்கி சமாதானப்படுத்தியவாறே வெளியே சென்று விட, அவன் உருவம் மங்கலாகத் தெரிய அப்படியே செய்வதறியாது பார்க்கிறார். குழந்தை அடிபட தான் ஒரு காரணமாகி விட்டோமோ என்று எண்ணியதும், சட்டென்று கண்களில் கண்ணீர் வந்தது.

'தாத்தா... தாத்தா' என்று உயிரை விடும் குழந்தை. அது வீல் வீல் என்று அலறியது நெஞ்சை அறுத்தது. மீண்டும் அழுகை வந்தது. பிள்ளையைக் கேட்க வேண்டும் என்ற உணர்வு மறந்து போய் வருத்தத்துடன் அமர்ந்திருக்கிறார். நினைத்தாரே தவிர, அடுத்த ஒரு வாரமும் பிள்ளையைக் கேட்கக் கூட முடியவில்லை. வீடே அமைதி இழந் திருந்தது. குழந்தையை மனைவியைத் தொட விடாமல்



தானே எல்லாம் செய்கிறான் மகன். குழந்தை காலை வேளை தாத்தாவின் அருகே வராமல் மாலை தான் வர ஆரம்பித்தது.

வீட்டில் ஏற்பட்ட சண்டையை குழந்தை மறந்தே போனது. தாய், தந்தை மட்டும் இன்னும் அதை நினைத்து, மறுகி, மறுகி ஒருவரோடு ஒருவர் பேசாமல் இருந்தனர்.

''ஆமா தாத்தா நீ ஏன் இந்த ரூம்லேயே இருக்கே? வெளியே கூட போக மாட்டேங்கறே? எனக்கு ஏன் போர்ன்விடா எல்லாம் எடுத்துத் தர மாட்டேங்கறே?'' பேரன் கேட்க,

''தாத்தாவிற்கு கண் சரியாத் தெரியலைடா.''

''என்ன சொல்றீங்க?''

''ஆமாம்பா. இப்ப எல்லாம் எதுவுமே சரியாத் தெரி யலை. உம் மூஞ்சியே கூட ஒழுங்காத் தெரியலை.'' அவர் சொல்லச் சொல்ல,

''ஐயையோ'' என்றவாறே தாத்தாவையே பார்க்கிறான். தாத்தாவின் மடியில் ஏறி அவரின் கண்களைத் தொட்டுப் பார்க்கிறான்.

''என்னடா இது? கண்ணைக் குத்திடப் போறே?''

''இல்லை தாத்தா. நீ கவலைப்படாதே. நான் சும்மா தொட்டுப் பார்த்தேன்'' என்ற குழந்தை ''வா தாத்தா'' என்று தாத்தாவின் கையைப் பிடித்து அழைத்துப் போனான்.

''இரு தாத்தா'' என்றவன், பிளாஸ்கில் இருந்த போர்ன் விடாவை தாத்தாவிடம் தர, தாத்தா நடுங்கும் கையால் பாலை டம்ளரில் கொட்டுகிறார்.

Vennila

"போதும் தாத்தா" பேரன் கத்த நிறுத்துகிறார். பேரன் போர்ன்விடாவை குடிக்க ஆரம்பித்தான்.

"தாத்தா இந்தாங்க நீங்க கொஞ்சம் எடுத்துக்கங்க." இன்னும் அரை டம்ளர் போர்ன்விடாவை அவருக்குத் தர, பசித்த வயிறுக்கு அமிர்தமாக இருந்தது.

"தாத்தா இருங்க பிரிஜ்ஜிலேர்ந்து பால் எடுத்து தரேன். ப்ரு இங்க இருக்கு காபியைக் கலங்க" என்கிறான்.

பேரன் உதவி செய்ய, பாலைக் காய்ச்சியவர், காபியைக் கலந்து குடிக்கிறார். புதிய சக்தி வந்தது போல் உணரு கிறார். அழைத்துப் போய்

"தாத்தா இந்த அலமாரியிலேயே பிஸ்கட் இருக்கு. வாங்க. தூக்குங்க" என்கிறான். தனக்கு வேண்டிய பிஸ்கட்டுகளை எடுத்துக் கொண்டவன்,

"தாத்தா நீங்களும் சாப்பிடுங்க" என்று தாத்தாவிடம் தர, தாத்தாவும், பேரனும் ஹாலில் அமர்ந்து சாப்பிடு கின்றனர்.

"ஆமா தாத்தா உனக்கு ஆபரேஷன் பண்ணினா கண்ணு தெரியுமா?"

பேரன் ஆவலோடு கேட்க, "சே! சே! எனக்கு ஒண் ணும் இல்லேடா. கண்ணாடி மாத்தினா சரியாப் போயி டும்" என்கிறார்.

"அப்படியா? அப்ப கொண்டாங்க மாத்திடலாம்" என்று கண்ணாடியை பேரன் பிடுங்க, அவரின் மூக்கு கண்ணாடி தரையில் விழுந்து உடைந்தது.





# 4

கண்ணாடி உடைந்ததும் அதிர்ச்சியோடு பார்க்கிறார் கிழவர். சட்டென்று அழுகை பொங்கி, பொங்கி வந்தது. ஓவென்று வாய் விட்டு அழுகிறார். இறந்து போனவர் களின் சடலத்தில் விழுந்து அழுவதைப் போல் ஒரு அழுகை. பேரன் பயந்து போய் தாத்தாவையே பார்க் கிறான். தாத்தா வாய் விட்டு அழுததைப் பார்த்ததும் பேரனுக்கும் அழுகை வந்தது.

"தாத்தா... தாத்தா..." சொல்லிவிட்டு ஓவென்று அழுகிறான்.

"சாரி தாத்தா..."

"ஐயோ என் கண்ணாடி போச்சே... பாதி பார்வை கூட இனிமே தெரியாதே. எல்லாம் மங்கலாக இருக்கே." சட்டென்று அழுகிறார். "கிட்ட இருக்கறதுக்கும், தூர இருக்கறதுக்கும் வித்தியாசம் தெரியாதே. எல்லாமே போச்சே. இருக்கறதும் போச்சே." அவர் மறுபடியும் ஓவென்று அழ,

"சாரி தாத்தா அழாதீங்க. நான் இன்னிக்கே அப்பா கிட்டே சொல்லி உங்க கண்ணாடிக்கு ஏற்பாடு பண்றேன்."

சட்டென்று நிமிட நேரத்தில் முகத்தில் மின்னல். கண்ணாடி உடைந்ததும் தான் அதற்கு வேளை வரு கிறதோ. அவர் முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடியது.

Vennila

"பிரதீஷ் என்னடா கண்ணா சொல்றே? வேற கண்ணாடி வாங்கித் தருவியா?" கேட்கும் போதே கண்களில் கண்ணீர் வழிய, கை நடுங்க பேரனின் தலையைத் தடவிக் கொடுக்க,

"ஸாரி நீங்க கவலைப்படாதீங்க. இன்னிக்கு அப்பா வந்தவுடனே சொல்லி உங்களுக்கு கண்ணாடி வாங்கித் தரேன்." பேரன் தாத்தாவின் கண்ணீரைத் துடைக்க, அவர் ஆனந்தப்பட்டார். பேரனை மடியில் இருத்தியவாறு அமர்ந்திருந்தார்.

"தாத்தா கவலைப்படாதீங்க." தாத்தாவை தடவிக் கொடுத்தவாறே அமர்ந்திருந்தான் பேரன்.

"தாத்தா நிஜமாகவே உனக்கு கண் தெரியலையா? இது எத்தனை சொல்லு?" பேரன் கை விரல்களைக் காண்பிக்க,

"நான்கு" என்று காண்பிக்க, பேரனின் கை விரல்களைத் தடவிப் பார்த்து பதில் சொல்கிறார்.

"போங்க தாத்தா கையை டச் பண்ணி சொன்னா ஒத்துக்க மாட்டேன். டச் பண்ணாம சொல்லுங்க."

சற்று தூரத்தில் போய் நின்று கொள்கிறான்.

"இது எத்தனை?" அவன் கேட்க, கண்களை விரித்துப் பார்க்கிறார். கைகளில் கண்களை மறைத்தவாறே பார்க்க முயலுகிறார். புருவத்தில் கைகளை வைத்துக் கொண்டு உற்றுப் பார்க்கிறார்.

"என்ன தாத்தா தெரியலையா?" பேரன் ஆராய்ச்சி பார்வையுடன் கேட்க, அவர் இல்லையென்று தலை ஆட்ட, பேரன் இப்படியும், அப்படியும் நின்று தாத்தாவை டெஸ்ட் செய்து கொண்டிருந்தான். நேரம் போனதே



தெரியவில்லை. வழக்கமாக முதலில் வரும் மருமகள் இன்னும் வரவே இல்லை. மணி ஏழரையைத் தொட்டது. பேரனின் கையைப் பிடித்தவாறே மெதுவாக நகர்ந்து விளக்கைப் போட்டார். மணி ஏழரை அடிக்க பசி எடுத்தது.

"தாத்தா பசிக்குது" என்கிறான் பேரன். பாஸ்கர் மெதுவாக ஏழரை மணிக்கு வந்தபோது, பிரதீஷ் அழுது கொண்டிருக்க, தாத்தா அவனை தேற்றுகிறார். வரும் போது எரிச்சலோடு வருகிறான்.

"அப்... பா... தலைவலி. புவனா வரலை இன்னும்..." நினைத்த மனது பிள்ளையின் முகம் பார்த்து நடுங்குகிறது. ஏதேனும் சொல்லி விடுவானோ. சள்ளென்று விழுந்து விட்டால் என்ன செய்வது? முன்பெல்லாம் அப்பாவைப் பார்த்து பிள்ளை பயப்படுவான்.

அலுவலகத்திலிருந்து ஜகன்னாதன் கோபத்தோடு வந்தால் நடுங்கியபடியே நிற்பான். முக்கால்வாசி நேரம் அப்பா வரும்போது அரை தூக்கத்தில் இருப்பான். அவர் கோபத்தோடு வரும்போது அவர் எதிரில் கூட வர மாட்டான்.

"அப்பா கோபமாக இருக்கிறார்." அம்மா சொல்லி விட்டால் போதும் நடுங்கி விடுவான். இன்று நாணயத்தின் மறுபக்கம். பிள்ளையின் முகம் பார்த்து நடுக்கம் ஏற்பட்டது.

"என்னப்பா இது? ஏன் அழறான்?" பிள்ளை சற்று எரிச்சலோடு கேட்க, மெதுவாக "பசி" என்கிறார் ஜகன்னாதன்.

தான் நடக்கும்போது, தனக்கு உடம்பு சரியாக இருக்கும்போது, யார் தயவையும் நாடியதில்லை. எத்தனையோ

Vennila

நேரங்களில் மருமகள் லேட்டாக வருவாள். மகனும் வந்து விழித்துக் கொண்டு இருப்பான். பேரனை பக்கத்தில் இருக்கும் ஓட்டலுக்கு அழைத்துச் சென்று தானும் சாப்பிட்டு விட்டு மகனுக்கும், மருமகளுக்கும் ஏதேனும் வாங்கி வருவார்.

தன் பெயரில் வங்கியில் இருந்த பணம் மட்டுமல்ல, பென்ஷனும் இருப்பதால், தேவையான போது தாராளமாக செலவு செய்வார். இப்போது நடக்க முடியாமை மட்டு மின்றி கண் பார்வையும் குறைந்துவிட இன்னொருத்தரை நம்பி வாழ வேண்டிய அவலம் பேரனுக்கு மட்டுமல்ல. அவருக்கும் அதிகமானது. பசி எடுத்து வயிற்றை இழுத்துப் பிடித்துக் கொண்டது. பசிக் களைப்பும், அழுகையும் அவருக்கும் வந்தது. தன் மனதை அடக்க முயற்சி செய்து, சோர்ந்து போய் பலவீனமாய் மகனையே பார்க்கிறார்.

''இன்னுமா வரலை அவ?'' அவர் இல்லையென்று தலை அசைக்க, பல்லைக் கடித்தவன்,

''எம்பா அவ வரலைன்னா என்ன? ஏதாவது பேரனுக்கு வாங்கித் தரக்கூடாதா? பசியிலே துடிச்சுப் போய் அழ றானே. கை, கால் ஊனமா இருக்கறவங்க யாரும் நட மாடறதே இல்லையா என்ன? ஏம் இப்படி ஆயிட்டீங்க?''

அவரின் முகம் விழுந்தது. 'பிள்ளையிடம் என்ன சொல்வது? தன்னைப் பற்றி சொல்லிவிட வேண்டியது தான்.' நினைக்கும்போதே நெருப்புத் துண்டமாய் அவன் வார்த்தைகள் விழுந்தது.



''என்னாச்சுப்பா உங்களுக்கு? ஏன் இப்படி ஆயிட் டீங்க? அம்மா இருந்த வரைக்கும், பேமலி மேலே அக் கறையே இல்லாம இருந்தீங்க. நீங்க சம்பாதிச்சீங்க இல்லைன்னு சொல்லலை. ஆனா அதுக்காக பேமலி மேலே அக்கறை இல்லாமயா இருப்பாங்க. நான் உங் களுக்கு ஒரே பையன் தானே. என்ன படிக்கறேன்னு என்னிக்காவது பார்த்திருக்கீங்களா? 'சாப்பிட்டியான்னு' என்னிக்காவது கேட்டிருக்கீங்களா? இத்தனை ஏன்? எத்தனையோ நாள் உடம்பு சரியில்லாதபோது, அம்மா தானே கவனிச்சுகிட்டாங்க. அப்பான்னு நீங்க என்ன செய்திருக்கீங்க. சரி அம்மா இருந்த வரைக்கும் தான் அப்படி இருந்தீங்க. ரிடையர் ஆனப்புறம் மாறிட்டீங் கன்னு சந்தோஷப்பட்டேன். உங்களுக்கு பாசமில்லேன் னாலும் அப்பான்னு நான் பாசமாத்தானே இருந்தேன். பாவம் எப்படி இருந்தவர்னு உங்க மேலே ஒரு அனுதாபம் இருந்தது. அம்மா வேற 'பாவம் உங்கப்பா. உங்கப்பாவை விட்டுடாதேன்னு' சொல்லிவிட்டு தான் செத்துப் போனாங்க.

''அவருக்கு ஒண்ணும் தெரியாது. வேலை, வேலைன்னு வேலையை பிடிச்சுகிட்டு ஓடிட்டு இருந்தவர். அவருக்குப் பாசத்தை காண்பிக்கத் தெரியலை. அதுனால அவரை விட்டுடாதேன்னு'' அம்மா சொன்ன வார்த்தையை மதித்துதான், இத்தனை நாளும் உங்களுக்கு உதவி செய்தேன். நீங்க அட்ஜஸ்ட் பண்ணிகிட்டதைப் பார்த்து ரொம்ப சந்தோஷப்பட்டேன். ஆனா மறுபடியும் பழைய படி ஆயிட்டீங்க. அதுகூட போகட்டும். உடம்பு சரி யில்லைன்னு சொன்னீங்க. அதான் ஆஸ்பத்திரிக்கு

Vennila

அழைச்சகிட்டு போய் எல்லாத்தையும் சரி பண்ணிட்டேன் இல்லே. இப்ப பரவாயில்லைதானே. கொஞ்சம் விந்தி நடந்தாலும் நடக்கலாம் இல்லே. இந்த குடும்பத்துக்கு உங்களால் முடிஞ்ச உதவிகளைச் செய்யக் கூடாதா? வயதானா ஒண்ணுக்கு பிரயோசனம் இல்லாம இருக்கணுமா என்ன?

ஏன் அப்படி? பிடிவாதமா காபிலேந்து, எல்லாத்தையும் கைல கொண்டு வந்து கொடுத்தாத்தான் சாப்பிடுவேன்னு யாராவது அடம் பிடிப்பாங்களா? ஏன் அப்படி? எம் பெண்டாட்டி வீட்டுலேயா உக்காந்துகிட்டு இருக்கா. அவளால முடிஞ்ச வேலைகளை செய்துட்டு தானே போறா. நாம எல்லோரும் கூட கொஞ்சம் ஹெல்ப் பண்ணினா குறைந்தா போயிடுவோம். சுயநலமா இருக்கக் கூடாதுப்பா.

"அந்தக் குழந்தை பசியால துடிச்சிகிட்டு இருக்கு. முன்னே எல்லாம் ஓட்டல்லே போய் சாப்பாடு வாங்கிக் கொடுப்பீங்க. இப்ப என்னாச்சு? காசு செலவழிக்க மனசு வரலியா? அந்த காசை வச்சிகிட்டு என்ன செய்யப் போறீங்க? போகும்போது, எடுத்துட்டுப் போகப் போறீங்களா? நம்ப போனாலும், மத்தவங்ககிட்டேந்து, நல்ல உணர்வை எடுத்துகிட்டு போகணும். இப்படியா?"

மகன் பேச, பேச கண்களில் கண்ணீர் சொட்ட, தாங்க முடியாமல் ஓவென்று அழுகிறார்.

"எனக்கு கண்ணு தெரியலைப்பா" சொல்லி விட்டு கதறி அழ, வாயடைத்துப் போய் அப்பாவையே பார்க்கிறான் மகன்.





# 5

"என்ன சொல்லறீங்க?" ஒருவித பயத்துடன் குற்ற உணர்ச்சியுடன் மகன் கேட்க,

"கண் தெரியாததுனாலே, திருப்பியும் அடிபட்டு, ஆஸ்பத்திரிக்குப் போனா எல்லோருக்கும் கஷ்டமாச் சேன்னு, காபியைக் கூட படுக்கையிலே வாங்கிக்கறேன்" சிறு குழந்தை போல் அழுது கொண்டே சொல்கிறார்.

"கொஞ்ச நாளா கண்ணு மங்கலா இருந்துதுப்பா. அப்புறம் ரொம்பவே தெரியாமப் போச்சு. உன் முகமே ஒரு குத்து மதிப்பாதான் தெரியுத். நடக்கும்போதுகூட இடிச்சிக்கறேன்பா, "சொல்லும் போதே விக்கி, விக்கி அழுகிறார்.

"கண்ணாடியை மாத்தணுமா கேடராக்டா ஒண்ணும் தெரியலை. ஆனா கேடராக்டா இருக்காதுன்னு நினைக்கிறேன். இந்தக் கண்ணாடியிலே கொஞ்சம் மங்கலாத்தான் தெரியுது. கண்ணாடியை மாத்திட்டா சரியாயிடும்னு நினைக்கிறேன். எனக்கு வேலை செய்யக் கூடாதுன்னு இல்லேப்பா. காலையிலே புவனா ஆபீஸுக்குப் போன பிறகு நான்தானே சமையல் அறையை சுத்தம் செய்து, இறைஞ்சு கிடக்கறதை சரி செய்து, வாஷிங் மிஷின்லே இருக்கற துணியை காயப்போட்டு, சில நாட்கள் புவனா போட மறந்து போன மிஷினையும் போட்டு எல்லாம் செஞ்சேனே."

Vennila

அவர் சொல்லச் சொல்ல பிள்ளைக்கு பசியோ என்னவோ சுருக்கென்று கோபம் வந்தது.

"என்னப்பா இப்படிப் பேசறீங்க? உங்க பையனுக்கு செஞ்சீங்க. செஞ்சதை சொல்லிக் காண்பிப்பீங்களா?" பையன் இறைய.

"ஏம்ப்பா இப்படிப் பேசறே? என்னால முடிஞ்சா கட்டாயம் செய்வேங்கறதுக்குதான் சொன்னேன். புரிஞ்சுக்க. உனக்கு செஞ்சேன்னு சொல்லி காண்பிக்கறதுக்காக சொல்லலைப்பா." தழு தழுத்த குரலில் அவர் சொல்ல, பிள்ளை சற்று கோபம் அடங்கியவனாக இறுகிப் போய் இருந்தான்.

"புரிஞ்சுக்கப்பா. எனக்கும் பாரமா இருக்கப் பிடிக்கலைப்பா." சொல்லிவிட்டு ஓவென்று அழுகிறார். சற்று கடுகடுத்த முகத்துடன் இருந்தவன் அதிர்ந்து போகிறான்.

"அப்பா என்னப்பா இது? எதுக்கு அழறீங்க? நாளைக்கு டாக்டர் கிட்டே போகலாம். கட்டாயம் என்ன செய்யணுமோ செய்துக்கலாம். சியர் அப்" என்றான்.

"சாப்பிட்டீங்களா?" மகன் கேட்க, இல்லையென்று தலை ஆட்டியவர், "முதல்லே பிரதீஷுக்கு ஏதாவது கொடுப்பா. குழந்தை பாவம். பசி, பசின்னு துடிச்சுப் போச்சு."

தன் பிள்ளை பட்டினியாக இருக்கிறான் என்றதுமே வில்லில் இருந்து புறப்பட்ட அம்பாகக் கிளம்புகிறான் பாஸ்கர்.

"கொஞ்சம் இருங்க. இதோ வந்துடறேன்."

சிறிது நேரத்தில் கை நிறைய பார்சலுடன் வருகிறான். தூங்கும் குழந்தையைத் தட்டி எழுப்பி இரண்டு பூரிகளை



ஊட்டுகிறான். அப்பா தயங்கி நிற்பதைப் பார்த்து மனது என்னவோ செய்ய,

"அப்பா சாப்பிடுங்க" என்று ஒரு பார்சலைத் தர, பசியோடு பிரித்து சாப்பிடுகிறார்.

"அப்பா இது போதுமா... இன்னும் கொஞ்சம் சாப்பிட றீங்களா?"

"போதும்பா..." என்றவர்.

"நீ சாப்பிட்டியா?" கேட்கிறார்.

"இல்லைப்பா நான் கொஞ்சம் முகம் கழுவிட்டு வேற டிரஸ் சேன்ஜ் பண்ணிட்டு வரேன்."

தனக்கும், மனைவிக்கும் என்று வாங்கி வந்த பார்சல்களையும் மேசை மேல் வைத்தான். குளிக்கும் அறைக்குச் சென்று பச்சைத் தண்ணீரில் முகத்தை கழுவிக் கொண்டு, பழைய உடைகளைக் கழற்றி, வேறு உடை மாற்றி, துடைக்கும் துண்டால் முகத்தை துடைத்தவாறே வர, அப்பா ஹாலில் அமர்ந்தவாறே பேரனின் தலையைத் தடவியவாறே கண்ணீரை துடைத்துக் கொள்வதைப் பார்த்ததும் பாஸ்கரனின் மனம் உருகிப் போனது.

"என்னாச்சுப்பா. ரொம்ப சாரி உங்க பிராப்ளத்தை நான் தெரிஞ்சுக்கலை. கட்டாயம் நாளைக்கு டாக்டரைப் பார்த்திடுவோம். புதுக் கண்ணாடிக்கு ஏற்பாடு பண்ணிடலாம். டோன்ட் வொரி" அவன் சொல்ல,

"தேங்க்ஸ்பா."

"என்னப்பா இதெல்லாம்? போய் ரெஸ்ட் எடுங்க" என்றவன், அவர் தடுமாறாமல் இருக்க கை கொடுத்து அழைத்துப் போய் படுக்கையை த[illegible]

Vennila

தலையணையை பாந்தமாகப் போட்டு "படுத்துக்கங்க" என்கிறான்.

பையனின் கைகளை சட்டென்று உணர்ச்சி பெருக்கில் பிடித்து கண்களில் ஒற்றிக் கொள்ள,

"என்னப்பா இதெல்லாம்?"

"ரொம்ப தேங்க்ஸ்பா. நான் வேலைல இருந்தவரைக்கும் உன்னை பிள்ளையா இல்லை மனுஷனாகூட நினைச்சதில்லை. தேங்க்ஸ்பா."

அம்மா போட்டோவில் இருந்து சந்தோஷமாக சிரிப்பது போல் தோன்ற மனம் புல்லரித்துப் போனது.

"அப்பாவுக்கு ஒன்னும் தெரியாதுடா. நான் இல்லேன்னாலும் கடைசி காலத்தில் அவரை விட்டுடாதே."

இன்று அம்மா பார்த்தால் எத்தனை சந்தோஷப்படுவாள். அம்மா எங்கிருந்தாவது பார்த்துக் கொண்டு தான் இருப்பாள். மனது இளகிப் போனது. மெதுவாக எழுந்து சாப்பிட ஆரம்பித்தான். மனைவி இன்னும் வரவில்லை. லேசாக எரிச்சல் வந்தது. இப்போது கொஞ்ச நாட்களாகவே மனைவி லேட்டாகத்தான் வருகிறாள். ஆறு மாதத்திற்கு முன்பு பிரமோஷன் வந்ததிலிருந்து இந்த கதை தான். முன்பெல்லாம் மாலை ஐந்தரை ஆறரைக்குள் வந்தவள் இப்போதெல்லாம் ஏழரை, எட்டரை என்று ஆக்குகிறாள். இருபதாயிரம் கொண்டு வருகிறாள்.

தனக்கே சம்பளம் அதிகம். பேசாமல் வீட்டில் இருந்து வீட்டை கவனித்துக் கொள்ளலாம். அவனுக்கே மாதம் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு இலட்சம் வருகிறது. பிடிப்பு எல்லாம் போக கையில் எண்பது வரும் போதாதா?

ஏதோ ஆதி காலத்தில் ஒருவர் சம்பளத்தில் குடும்பம் நடத்துவது கஷ்டம் என்று தான் வேலைக்குப் போகும்



பெண்ணைப் பார்த்து திருமணமே செய்து கொண்டான். அதுவே பெரும் வினையாகி விட்டது. வேலை, வேலை என்று ஓடுவதில் அப்பாவையும் தன்னையும் மிஞ்சி விட்டாள்.

வீட்டில் எந்த வேலையும் செய்ததில்லை. காலையில் சற்று நேரம் கழித்து, அவசரம், அவசரமாக வேலைக்குக் கிளம்பவே சரியாக இருக்கும். அம்மா இருக்கும் வரை, எல்லாவற்றையும் அம்மாவே பார்த்துக் கொண்டாள். பிள்ளையைப் பெற்றாளே தவிர வளர்த்ததெல்லாம் அம்மா தான். அம்மா போன பிறகு தான் அடுப்படிக்கே வந்தாள். முக்கால்வாசி நாள் காலை உணவே பிரட் டோஸ்ட் தான். மதியம் ஏதோ ஒரு குழம்பு சாதம், பொரியல் என்று சமைத்து, எல்லோருக்கும் டப்பாவில் அடைத்து, அப்பாவிற்கு வைத்து விட்டு வருவாள்.

பல நாட்கள் மோர் சாதம், ஊறுகாய் தான். மாலை வந்ததுமே ஏதேனும் ரசம், பொரியல் என்று ஏதேனும் செய்வாள், அப்பா நன்றாக இருந்தவரை புவனா வர நேரமாகி விட்டால் அப்பா சாதத்தை வைத்து விடுவார். அப்பளத்தை பொறித்து விடுவார். தக்காளி ரசம் செய்து விடுவார்.

ஆனால் இப்போது முடியாத நிலையில், அப்பா ஒன்றும் செய்யாமல் இருக்க, பாஸ்கரன் கூட மாட செய்வான். யோசித்துப் பார்த்ததில் பணத்திற்காக தாங்கள் எத்தனை மடத்தனமான வாழ்க்கை வாழ்கிறோம் என்று தோன்றியது. தாங்க வேண்டிய வயதில் பிள்ளையையும், தந்தையையும் தவிக்க விடுவதில் என்ன லாபம்? இன்று பெண்டாட்டி வந்ததும் கண்டிப்பாக சொல்லிவிட வேண்டியது தான். தான் பிள்ளையை கவனிக்கா விட்டால்

Vennila

பிற்காலத்தில் அவன் தன்னை கவனிப்பானா என்ன? என்னென்னவோ எண்ணுகிறான். தன் தந்தையைத் தான் கவனிக்கவில்லையா? இப்படித் தோன்றியதும் மனமே சாடியது.

அம்மா தான் அப்பாவாகவும் இருந்தாளே - அவள் தன்னை எப்படி எல்லாம் கவனித்துக் கொண்டாள். தன் உணர்வுகள் எல்லாமே அம்மாவுக்குத் தெரியும். மருமகள் வந்தும் பாரம் அனைத்தையும் தானே சுமந்தவள். சுமையின் பாரத்தைப் பற்றி தப்பித் தவறிக்கூட முணு முணுக்காதவள் சாப்பிட்டு விட்டு, இப்படி ஏதேதோ யோசித்துக் கொண்டிருந்தான் - இன்று தீர்மானமாக பெண்டாட்டியிடம் வேலையை விட்டு விடும்படிச் சொல்லத்தான் வேண்டும். மனதில் நிச்சயம் செய்த வாறே தூங்கும் மகனை படுக்கை அறையில் கொண்டு போய் படுக்க வைத்து விட்டு வரப் போகும் மனைவிக் காக காத்து இருக்க ஆரம்பித்தான் பாஸ்கரன்.

## 6



அலுவலகத்தில் புவனாவிற்கு வேலை நெட்டி முறித்தது. பிரமோஷன் வந்த நாளிலிருந்து இதே கதை தான். இந்த ஆறு மாதமாக மதியம் சாப்பிடக்கூட நேரம் இருப்பதில்லை. கொண்டு வந்த சாப்பாட்டை வாயில் திணித்தவாறே வேலை செய்ய ஓடுவாள். ஒரு இரண்டா யிரம் அதிகம் வாங்குவதும் போதும். அவள் படும் பாடும் போதும். இன்று வேலை முடிந்து டிபன் பாக்ஸை



திறந்தால் வெறும் தயிர் சாதம்தான். பாதி நாள் வெறும் தயிர் சாதம் ஊறுகாய்தான். இதை செய்வதற்கே நேரம் இருப்பதில்லை. ஒருவாய் வாயில் போட்டவள், உப்பு இல்லாமல் இருப்பதைப் பார்த்து முகம் சுளிக்கிறாள். ஊறுகாயும் கடை ஊறுகாய்தான்.

லேசான வாடை வேறு வந்து கொண்டிருக்க, சாப்பிடவே பிடிக்கலை. மெதுவாக கேண்டீனுக்கு எழுந்து போனாள். கிட்டத்தட்ட ஐந்து நாட்களாக கேண்டீனுக்குத் தான் போய்க் கொண்டிருக்கிறாள். தான் செய்யும் சாப்பாடு வாயில் வைக்கவே முடியவில்லை. ஏனோ மாமியாரின் நினைவு வந்தது.

காலையில் எப்போது எழுந்து வருவாளோ. தினமும் இட்லி, தோசை, பூரி, சப்பாத்தி, கிச்சடி, உப்புமா என்று வித விதமான டிபன், சட்னி, சாம்பாரோடு இருக்கும். மதியம் சாம்பார் சாதம், எலுமிச்சை சாதம், புளி சாதம், வெஜிடபிள் ரைஸ், பிரைட் ரைஸ் என்று தினம் தினம் வித்தியாசமாக செய்து கொண்டு இருப்பாள். வெறும் தயிர் சாதம் பிசைந்து தந்தால் கூட, அது கூட அருமையாக இருக்கும். மாங்காய், கேரட், இஞ்சி, திராட்சை அல்லது உலர்ந்த திராட்சை சேர்த்து செய்து அனுப்புவாள். ஊறுகாய் இல்லாமலேயே தயிர் சாதம் சாப்பிட மிக மிக அருமையாக இருக்கும். புவனா பெருமூச்செறிகிறாள். இந்த மாமியார் உயிரோடு இருந்திருக்கக் கூடாதா? ஒரு நாள் கூடத் தலைவலி என்று படுத்தவளில்லை.

அன்று அலுவலகத்திலிருந்து வந்தபின் எல்லோருக் கும் சாப்பாடு போட்டு விட்டு நெஞ்சை நீவிக் கொண் டவள். ஒரு நிமிடத்தில் போய் சேர்ந்தாள். டாக்டர் 'திடீர் ஹார்ட் அட்டேக்' என்று சொன்னார். யாரும் நம்ப முடியாமல் போய் சேர்ந்தாள் மாமியார்.

Vennila

மாமனார் அந்தக் காலத்தில் பிரயோசனப்படாமல் தான் இருந்தாராம். இப்போதும் அதே இலட்சணம்தான். பணம் வங்கியில் நிறைய போட்டு வைத்திருக்கிறாராம். பென்ஷன் வேறு வருகிறது. பணத்தை தங்களிடம் கேட்பதில்லையே தவிர, அவரால் என்ன பிரயோசனம்? இருக்க, இருக்க தன்னை சிறு குழந்தையாக பாவித்துக் கொண்டு ... சே! அது போல் தொலைந்து போய் இருக்கக் கூடாதா? மெதுவாக எழுந்தவள், சாப்பிட காண்டீனுக்குச் சென்ற போது பக்கத்து சீட்டு சரோஜாவும் அவசரம், அவசரமாக ஓடி வருகிறாள்.

''காண்டீனுக்குத் தானே போறே. நானும் வரேன். இன்னிக்கு சாப்பாடே செய்யலை. லேட்டாயிடுச்சுன்னு எல்லோரையும் ஓட்டல்லயே சாப்பிடச் சொல்லிட்டேன்.''

''உம் பையன்?''

''அவனுக்கும் பைசா கொடுத்துட்டு வந்தாச்சு. ஆமா நீயும் இன்னிக்கு சமைக்கலையா?''

''ம்... தினம் கொண்டு வர தயிர் சோறுதான். ஊறுகாய் வேறு கெட்டுக் கிடக்குது.''

''உங்க வீட்டுக்காரருக்கும் அதானா?''

''வேற யாருக்கு நேரம் இருக்கு. காலையிலே லோல் பட்டு, கிளம்பறதுக்குள்ளே உயிர் போயிடுது. எம்புருஷன் அட்ஜஸ்டிங் டைப் தான். பையனுக்கும் பிரட், பிஸ்கட் போட்டா கூட போதும்.

மாமனாருன்னு ஒரு கிழம் வீட்டுலே இருக்கே. என்ன செய்யறது? மாமியாராவது உதவியா இருந்தாங்க. மாமனார் வெறும் தண்டம். போன தடவையே உடம்புன்னு படுத்துகிட்டு எக்கச்சக்க செலவை வச்சிடுச்சி.''



''அடி போடி. இந்தக் காலத்துலே யார் மாமனார் மாமியாரோடு இருக்காங்க.''

''அது என் புருஷனுக்குத் தெரியலையே. பெய்ட் ஹோம்லே விட்டுடுங்கன்னு சொன்னேன். பளார்னு அறைஞ்சிட்டார்.''

''என்னது அடிச்சிட்டாரா? உம் புருஷன் என்ன முட்டாளா? அவுங்க. அவுங்க பெத்தவங்களை வீதியிலே விட்டுடறாங்க. சொத்து இல்லாதவங்களுக்கு எப்போதுமே ஒன்னும் இல்லே. சொத்து இருக்கறவங்களுக்கு இன்னும் கஷ்டம். அவுங்க சொத்தை எல்லாம் எழுதி வாங்கிகிட்டு, அவுங்களை கொடுமைப் படுத்தி நிர்க்கதியா ஆக்கிடறாங்க. என்னோட பிரண்ட் வீட்டுலே அவ புருஷன்னா அவுங்க மாமியாருக்கு உயிர். கணக்கு, வழக்கு எல்லாத்தையும் பிள்ளைதான் கவனிச்சுகிட்டு இருப்பாங்க. எல்லாத்தையும் பிள்ளைகிட்டே கொடுத்திட்டாங்க. தான் இருக்கற வீட்டையும் அவனுக்கு எழுதி வச்சிட்டாங்க. அவுங்களுக்கு, மத்த பிள்ளை, பொண்ணு எல்லாமே இருக்கு. ஆனா கூட இருந்த இந்த பிள்ளை மேலே கொள்ளை ஆசை வச்சு எல்லாத்தையும் மொத்தமாக அவனுக்கே கொடுத்துட்டாங்க. கீழே விழுந்து அவுங்களுக்கு கால் ஒடிஞ்சு படுத்த படுக்கையாயிட்டாங்க. அவுங்களுக்கு வயத்துக்கு சாப்பாடு கூடத் தராம, பட்டினி போட்டே கொன்னுட்டாங்க. இதுக்கு என்ன சொல்லறே? அம்மாவை பட்டினி போட்டு கொன்னுட்டோமேன்னு கொஞ்சம்கூட மன உறுத்தல் இல்லாம சொத்தை அனுபவிச்சுகிட்டு இருக்கான் அந்த ஆள்.''

''அப்படியா?''

''என் பிரண்ட் கிட்டே ஏதோ ஒரு நேரத்துலே உளறிட்டா. சொத்தை மட்டும் முதல்லே எழுதிடே

Vennila

தரக்கூடாதுன்னு சொன்னா உலகமே இப்படித்தான் ஆயிட்டு இருக்கு. யாரு புத்திசாலித்தனமா வாழறாங்களோ, அவுங்கதான் புண்ணியம் செய்தவங்க."

"உம் பிரண்டோட புருஷன் மட்டும் நினைச்சிருந்தா பிராட் பண்ணியிருக்க முடியுமா? அவுங்க பெண்டாட்டி, பிள்ளை குட்டி எல்லாமே சப்போர்ட் பண்ணினா தானே சுருட்ட முடியும். எங்க வீட்டிலே அப்படி இல்லே. பெய்ட் ஹோம் வசதியா இருக்கட்டும். கொண்டு போய் விடுங்கன்னு சொன்னதுக்கே, அடிச்சு, அசிங்கப் படுத்தி... இதுவரைக்கும் எங்க வீட்டுக்காரர் என்னை அடிச்சதே இல்லை. அந்தக் கிழவனுக்கெதிரில் ரொம்ப அசிங்கமாப் போச்சு. அந்தக் கிழவனுக்கு உடம்பு சரியில்லாமே போயிடுச்சு. ஆஸ்பத்திரிக்குப் போய் சரியாக்கி கொண்டு வந்து விட்டாச்சு. நல்லா இருந்த போதெல்லாம் வீட்டுலே பாத்திரம் தேய்த்து வைக்கும். வீட்டையும் கொஞ்சம் சுத்தப்படுத்தும். ஆஸ்பிடலுக்குப் போயிட்டு வந்தப்புறம் ஒண்ணுமே இல்லை. காபியைக் கூட படுக்கையிலே கொண்டு போய் கொடுக்க வேண்டியிருக்கு.

எனக்கு இது தேவையா? இப்ப எந்த வேலையும் செய்ய மாட்டேங்குது. எதுவுமே எனக்குப் பிடிக்கலை." புவனா புலம்ப, புலம்ப,

"இத பாரு பாவ, புண்ணியம் பார்த்தியானா எதுவும் நடக்காது. நான் சொல்றதைக் கேளு. கொஞ்சம் புத்திசாலித்தனமா யோசி. உன் ஹஸ்பண்ட் இருக்கும்போது எதையும் பேசாதே. அவர் இல்லாதபோது உங்க மாமனாரை லெப்ட் அண்ட் ரைட் வாங்கு. ஒரு நாலு நாள் சாடை மாடையாக வேணாம். நேரடியாகவே பேசு, கதறிகிட்டு ஓடுவாரு. உம்புருஷன் கிட்டே சொல்லாம



கூட போய் சேர்ந்திடுவாரு. அதுக்கான வேலையைப் பாரு. இந்த பாவ, புண்ணியம் எல்லாத்தையும் விட்டு ஒழி, பேசறது மட்டுமல்ல. கொஞ்சம், கொஞ்சமா சாப்பாட்டை குறை. நல்லா பசிச்சுத் துடிக்கட்டும். தானா வீட்டை விட்டுக் கிளம்பிடுவாங்களா இல்லையா பாரு."

தோழி சொன்னது சரி என்று தோன்ற தலையை ஆட்டுகிறாள். அதன் முதல் கட்டமாகத்தான் இன்று வீட்டிற்கு உடனே போகாமல் தவிர்க்கிறாள். ஏழு மணியோடு வேலை முடிந்தும் வீட்டிற்குக் கிளம்பாமல், கேண்டினில் போய் சாப்பிட்டு விட்டு, தோழியுடன் கடற்கரைக்குச் சென்று சிறிது நேரம் இருந்து விட்டு எட்டரை மணிக்குத்தான் மெதுவாகக் கிளம்புகிறாள். கணவன் ஏதாவது கேட்டுப்பார்க்கட்டும். இனிமேல் ஆபீஸ் வேலை முடிந்து இரவு பத்து மணிக்குத்தான் தான் வருவேன் என்று சொல்லிவிட வேண்டும். மனதிற்குள் கறுவிக் கொள்கிறாள். கூடவே பட்டினியோட திண்டாடப் போவது மாமனார் மட்டுமல்ல என்பதை மறந்து போகிறாள்.

## 7



அன்று வீடு வந்து சேர்ந்தபோது மணி பத்தைத் தொட்டது. மாமனாரும், பிள்ளையும் தூங்கிவிட, பாஸ்கரன் மட்டும் குட்டிப் போட்ட பூனையாக உலாவிக் கொண்டிருந்தான்.

'ஏன் இன்னும் இவள் வரவில்லை. செல்லுக்கு பல முறை தொடர்பு கொண்டும் பிரயோசனமில்லை

Vennila

செல்லை அணைத்து வைத்திருக்கிறாள் போலிருக்கிறது. எரிச்சல் வந்தது. ஏதாவது ஆபத்தில் மாட்டியிருப்பாளா? ஏதேனும் ஆக்ஸிடெண்ட் ஆகியிருக்குமா?' இப்படி நினைத்ததும் மனம் நடுங்கியது.

"சே அப்படியெல்லாம் ஆகியிருக்காது. நடுக்கத்தை மறைக்க டி.வி.யைப் போட்டுக் கொண்டு அமர்ந்திருந் தான். கொஞ்சம் பாட்டைக் கேட்டான். பின் ஏதோ கொஞ்சம் சீரியல் பார்த்தான். பிறகு நியூஸுக்குத் தாவினான். மணி பத்தை நெருங்கியபோது பயம் வந்தது. அதற்கு மேல் இருப்பு கொள்ளாமல் டி.வி.யை அணைத்து விட்டு வெளியே வருகிறான். வாசலில் இப்படியும், அப்படியும் உலாவுகிறான். சரியாக பத்து மணிக்கு பெண்டாட்டியைப் பார்த்ததும் தான் உயிரே வந்தது.

"என்னம்மா ஆச்சு? ஏன் இத்தனை லேட்? சாப்பிட் டியா?" சற்று ஆதங்கத்துடன் அவன் கேட்க, ஒரு நிமிடம் அவனையே பார்த்தவள், அடுத்த நிமிடம் மாமனார் எதிரில் தன்னை அடித்தது நினைவு வர, மனதைக் கல்லாக்கிக் கொண்டு, முகத்தையும் தூக்கிக் கொண்டு செல்கிறாள்.

"என்னாச்சும்மா?"

"என்னாகணும்? எனக்கு பிரமோஷன் வந்திடுச்சுன்னு உங்களுக்குத் தெரியாதா? இப்ப வேலை பளு ரொம்ப ஜாஸ்தியாகப் போயிடுச்சு. இனிமேல் என்னால் இந்த டைமுக்குத்தான் வர முடியும். அதான் ஒண்ணும் புரியலை. பத்து மணிக்கு வந்து என்ன சமையல் பண்ண முடியும்? அதான் யோசனையா இருக்கு."

"நானும் அதைப் பத்தி தாம்மா உங்கிட்டே பேச ணும்னு நினைச்சேன். இப்ப நான் வாங்கற சம்பளமே



நமக்கு தாராளமா போதும்மா. நீ பேசாம வேலையை ரிசைன் பண்ணிடு. இல்லேன்னா வாலன்டரி ரிடையர் மெண்ட் வாங்கிடு."

கணவன் சொல்ல, சொல்ல கணவனையே உறுத்துப் பார்க்கிறாள்.

"என்னம்மா நான் பேசி கிட்டே இருக்கேன். நீ பதிலே சொல்லலை."

"எனக்குப் புரியலைங்க. நான் எதுக்கு வேலையை விடணும். நானும் எத்தனையோ கஷ்டப்பட்டுப் படிச்சு ரொம்ப உழைச்சு தானே இந்த போஸ்ட்டுக்கு வந்திருக் கேன். இப்ப போய் ரிசைன் பண்ணனும்னா என்ன அர்த்தம்?"

"தப்பா நினைக்காதேம்மா. அப்பா வயசானவர். உடம்பு சரியில்லாதவர். அவரைப் பார்த்துக்க வேணாமா? அப் புறம் நம்ம குழந்தை அது பாவம் இல்லையா? இன்னிக்கு பசி பசின்னு துடிச்சிட்டான்."

"ஏன் உங்கப்பாவுக்கு என்ன ஆச்சு? ஒரு உதவியும் செய்ய மாட்டாரா? குழந்தைக்கு ஏதேனும் வாங்கிக் கொடுத்திருக்கக் கூடாதா?"

"புரியாம பேசாதேம்மா. யாரைப் பத்தியும் தப்பா நினைச்சா தப்பாவேதான் யோசிக்கத் தோணும். அப்பா பாவம் கண்ணு தெரியலை. உனக்கு உதவி செய்யணும்னு வேலை செய்யப்போய் முட்டிகிட்டு விழுந்தவுடனே பயம் வந்திடுச்சு. இப்ப அவருக்கு எல்லாமே மங்கலாகத் தான் தெரியுது. எல்லாத்தையும் தடவித் தடவி பார்த்து தான் நடக்கிறார். அதுக்கே ரொம்பக் கஷ்டப்படறார். நான் புரியாம அவரை கன்னா பின்னான்னு திட்டிட்டேன்.

Vennila

அப்புறம் அழுதுகிட்டே அவர் சொன்னபோது தான் புரிஞ்சுது. அப்பா பாவம்மா. உடம்பு சரியில்லை. இல்லேன்னா அப்பா எத்தனையோ ஹெல்புல்லா இருப் பாரு.''

அவள் முகம் கடு கடுவென்று ஆனது.

''நீங்க என்ன சொல்ல வர்றீங்க?''

''இல்லேம்மா... நீ கொஞ்ச நாள் வீட்டிலேயே இருந்தா...'' அவன் ஆரம்பிக்க.

''சான்ஸே இல்லே. இத பாருங்க. இப்ப வேலையை விட்டா என் ஸீனியாரிட்டி போயிடும். தவிரவும் இப்ப தான் எனக்கு பிரமோஷன் கிடைச்சிருக்கு. இப்ப போய் எப்படி? முடியாது. நீங்க நைட் சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணிடுங்க. நீங்கதான் ஏழு மணிக்கு வந்துடுவீங்க இல்லே. நீங்க நினைச்சா இன்னும் சீக்கிரம் வரலாமே. தினம் ஷெட்டில் காக் ஆடிட்டு தானே வர்றீங்க? அதைக் கொஞ்ச நாள் கட் பண்ணிடுங்க. நான் கொஞ்ச நாள் ஸ்டெடி ஆகறேன். அப்புறம் பார்க்கலாம்.''

பாஸ்கரன் பெருமூச்சு விடுகிறான். 'ஒன்றும் செய்ய முடியாது. இந்த கால பெண்களை ஒன்றுமே செய்ய முடியாது. எல்லாம் பெண்களுக்கு பொருளாதார சுதந்திரம் கொடுத்த விளைவு. 'ஒரு நிமிடத்தில் மனதில் மருகி னான். 'எதுவும் செய்ய முடியாது. எது செய்தாலும் தவறாகத் தோன்றும். சரி முதலில் பிரச்சனையைத் தீர்க்க பார்ப்போம்.'

''சரிம்மா'' என்று பிரச்சனையை அதோடு விடுகிறாள்.

அன்று முதல் தன் வேலையை ஆரம்பிக்கிறாள் மரு மகள். காலை காபியைக் கொண்டு போய் டொக்கென்று



வைக்கிறாள். அவரிடம் எந்தப் பேச்சும் வைத்துக் கொள்ள வில்லை. காலையில் குழம்பு, பொரியல் செய்தவள் அதை டப்பாவில் மூவருக்கும் போட்டு அடைத்தவள், அவருக்கு வெறும் சோற்றினை மட்டும் வைத்தாள். இட் லியை தனக்கும், புருஷனுக்கும் போட்டு விட்டு, மாம னாரின் அறையில் காய்ந்த பிரட் இரண்டை வைத்து விட்டு வந்தாள்.

'நான் கொடுக்கும் துன்பம் தாங்க முடியாமல் சொல் லிக்கொள்ளாமல் ஓட வேண்டும்.' முறுவலித்தவள் தயிர், பால் எதையும் விட்டு வைக்கவில்லை. எல்லாவற்றையும் எடுத்து அலமாரியில் வைத்து பூட்டிவிட்டுக் கிளம்பி விடுகிறாள்.

நான்கு நாட்கள் சென்றது. காலையில் வெந்நீர் காபி. மதியம் வெறும் சோறு. முதல் இரண்டு நாட்களை விட அளவு கொஞ்சம், கொஞ்சமாக குறைய அவருக்குப் புரிந்தது. அழுகை வந்தது. பையன் நாளைக்கே கண்ணை சோதிக்க அழைத்துச் செல்கிறேன் என்றவன் இரவு ஏழு மணிக்கு வந்து, தினமும் ஓட்டலில் சாப்பாடு எடுத்து வந்து பிள்ளைக்கும், தனக்கும் கொடுக்க காலையில் இருந்து ஒட்ட, ஒட்ட இருப்பவர் இரவு தான் சற்று நன்றாகச் சாப்பிட்டார். 'அப்பா பறந்து பறந்து சாப்பிடு கிறாரே' பாவம் மூப்பு, பசி, பிணி என்பார்களே அது போலும்.' நினைத்துக் கொண்டான் பிள்ளை. பரிதாபப் பட்டு இன்னும் சற்று கூடவே வாங்கி வந்தான்.

ஓட்டலுக்குச் சென்று சாப்பாடு வாங்கி இதை கவ னிக்கவே அவனுக்கு நேரம் சரியாக இருக்க, இவரை கண் டாக்டரிடம் கூப்பிட்டுக் கொண்டு போக இயலவே இல்லை.

Vennila

பின்னும் நான்கு நாட்கள் சென்றன. புவனா கிழவருக்கு கொடுக்கும் சாப்பாட்டை குறைத்துக் கொண்டே வந்தாள். முதலில் சாப்பாட்டை அரை பாத்திரம் வைத்தவள் கொஞ்சம், கொஞ்சமாகக் குறைத்து கால் பாத்திரம் வந்தாள்.

அன்று கிழவர் தத்தி, தத்தி வந்தவர் ஜன்னலின் பக்கம் வந்து நின்று பக்கத்து வீட்டு வேலைக்காரியை அழைத்தார்.

"என்ன சாமி?" அவள் கேட்கவும்,

"கொஞ்சம் ஊறுகாய் வாங்கிட்டு வர்றியா?" அவர் கேட்க, அவள் ஆச்சரியமாகப் பார்க்க,

"இல்லேம்மா காரமா சாப்பிடணும்னு நாக்கு கேக்குது. அதான்" என்கிறார்.

அவள் ஒரு ரூபாய் ஊறுகாய் என்று ஐந்து பாக்கெட்டுகளை வாங்கி வர, அதை வைத்து சாதத்தில் பிசைந்து சாப்பிடுகிறார். இன்றும் வெறும் சோறல்லவா வைத்து விட்டுப் போயிருக்கிறாள்.

அதற்கு அடுத்த வாரம் சாப்பாடு இல்லாமல் வெறும் பாத்திரம் மட்டும் இருந்தது. ஏதேனும் தட்டுப்படுகிறதா என்று துழாவி, துழாவிப் பார்த்தவர், தவழ்ந்து, தவழ்ந்து சமையலறையை நோக்கிச் செல்கிறார்.

அங்கே ஒன்றுமே இல்லை. பால், தயிர் கூட அலமாரியில் வைத்து மூடப்பட்டு இருந்தது. பிரிஜ்ஜும் பூட்டப்பட்டு இருந்தது. சாவி எங்கே? அதற்கு மேல் பசி பொறுக்க முடியாமல் தவழ்ந்து போய், வாயிற் பக்கம் கதவைத் திறக்கிறார். சற்று சத்தமாகக் குரல் கொடுக்கிறார். எல்லாம் இன்று கையில் ஒரு ரூபாய் கூட இல்லை. எல்லாம் வங்கியில் இருக்கிறது. பென்ஷன் கூட வங்கிக்கு நேரே



வந்து விடும். பிள்ளைக்கு எப்போது விடுமுறையோ அப்போதுதான் பணத்தை எடுத்து வரச் சொல்ல முடியும். சிறு குடல் பெருங்குடலைத் தின்றது. வயிற்றுப் பசி தாள முடியாமல் துடித்து விடுகிறார். வழக்கம்போல் பக்கத்து வீட்டு வேலைக்காரியை கூப்பிட,

"என்னங்கய்யா மறுபடியும் காரம் சாப்பிடணுமா? ஊறுகாய் வேணுங்களா? பேசாம முப்பத்து அஞ்சு ரூபா கொடு. ஒரு சின்ன பாட்டில் ஊறுகாய் வாங்கிட்டு வந்துடறேன். நிம்மதியா சாப்பிடு..." அவள் சொல்ல, அவர் கண்கள் கலங்க விக்கி, விக்கி சிறு குழந்தை போல் அழுகிறார்.

"என்னங்கய்யா? ஏன் அழறீங்க?"

"ரொம்பப் பசிக்குது. என்கிட்டே இப்ப பணம் இல்லே. பாங்கிலே போய் தான் எடுத்துகிட்டு வரணும். உங்கிட்டே ஏதேனும் சாப்பாடு இருக்குமா? ரொம்பப் பசிக்குது. பழைய சோறா இருந்தாலும் பரவாயில்லை. உப்பு போட்டு கொடுத்திடேன். நான் அப்புறம் எல்லாத்துக்கும் சேர்த்து துட்டு கொடுத்திடறேன்."

அவர் குழந்தை போல் அழுது கொண்டே கேட்க வேலைக்காரி மட்டுமல்ல, குழந்தையையும், அப்பாவையும் கவனித்துக் கொள்ள ஆளை ஏற்பாடு செய்ய வந்த பாஸ்கரனும் திடுக்கிட்டான்.

## 8



"என்ன பேசுகிறார் அப்பா" திகைக்கிறான் மகன்.

Vennila

''என்ன சாமி மருமக சோறு வைக்க மறந்துடுச்சா?'' வேலைக்காரி கேட்க,

''தெரியலைம்மா. கொஞ்ச நாளா என்ன கோபமோ தெரியலை. நான் வேலை செய்யறதில்லைன்னு கோபம் நினைக்கிறேன். என்னால முடிஞ்சுதுன்னா நான் செய்யாம இருப்பேனா?''

''ஏன் சாமி. நான்தான் பார்த்துகிட்டே இருக்கேனே. உன்னை எனக்குத் தெரியாதா? எம்புட்டு வேலை செய்வே? காலையிலே பாத்திரம் விளக்கி வைப்பே. வீட்டை சுத்தம் பண்ணியிருக்கே. வாஷிங் மெஷின்லே துணியைப் போட்டு துணியை துவைச்சு. காயப்போட்டு மருமக சேலையா இருந்தாலும் இஸ்திரிக்கு கொடுத்து. எத்தனையோ செய்திருக்கே. ஏன் பேரனை ஸ்கூல் லேர்ந்து இட்டுகினு வந்திருக்கே. எத்தனையோ நாள் பேரனுக்கு பசின்னு தாத்தாவும், பேரனும் ஒட்டலுக்குப் போயிருக்கீங்களே.''

''இல்லை சொர்ணம். அப்படி இல்லேம்மா. எதுவுமே உபயோகப்பட்டா தான் உபயோகம். இல்லேன்னா அது குப்பைக்குத்தான் போகணும்..'' இப்ப நான் பாரமாயிட் டேன். கண்ணு வேற சரியா தெரியலை.''

''அதனால?''

''அதுனாலதான் கொஞ்ச நாளா டிபன் வைக்காம இருந்தாங்க. அப்புறம் மதியம் வெறும் சோறு மட்டும் வைக்க ஆரம்பிச்சாங்க.''

''ஓ... அதுதான் அன்னிக்கு ஊறுகாய் கேட்டியா?''

அவர் ஆமென்று தலையை ஆட்ட,

''அப்புறம் சோத்தோட அளவும் கொஞ்சம், கொஞ் சமா குறைஞ்சு இன்னிக்கு ஒண்ணுமே வைக்கலே.



காலையிலே காபி சாப்பிட்டது. ஒரே பசிக்குதும்மா. ஏதுனாச்சும் இருந்தா தாயேன். நான் எப்படியும் இந்த வாரத்துக்குள்ளே துட்டை எடுத்துகிட்டு வந்துடறேன். எல்லாத்தையும் கணக்கு வச்சுக்க. காசை கொடுத்திட றேன்.''

ஏற்கனவே தளர்ந்த உடல், மறுபடியும் தளர்ந்து போக பசியினால் வாடிப் போக, பின்னும் தளர்ந்து போய் நின்றார்.

''அப்பா...'' பாஸ்கரன் கூப்பிட திடுக்கிட்டுப் போகிறார்.

வேலைக்காரி சொர்ணம் மெதுவாக நகர்ந்து செல்ல,

''ஒரு அஞ்சு நிமிஷம் இருங்கப்பா வந்துடறேன்.'' உள்ளே சென்றவன் ஒரு கேரியரோடு வெளியே செல்ல, கண்ணீரோடு வெளியே செல்பவனையே பாவமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார் ஜகன்னாதன்.

அடுத்த அரை மணியில் சுடச்சுட சாப்பாட்டைக் கொண்டு வருகிறான் மகன். அவர் அப்படியே சுருண்டு படுத்திருக்கிறார். அவசரம் அவசரமாக எடுத்துக் கொண்டு ஓடி வந்தவன், அப்பாவை எழுப்பி சாப்பிட வைக்க, முதலில் தளர்ந்து போனவர், பின் அள்ளி அள்ளி வாயில் போட்டுக் கொண்டார். வாங்கி வந்த சாப்பாட்டில் ஒரு சிறு பகுதியைத்தான் அவர் சாப்பிட்டார். பின் வயிற்றைப் பிடித்துக் கொண்டே ஆயாசப் பட்டவாறே படுத்து விட்டார். அப்படியே உறங்கியும் போய் விடு கிறார்.

பாஸ்கரனுக்கு இப்போதுதான் புரிந்தது. எங்கோ தவறு நடக்கிறது. தன் மனைவி அத்தனை பொல்லாதவளா? இப்படியா இருப்பாள்? இப்படியா ஒரு வயதானவரை



Vennila

அதுவும் உடல் நலம் சரியில்லாதவரை துன்புறுத்தும் அளவிற்கு போவாள். அத்தனை தூரம் தாழ்ந்து விட்டாளா? பெண் தன்மையே இல்லாமல் இப்படியா இருப்பாள்? மனதளவில் மோசமான பெண்மணியா?

சட்டென்று மனம் அழுதது. காலையில் இருந்து பட்டினி கிடந்து விட்டு ஒரு வாய் சாப்பிட்ட உடனேயே ஆயாசம் தாளாமல் கண்ணை மூடி படுத்திருக்கும் அவரைப் பார்த்தால் வேதனையாக இருந்தது. பெண்டாட்டி மேல் சண்டாளக் கோபம் வந்தது. அதிர்ச்சி எல்லாம் கோபமாக மாறிப் போனது. பெண்டாட்டி கையில் கிடைத்தால் கொன்று விடலாம் போலத் தோன்ற என்ன செய்வதென்று தெரியாமல் உலாவுகிறான். அவளிடம் அப்படியே கேட்டால் வீண் சண்டை தான் வரும். இதை கையும், களவுமாகப் பிடித்து பின் என்ன செய்ய வேண்டும் என்று பார்க்க வேண்டும்.

அன்று மாலையும் குழந்தைக்கும், தந்தைக்கும் டிபனை வாங்கித் தந்து, கொஞ்சம் சாதம் மட்டும் வடித்து காலையில் மீதி இருந்த சாப்பாட்டை மூவரும் சாப்பிட்டு முடித்தனர். அப்பாவை கிட்டே இருந்து கவனித்துக் கொண்டான் மகன்.

"அப்பா தாத்தா பாவம்பா. அவருக்கு கண்ணே தெரியலைப்பா. அந்த கண்ணாடியைக் கூட நான் உடைச்சிட்டேன்பா. வேற வாங்கிக் கொடுப்பா."

மகன் பேச, பேச நெகிழ்ந்து போகிறான் பாஸ்கரன். மகனை கட்டி அணைத்துக் கொண்டான்.

"கட்டாயம்டா கண்ணு. அப்பாவுக்கு அடுத்த வாரம் லீவு வரதுடா. அப்பா, தாத்தாவிற்கு எல்லாம் செய்திடுவேன். சூப்பர் கண்ணாடி வாங்கிட்டு வரேன்."



"தேங்க்ஸ்பா. தாத்தா பாவம்பா" என்று தாத்தாவை கட்டி அணைத்துக் கொண்டான். கன்னத்தில் முத்தமிடுகிறான். பெண்டாட்டி செய்த செயலால் அதிர்ந்து நொந்து போனவனுக்கு ஒரு பெருமூச்சு வந்தது. மனது சந்தோஷப்பட்டது. யாரோ காயத்துக்கு மருந்து போட்டது போல் இருந்தது. பிள்ளையோடும், அப்பாவோடும் சந்தோஷமாக பேசியபடி பிள்ளைக்கு ஹோம் வொர்க்கில் உதவி செய்து, அப்பாவிற்கு ஏதேனும் தேவையா என்று கேட்டு, கேட்டு செய்து அப்பாவின் படுக்கை எல்லாம் தட்டிப் போட்டு, அப்பாவையும் தன்னுடனே அமர வைத்துக் கொண்டு பிள்ளை கொஞ்சம் படித்து முடித்தவன், எல்லோரும் கார்ட்டூன் சேனலை கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இதற்குள் பாலைக் காய்ச்சி, அப்பாவிற்கும் பிள்ளைக்கும் கொடுத்துவிட்டு, பிள்ளையை தூங்க வைத்து, அவனுடைய படுக்கையில் கொண்டு போய் படுக்க வைக்கிறான். அப்பாவை கைத்தாங்கலாக பாத்ரூமுக்கு அழைத்துப் போய் பின் படுக்கையில் அவரை படுக்க வைக்கிறான். அப்பாவை படுக்க வைத்து, போர்வையைப் போர்த்திவிட்டு, அப்பாவின் கன்னத்தையும் தலையையும் தடவி விட்டு நகர்ந்தபோது, அப்பா சட்டென்று பிள்ளையின் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

"தேங்க்ஸ்பா... தேங்க்ஸ்பா..." என்று பேசும்போது கண்கள் கசிந்து போகிறது.

"என்னப்பா இது சில்லியா? எதுக்கு தேங்க்ஸ்? உங்களுக்கு வேற ஏதாவது தேவையா? எல்லாத்துக்கும் நான் இருக்கேன்பா. உங்களை விட்டுட மாட்டேன்."

அப்பா நம்பிக்கையோடு பிள்ளையைப் பார்க்க,

Vennila

''இப்ப கொஞ்சம் டைம் இல்லே. கட்டாயம் இந்த வாரக் கடையில் போய் கண்ணாடி போட்டுக்கலாம்.''

பிள்ளை சொல்ல, சந்தோஷமாக தலையை ஆட்டுகிறார். அப்பா தூங்கிப் போக, பிள்ளை அப்பாவை பார்த்தபடி மெதுவாக நகர்ந்து வெளியே போகிறான். மனம் பாரமாக இருந்தது. இது எப்படி சாத்தியம்? தன் மனைவியா இப்படி? அவளை நல்லவள் என்று நினைத்தேனே - ஏதோ வேலைக்குப் போகும் அவசரம், அலுப்பு என்றல்லவா நினைத்திருந்தேன். இப்படி என்று தெரியவில்லையே. தன் பெண்டாட்டி அத்தனை மோசமானவளா என்ன? ஒரு வயதானவரை உடல் நிலை சரியில்லாதவரை, பட்டினிபோட எப்படி மனது வருகிறது? எரிச்சல் வந்தது. வரட்டும் அவள். மனம் கறுவிக் கொண்டது.

இப்படி எத்தனை நாட்களாக நடந்து கொண்டிருக்கிறது. அம்மா இருந்தவரை அனைத்தையுமே அம்மாதானே கவனித்துக் கொண்டாள். ஒருவேளை அம்மாவையும் துன்பப்படுத்தி இருப்பாளோ. அதனால்தான் அம்மா இறந்து விட்டார்களோ. இப்படி எல்லாம் யோசிக்க ஆரம்பித்த பின், மனைவி மேல் இன்னும் தாங்க முடியாத ஆத்திரம் வந்தது. அப்படியே வெட்டிப்போட வேண்டும் என்று தோன்றியது. வரட்டும் அவள். ஆத்திரம் தாங்காமல் மேசை மேல் குத்துகிறான்.

மாலையே தயிர் தோய்த்துவிட்டு ஒன்றை எடுத்து குளிர் சாதனப் பெட்டியில் வைக்கிறான். நாளைக்கு கிளம்பு முன் அப்பாவிடம் சொல்லிவிட்டுப் போக வேண்டும். பாவம் மதியம் வெறும் சாதம் சாப்பிடுகிறவருக்கு தயிர் இருக்கட்டும்.

'என்ன செய்யலாம் இவளை? ஏன் இப்படி செய்தாய் என்று கேட்க முடியுமா? கேட்டு வெளுத்து வாங்கினால்'



யோசிக்கிறான். 'ம்... முதலில் இவள் ஏன் இப்படி நடந்து கொள்கிறாள் என்று கண்டு பிடிக்க வேண்டும். எத்தனை நாட்களாகவே இவள் இப்படி செய்கிறாள் என்பதையும் இவள் வாயாலேயே சொல்ல வைக்க வேண்டும். பின்பு பார்க்கலாம்.'

மனைவியின் வருகைக்காக கோபத்துடனும், எரிச்சலுடனும் காத்திருந்தான். மனைவிக்கு இரவு சாப்பிட பால் வைக்காமல், தானும் சாப்பிட்டு, மீதியை தயிர் தோய்த்து வைத்து சாப்பாட்டையும் காலி செய்து அமர்ந்திருக்கிறான். நேரம் ஆக, ஆக எரிச்சல் அதிகமாகியது. தொலைக்காட்சியிலும் மனது செல்லவில்லை. பேப்பரும் படிக்கத் தோன்றவில்லை. கடைசியாக வழக்கம் போல் மனைவி நேரம் கழித்து தான் வருகிறாள். தன் கோபத்தை அடக்கிக் கொண்டு மெதுவாகக் கேட்கிறான்.

''என்ன இன்னிக்கு சீக்கிரம் வந்துட்டே?''

''*சீக்கிரமா?*''

''ஆமா நேத்து பத்து மணிக்கு மேலே வந்தே? இன்னிக்கு ஒன்பதரை தானே ஆகுது. வந்துட்டே.''

ஒரு நிமிடம் அவனையே உறுத்துப் பார்த்தவள்,

''இன்னிக்கு சீக்கிரம் வேலை முடிஞ்சுது. வந்தேன்.'' என்று உள்ளே நுழையப் போனவளைத் தடுக்கிறான்.

''ஒரு விஷயம்மா. அப்பாவையும், நம் பையனையும் யாராவது கவனிச்சே ஆகணும்.''

''அதுனால?'' கேட்டு விட்டு அவனை முறைத்துப் பார்க்கிறாள்.

''அதுனால. உன்னால வேலையை விட முடியாது. இல்லையா நான் வேலையை விட்டுடலாம்னு நினைக்கிறேன்.''

Vennila

பாஸ்கரன் சொல்லச் சொல்ல அதிர்ந்து போய் அவனையே பார்க்கிறாள் புவனா.

# 9



"என்ன சொல்லறீங்க? வேலையை விடப் போறீங்களா? விளையாடறீங்களா?"

"இதுலே என்ன விளையாட்டு இருக்கு. அப்பா வயசானவங்க. அதுவும் முடியாத ஸ்டேஜ்ல இருக்காரு. அவரைப் பார்த்துக்கணும். ஏற்கனவே அனாதை மாதிரி இருக்கும் நம்ப பையனுக்கும் ஒரு துணை வேணும்."

"ரொம்ப அழகாயிருக்கு. அதுக்காக வேலையை விட்டா சாப்பாட்டுக்கு என்ன பண்றது? அவன் பெரிய பையன்தானே எல்லாத்தையும் பழகிக்க வேண்டியது தான்."

"முடியாது. அந்தக் குழந்தை பட்ட கஷ்டத்தை எல்லாம் கண்ணால பார்த்தேன். நான் நாற்பத்து அஞ்சாயிரம், நீ இருபதாயிரம் சம்பாதிக்கறே? யாருக்காக? பிள்ளையை கஷ்டப்படுத்தி, தனிமைப்படுத்தி, அது வண்டி வண்டியாய் ஏக்கத்தை வளர்த்துகிட்டு அழுதுகிட்டு நிக்கவா? இப்ப அதை கவனிக்கலேன்னா வயசானா அது நம்பளை கவனிக்காது. முதியோர் இல்லத்தில் விட்டுடும்" பாஸ்கரன் எரிச்சலோடு பேச,

"அப்ப உங்க அப்பாவை முதியோர் இல்லத்தில் விட்டுட்டு வந்திடுங்க" அவள் சொன்னதும் சூடாகிப் போகிறான்.



"என்ன வாய் நீளுது?" பாஸ்கரன் பற்களைக் கடித்தபடி கூற,

"நீங்க சொன்னதை தான் சொல்லறேன். சின்ன வயசுலே உங்க அப்பா உங்களை கவனிக்கவே இல்லை. இல்லையா? இப்ப நாம ஏன் கவனிக்கணும்? பேசாம நீங்க சொன்ன மாதிரியே செய்ய வேண்டியதுதானே" பொங்குகிற கோபத்தை அடக்குகிறான்.

"இத பாருடி அவரு எங்க அப்பா. அவருக்கு உதவி செய்ய வேண்டியது என் வேலை. அவருக்காக இல்லைன்னாலும் செத்துப் போகிற வரைக்கும் என்னையே கவனிச்சாங்களே எங்க அம்மா அவுங்களுக்காக அவரைப் பார்த்துகிட்டு தான் ஆகணும்."

"போகப் போகிறவங்களுக்காக இருக்கறவங்களை சாகடிக்கப் போறீங்களா?"

"எல்லோரும் ஒரு நாளைக்கு போகப் போறவங்க தான்." அவன் நக்கலாகக் கூற எரிச்சல் உற்றாள்.

"இத பாருங்க பிராக்டிகலா பேசுங்க. நல்ல பெய்ட் ஹோம்லே சேர்த்தா, அவரைப் பார்த்துக்க டாக்டர், நர்ஸ் எல்லோருமே இருப்பாங்க. அவருக்கு வேளைக்கு சாப்பாடு கிடைக்கும். ரெஸ்ட் கிடைக்கும். மெடிக்கல் பெஸிலிடீஸ் எல்லாம் கிடைக்கும். நாமளும் சர்டர்டே, சன்டேன்னு போய் பார்த்துக்கலாம்."

"அப்படியா?" என்றவன், "உன் பையனை என்ன பண்ணப் போறே? அவனையும் நல்ல ஹாஸ்டல்லே சேர்த்துடலாமா? அப்புறம் நீயும் பதினோரு மணிக்கு வரலாம். நானும் என் இஷ்டத்துக்கு இருக்க முடியும்.

அவனை எந்த ஹாஸ்டல்லே சேர்க்கலாம் சொல்லு. ஊட்டியிலே சேர்க்கலாமா? இல்லை கொடைக்கானலுக்கு அனுப்பலாமா?" கணவன் சொல்லச் சொல்ல கணவனையே முறைத்துப் பார்த்தவள்,

Vennila

"சே!" உங்ககிட்ட போய் சொன்னேனே" எரிச்சல் பட்டாள்.

"'பிள்ளையைப் பிரிய முடியலை இல்லே. என்னாலேயும் எங்கப்பாவைப் பிரிய முடியாது. ஓ.கே. வா..."

பெண்டாட்டி முறைக்க,

"ஓ.கே... அதை விடு, ரெண்டு பேரும் போக வேண்டாம். நான் வேலையை விட்டுடறேன். வீட்டு வேலை மொத்தமும் நானே பார்த்துக்கறேன். உன் சம்பளத்துலே நாம சிக்கனமா செலவு செய்வோம்" அவன் சொல்லச் சொல்ல,

"சே!... நீயெல்லாம் ஒரு மனுஷன்..." அவள் கத்த பட்டென்று கன்னத்தில் விழுந்தது.

"என்ன பொம்பளை நீ. உடம்பு சரியில்லாதவர்னு இருந்தா அனுசரணை வேண்டாம். அட்லீஸ்ட் ஒரு மனிதாபிமானம் இருக்கக் கூடாதா? அவருக்கு சாப்பாடு போடாம பசியிலே துடிச்சுகிட்டு இருக்காரு. வயசானவர் என்ன செய்வார்? உடம்பு சரியில்லை. கண்ணு தெரியலை. எத்தனை கேவலமான மனசு? இந்த நிலையிலே போய் அவரை கஷ்டப்படுத்தினியே. நீ செஞ்சதுக்கு..." பல்லைக் கடிக்கிறான். "உன்கூட வாழறதே தப்பு." அவன் பேசப்பேச அடிபட்ட கன்னத்தைத் தடவியவாறே அவனை முறைத்தபடி நகர்ந்து உள்ளே போகிறாள்.

ஆத்திரம், கோபம், வெறுப்போடு படாரென்று படுக்கை அறைக் கதவைச் சாத்துகிறாள்.

பாஸ்கரன் மெதுவாக அமர்கிறான். மனைவி வேலைக்குப் போகிறவள். சாது என்று நினைத்திருந்தானே - இப்பேற்பட்ட மோசமான பெண்ணா? எப்படியும் இவள் வேலையை விட்டு வந்தாலும் தந்தைக்கு கெடுதல் தானே. அதனால் அவள் வேலையை விடுவது இன்னும்



ஆபத்தானது. அப்பாவை குற்றுயிராக ஆக்கி விடுவாள். இதற்கு என்ன வழி.

சிறு குழந்தை போல் தன் கையைத் தடவிக் கொடுத்த தந்தையை நினைக்கும் போதே கண்கள் கலங்கிப் போனது. தலையை வலித்தது. என்ன செய்யலாம் யோசிக்கிறான். யோசித்து, யோசித்து மண்டை வலித்தது. தலையைப் பிடித்தபடி அமர்ந்திருந்தான்.

மதியம் வந்ததிலிருந்து என்னென்ன நிகழ்வுகளை எதிர்கொண்டான். அப்பா பாவம் தவழ்ந்து போய் வேலைக்காரி சோற்றைக் கேட்டாரே. எத்தனை பசி இருந்தால் இப்படி இறங்கிப் போய் கேட்டிருப்பார். அதுவும் அழ வேறு அழுதாரே. நான் ஒரு மடையன். அவருக்குக் கண்ணாடியை ரெடி செய்யக்கூடாதா? அவர் வேலையை அவர் செய்திருப்பாரே. இப்படிக் கீழிறங்கி போயிருக்க வேண்டாமே. இதற்கு தான் தான் முக்கிய காரணமே. நொந்தவாறே வெகு நேரம் அமர்ந்திருந்தான். அப்பாவிற்கு சரியாகும் வரை அவரை கவனித்துக் கொண்டு தான் ஆக வேண்டும். அப்படியே யோசித்து, யோசித்து சோபாவில் கண்ணை மூடி படுத்திருந்தான். அப்படியே உறங்கியும் போனான்.

காலையில் பேப்பர் விசிறி விட்டுப் போகும் ஒலியில் சட்டென்று விழித்துக் கொண்டான். மனைவி இன்னும் எழுந்திருக்கவில்லை. இரவு நடந்தது ஞாபகம் வர மறுபடியும் கோபம் வந்தது. வாயிலில் போய் பேப்பரை எடுத்து வந்தான். பாலை வேறு போட்டு விட்டுச் செல்ல பாலை வேறு எடுத்து வந்து அடுப்பில் வைத்து விட்டு பல்லை விளக்கி காபியை கலக்கிறான். தனக்கும் ஒன்றும் அப்பாவிற்கு ஒன்றுமாக எடுத்தபடி அப்பாவின் அறைக்குச் செல்கிறான்.

Vennila

தட்டுத்தடுமாறு, படுக்கையில் அமர்ந்தவாறே இருந்த அப்பாவைப் பார்க்கையில் பாவமாகத் தோன்ற, அவரைக் கைத்தாங்கலாகப் பிடித்தபடி பாத்ரூமுக்கு அழைத்துச் சென்று, காலைக் கடன்களை முடிக்க வைத்து, முகம், கை, கால் கழுவி, காபியைக் கொண்டு போய் கையில் தர அப்பா ஒரு வித பசியுடன் குடிக்கிறார். தானும் காபியைக் குடித்து விட்டு குளித்து அலுவலக உடைக்கு மாறு கிறான்.

பெண்டாட்டி இன்னும் எழுந்தபாடில்லை. இதற்குள் பிள்ளை எழுந்து வர அவனையும் காலைக் கடன்களை முடிக்க வைத்து பல்லை விளக்கி அவனுக்கு போர்ன்விடா கலந்து தந்து பின் ஹோட்டலுக்குப் போகிறான். தனக்கு, மகனுக்கு, அப்பாவிற்கு மட்டும் டிபனை வாங்கி வந்தான். அப்பாவிற்கு நான்கு இட்லிகளையும், ஒரு வடையையும் வைத்து சாப்பிட வைத்தான்.

"போதும்பா. வயிறு ரொம்பிடுச்சு." அவர் ஆனந்தமாகக் கூற,

'சே! என்ன பெண்மணி. உணவு ஒன்றிற்குத்தான் போதும் என்ற அளவு கோல் உண்டு. இந்த கொஞ்ச டிபனையும் கொடுக்காமல் பட்டினி போட்டு... பாவம் அப்பா' என்றவன், குழந்தைக்கு உடை மாற்றி, தலை சீவி, சீருடை அணிவித்து கிளம்ப யத்தனிக்கும் வரையில் பெண்டாட்டி கதவைத் திறக்கவில்லை. ஒரு முறை கதவை தட்டி அவளை எழுப்புவோமா என்று, நினைத் தவன், எண்ணத்தை மாற்றிக் கொண்டான். சனியன் எப்பொழுது எழுந்திருக்குமோ, எழுந்து கொள்ளட்டும். தன் சாப்பாட்டை தானே சாப்பிட்டுக் கொள்ளட்டும்.

மடமடவென்று அப்பாவிற்கு குளிப்பதற்கு உதவி செய்து, அவருக்கு உடை மாற்றி விட்டு அவரை கைத்தாங்கலாக அழைத்து வந்து வராண்டாவில் உட்கார



வைத்து விட்டு பிள்ளையை அழைத்துக் கொண்டு கிளம்புகிறான்.

"மத்தியானம் வரேம்பா" சொல்லிவிட்டு அவன் நகர அவர் கையை ஆட்டிப் புன்னகைத்தவாறே மங்கல் பார்வையுடன் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க, குரோதப் பார்வையுடன் அலுவலகத்திற்குச் செல்லும் கணவனையும், பிள்ளையையும் பார்த்தவள் இன்னும் எரிக்கும் பார்வையை மாமனார் மேல் பதித்தாள்.



## 10

பையனும், பேரனும் போவதைப் பார்த்து புன்னகைத் தவர் திடுக்கிட்டுப் போனார். மருமகள் காளி வேஷத் தோடு நின்று கொண்டிருக்கிறாள். ஓரளவு மங்கலாகத் தெரிந்தாலும் மருமகள் கோபாவேசத்தோடு எரிச்சலாக நிற்பது நன்றாகப் புரிந்தது. சற்று பயத்துடன் நின்று கொண்டிருந்தார். அவர் நெஞ்சு திடும் என்று அடித்துக் கொண்டது. கோபக்கார தலைமை ஆசிரியரை கண்டு மிரளும் புதிய பள்ளி மாணவன் போல் இருந்தார்.

"என்ன ஒரே சந்தோஷமா இருக்கா? என்னைப் பத்தி இல்லாதது பொல்லாதது எல்லாம் சொல்லி போட்டுக் கொடுத்து... எம் புருஷன் கிட்டேர்ந்தும் பிள்ளை கிட்டேர்ந்தும் பிரிக்கலாம்னு கனவா? எல்லாம் கனவாகத் தான் போயிடும். ஞாபகம் வச்சுக்கப்பா. பாவம்னு பார்த்தா எனக்கே வேட்டு வைக்கறியா?"

ஜகன்னாதன் அதிர்ந்து போகிறார். மருமகள் வேலைக் குப் போகிறவள். சாதாரண பேச்சை

Vennila

இன்று முகத்துக்கு நேரே எப்படி எல்லாம் பேசுகிறாள்?
தன் மேல் வெறுப்பைக் காண்பிக்கும்போது கூட சோற்
றின் அளவைக் குறைத்து, பின் சோறே வைக்கவில்லையே
தவிர, ஒரு வார்த்தை கூட தூக்கிப் போட்டு பேசிய
தில்லை. ஆனால் இப்போது? அதுவே தாங்க முடியாத
அதிர்ச்சியாக இருந்தது. அவர் பதில் பேசவில்லை.
மௌனமாக அமர்ந்திருந்தார். பேசலாம். தானும் முகத்தில்
அடித்தபடி சொல்லலாம். ஆனால் அதில் என்ன
பிரயோசனம்? விரோதம் தான் அதிகமாகிவிடும். அவர்
மௌனமாக தலை குனிந்தபடி இருக்க, வெடிக்கிறாள்
மருமகள்.

"என்ன ஒண்ணும் தெரியாத மாதிரி பார்க்கறீங்க? இதுவரைக்கும் உங்க பையனுக்காக என்ன செய்திருக்கீங்க? உங்க பையன் எல்லாத்தையும் சொல்லி இருக்காரு. எப்பவும் வேலை வேலைன்னு ஓடிகிட்டே இருப்பாங்களாம். இருக்கிற ஒரு பையனைக்கூட கவனிச்சதில்லையாம். அம்மா மட்டும் இல்லேன்னா நான் உயிரோடவே இருந்திருக்க மாட்டேன்னு இவர் அடிக்கடி சொல்லுவார்.

பெண்டாட்டிகிட்டேகூட ரொம்பப் பேசினதில்லையாமே. எப்பவும் எங்க மாமியார் தனிமையில் தான் இருப்பாங்களாம். தனிமையில் தானே இருந்தாங்க. நானே பார்த்திருக்கேனே. பாவம். வீட்டுலே நடக்கற விஷயத்தைச் சொல்ல எத்தனையோ நாள் துடிச்சிருக்காங்க. நீங்க எங்கே காது கொடுத்து கேட்டிருக்கீங்க. யாரை மதிச்சிருக்கீங்க? எப்பவுமே உங்க இஷ்டம். உங்க ஆசை. அதுக்காகவே தானே வாழ்ந்திருக்கீங்க. ஆனா பிள்ளை, மருமக மட்டும் அவுங்க வேலையை விட்டு உங்களையே பார்த்துக்கணுமா? ஒரு தடவை சொன்னதும் புரிஞ்சுக்கணும். சாப்பாட்டை குறைச்சா புரிஞ்சிப்பீங்கன்னு நினைச்சேன். எதுவும் தெரியாத மாதிரி நடிச்சிட்டு



கடைசியிலே பிள்ளை கிட்டே போட்டுக் கொடுத்து, அழுது நீங்க ஜெயிச்சிட்டதா நினைக்கிறீங்களா?"

அவர் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். "ஏன் பேச மாட்டேங்கறீங்க?"

அவர் பின்னும் பதில் சொல்லாமல் மௌனமாய் இருக்க, மறுபடியும் எரிச்சல் பட்டு கத்துகிறாள்.

"நீங்க வேணும்னா, சுயநலம் பிடிச்சவரா இருந்திருக்கலாம். ஆனா நாங்க அப்படி இல்லே. உங்களைத் தூக்கிப் போடணும்னு சொல்லலே. நீங்களே போவீங்கன்னுதான் இன்டைரக்டா ஏதேதோ செய்து பார்த்தேன். ஆனா நீங்க அசைஞ்சு கொடுக்கலே."

"நான்... நான் இருந்தா... உனக்கு... என்னம்மா கஷ்டம்?"

"கஷ்டமா? காலைல பார்க்கறீங்களே, இவுங்க இரண்டு பேருக்கு செய்யறதுக்குள்ளே தாவு தீர்ந்து போயிடுது. இதுலே உங்களுக்குச் சேர்த்து செய்யணுமா? பேசாம போயிடுங்க."

"தப்பா நினைக்காதேம்மா. எங்கே போறது?"

"இத கேட்டீங்களே இது கரெக்ட் பாயிண்ட். நல்ல பெய்ட் ஹோம்லே உங்களைச் சேர்த்து விடறேன். அங்க உங்களுக்கு ஒரு குறையும் கிடையாது. உங்க ரூம்லே தனி டி.வி. இருக்கு. அட்டேச்ட் பாத்ரூமோட உங்களுக்கு ரூம் இருக்கு. எல்லா வசதியும் இருக்கு. நீங்க கவலையே பட வேண்டாம். உங்களுக்கு வேண்டிய சர்வீஸ் கிடைக்கும். அது மட்டுமல்ல. வாரம் ஒரு தடவை நானும் இவரும் வந்து உங்களைக் கட்டாயம் பார்த்துப்போம்."

"என்ன சொல்லறீங்க?"

"குழந்தை..." அவர் மெதுவாக முன...

Vennila

''அவனையும் இரண்டு நாளைக்கு ஒரு தடவை உங்களைப் பார்க்கச் சொல்லறேன். இதுதான் எல்லோருக்கும் நல்லது.''

அவர் மௌனமாக இருக்கிறார். சொல்லிவிட்டு மருமகள் விருட்டென்று வெளியே செல்கிறாள். ஜகன் னாதன் சற்று சாய்ந்து அமர்கிறார். கண்கள் மட்டும் லேசாக கலங்கிப் போயிற்று. மருமகள் சொல்வதும் எல்லாமே உண்மை தான். தான் மனிதனாக இருக்கக் கூட அருகதை இல்லாதவர். வேலையில் இருந்த வரைக்கும் என்ன இறு மாப்பு? என்ன அலட்சியம்? என்ன கொழுப்பு? சொந்த மனைவியைக் கூட வேலைக்காரியை விட கேவலமாகத் தானே நடத்தி இருக்கிறார். பிள்ளையின் முகம் கூட பார்த்ததே இல்லை. எப்போதுமே தன் வேலை, தன் சுகம், தன் நினைவுகள் என்று வாழ்ந்தவர். பிள்ளையைக் கவனித்துக் கொள்ள என்று சொல்ல அவருக்கு என்ன உரிமை இருக்கிறது? பேசாமல் மருமகள் சொல்வது போல் சென்று விடலாம். அது தான் எல்லோருக்கும் நல்லது.

அன்று 'பிள்ளை வரட்டும்' என்று காத்திருந்தார். ஜகன்னாதன். தன் பிள்ளை கண்ணாடிக்கு ஏற்பாடு செய்தால் கூட போதும், தான் வேறு ஒரு இடத்தைப் பார்த்துக் கொண்டு போய் விடலாம். மதியம் டிபன் கேரியரில் அவருக்கு சாப்பாடு வந்தது. பக்கத்து வீட்டு வேலைக்காரிதான் கொண்டு வந்தாள்.

''சாமி உங்களை மதியம் சாப்பிட வைக்கணும்னு ஐயா காலையிலேயே டிபன் காரியரும், ரூபாயும் கொடுத் துட்டுப் போயிருந்தாருங்க.'' கிழவர் கொஞ்சம் சாப்பிட் டதும், மற்றவற்றை வேலைக்காரியையே எடுத்துக் கொள்ள சொல்லிவிட்டு படுத்துக் கொண்டார். பிள்ளை வந்ததும், முதலில் கண் டாக்டரிடம் அழைத்துச் செல்ல சொல்ல வேண்டும். கண்ணுக்குக் கண்ணாடி வந்ததும் தான் தனியாகப் போய் விடலாம்.



அன்று இரவு பிள்ளை உள்ளே நுழையும்போதே சாப்பிடுவதற்கு ஏதோ வாங்கி வந்தான், பெண்டாட்டி தனக்கு முன்பே வெகு சீக்கிரம் வந்து சமைத்திருப்பது தெரிந்து, இதழ்க்கடையில் லேசான புன்னகை வந்தது. தன் வைத்தியம் பலித்து விட்டதா? மாலை சற்று சீக் கிரமே வந்தவள் மாமனாரிடம் போய் விடும்படி திருப்பித் திருப்பி வலியுறுத்திக் கொண்டிருந்தாள். அவரும் தலையை ஆட்டியவாறே அமர்ந்திருந்தார்.

பிள்ளையும் சாப்பிட்டு விட்டு 'தாத்தா' என்று தாத்தா விடம் பேசிவிட்டு, தாத்தாவிடம் விளையாடி விட்டு படிக்க அமர்ந்தான். அப்பா வந்தபோது, 'ஹை டாடி' ஓடி வருகிறான். பிள்ளையைக் கொஞ்சியவன், ''சாப்பிடறியா? தாத்தா சாப்பிட்டாரா?'' கேட்டவாறே பொட்டலங்களைத் தர,

''மம்மி அப்பவே சாப்பாடு போட்டாங்களே, நானும், தாத்தாவும் சாப்பிட்டோமே.''

அவன் கூற பாஸ்கரனின் கண்கள் ஆச்சரியம். ஒருநாள் வைத்தியத்தில் பெண்டாட்டி சரியாகி விட்டாளா என்ன? அவனுக்கு சாப்பாட்டைப் போட்டு விட்டு, நானும் சாப்பிட்டு விட்டு எல்லாவற்றையும் சுத்தம் செய்து, அவள் மாமனாருக்கு பாலை எடுத்துக் கொண்டு வருகிறாள்.

''என்ன முடிவு செய்தீங்க? சீக்கிரமா உங்க பையன் கிட்டே சொல்லுங்க.'' மெல்லிய குரலில் சொல்லி விட்டு, தன் அறை வாசலில் நின்று கொண்டு நடப்பதைப் பார்க்கிறாள்.

''பாஸ்கரா?'' ஜகன்னாதன் கூப்பிட,

''என்னப்பா?'' சற்று ஆவலுடன் அப்பாவிடம் வருகிறான்.

''மத்தியானம் சாப்பிட்டீங்களா? இப்ப நைட் சாப்பிட் டீங்களா? பால் குடிச்சீங்களா?''

Vennila

''எல்லாம் ஆச்சுப்பா.''

''ஓ...கே... அப்ப... படுங்க...'' என்றவாறே அவன் கிளம்ப முயற்சிக்க,

''பாஸ்கரா... எனக்கு... எனக்கு கண்ணாடி வேணும். கண் டாக்டர் வீட்டுக்கு அழைச்சுகிட்டு போறேன்னு சொன்னியே எப்ப போகலாம்? கண்ணாடி வந்துட்டா முக்கால் வாசி பிரச்சனைகள் தீர்ந்திடும்பா.''

''சாரிப்பா... மறந்தே போயிட்டேன். நாளைக்குக் கட்டாயம் போகலாம்.'' சொல்லிவிட்டு அவன் நகர, அறை வாசலில் கடுகடுவென்று அவரையே முறைத்த வண்ணம் நின்றிருந்தாள் மருமகள்.

# 11



ஜகன்னாதனுக்கு மனம் மாறுகிறது. மருமகள் தன்னை முறைக்கிறாள். தான் போகத் தயாராக இருக்கிறோம். கண்ணை குணப்படுத்திக் கொண்டு போகக் கூடாதா? மருமகளின் பார்வையைத் தவிர்த்தவாறே, போய் படுத்துக் கொண்டார். வழக்கம் போல் பிள்ளை அப்பாவிற்கு உதவி செய்து விட்டுப் போகிறான். அப்பாவின் வாடிய முகத்தைப் பார்த்து கையை ஆதரவாகக் கட்டுகிறான்.

''நாளைக்குக் கட்டாயம் டாக்டர் வீட்டிற்குப் போக லாம்மா. கவலைப்படாதீங்க. கண்ணாடி மாத்திக்கலாம்.''

பிள்ளை தன்னை புரிந்து கொண்டானே. கண்ணாடி மாற்றிக் கொண்டவுடன் கிளம்பிவிட வேண்டியது தான். பிள்ளையிடம் நல்லபடியாகச் சொல்லிவிட்டுக் கிளம்பி விடலாம்.



மறுநாள் மருமகள் காலையில் எழுந்து, டிபன் எல்லாம் செய்தபோது, பிள்ளை அருகில் இருந்து அப்பாவிற்கு கொடுத்துவிட்டு, அப்பா குளித்து உடை மாற்ற உதவி செய்து விட்டு, அவரை வாயிலில் உட்கார வைத்து விட்டு கிளம்புகிறான். அவன் கிளம்பியதும் மருமகள் அருகே வருகிறாள்.

''ஏம் மாமா இப்படிச் செய்யறீங்க? அத்தனை தூரம் சொன்னேனே. சொல்லியும் நீங்க செய்யறதைத் தானே செய்யறீங்க?''

''இல்லேம்மா.'' தீனமாகச் சொன்னவரை கை அமர்த்தி னாள்.

''பேசாதீங்க படிச்சு, படிச்சு சொல்லியும் எத்தனை பிடிவாதம்?''

மருமகள் கடிந்து கொள்ள, கிழவர் சட்டென்று அழுது விடுகிறார்.

''அப்படி எல்லாம் இல்லைம்மா. என்னை நம்பு. நான் கட்டாயம் கிளம்பி விடுவேன். கொஞ்சம் கண்ணை குணப்படுத்திகிட்டு போயிடறேனே.''

''அதுதான் ஏன்னு கேட்கறேன்? அங்கதான் நல்லா கவனிச்சுப்பாங்கன்னு சொல்லி இருக்கேன் இல்லே. அப்படியும் உங்களுக்குப் போக மனதில்லே. ஏதோ சாக்கு போக்கு சொல்லறீங்க.''

''இல்லே. அப்படி இல்லேம்மா. கொஞ்ச நாள் பொறுத் துக்க. நான் கட்டாயம் போயிடுவேன். என் கண்ணை செக் பண்ணிட்டு கண்ணாடி மாத்தினப்புறம் கட்டாயம் நான் கிளம்பி விடுவேன்.''

ஆனால் அவருடைய வார்த்தைகள் எதுவும் எடுபட வில்லை என்பது பிறகு தான் புரிந்தது. அன்று சீக்கிரம் வந்த மருமகள் மாலை காபியைக் கூட கலக்கவில்லை.



Vennila

பேசாமல் தன் அறையில் போய் படுத்துக் கொண்டாள். பிள்ளைக்கு மட்டும் பிஸ்கட்டை கொடுத்துவிட்டு, போர்ன்விடா கலந்து கொடுத்தாள். மதியம் பிள்ளை வழக்கம் போல் சாப்பாடு கொடுத்து அனுப்பியதால் இன்று பசியில்லை. இருந்தும் சூடாக ஏதாவது சாப்பிட வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது.

''தாத்தா சாப்பிடுங்க'' என்று பிஸ்கட்டை தின்று கொண்டே வந்த பேரன், தாத்தாவிற்கும் பிஸ்கட்டை ஊட்டுகிறான்.

''டேய் வேணாம்டா.'' சொல்லியும் பேரன் கேட்க வில்லை. இந்த அன்பு நிலைக்க வேண்டுமென்றால் தான் இந்த வீட்டை விட்டுப் போக வேண்டும். அதற்கு முன் பையனிடம் கண்ணாடியைப் பற்றி பேச வேண்டும். ஆவலோடு காத்திருந்தவர் பையன் எரிச்சலோடு வந் ததைப் பார்த்துக் கலங்கி நின்றார்.

''என்னப்பா?'' மெதுவாகப் பிள்ளையிடம் பேச்சுக் கொடுக்கிறார்.

''ஒரே டென்ஷன்பா. வேலையே போரடிக்குது'' என்றவன் முகத்தைக் கழுவிக் கொண்டு வந்து அமர்ந்தான்.

''என்னப்பா, டிபன், காபி எல்லாம் சாப்பிட்டீங்களா?''

''ம்...'' என்றவர், கண்ணாடியைப் பற்றி கேட்கலாமா என்று யோசித்தார்.

யோசித்துக் கொண்டே இருந்தார். இரவு உணவின் போது பிள்ளையிடம் கேட்கலாமா? எப்படிக் கேட்பது? டென்ஷன் என்றானே. ஆனால் இன்று கட்டாயம் அழைத்துப் போகிறேன் என்றானே. மனதில் இத்தனை எண்ணங்களும் ஓடியவாறே, பிள்ளையின் முகத்தைப் பார்த்தவாறே அமர்ந்திருந்தார். ஆனால் பிள்ளை எதைப் பற்றியுமே பேசவில்லை.



'சரி பிள்ளையிடம் நாளைக்குக் கட்டாயம் கேட்டுக் கொள்ளலாம்.'

அடுத்த இரண்டு நாட்களும் பிள்ளைக்கும், மருமகளுக் கும் மறுபடியும் பிரச்சனை ஆரம்பித்தது. மருமகள் காலை சமையல் செய்ய மறுத்தாள். மிகவும் நேரம் கழித்து எழுந்திருந்து பிள்ளைக்குக் கூட ஒன்றும் தராமல் தான் அலுவலகம் செல்ல ஆரம்பித்தாள். அதில் ஆரம்பித்தது.

மறுபடியும் பிள்ளை கத்த, மருமகள் கோபித்துக் கொண்டு பதிலுக்குக் கத்த, மனது கஷ்டப்பட்டது. 'கண்ணாடி போடுகிறவரை கொஞ்சம்-பொறுத்துக் கொள்ளம்மா' - கேட்க மனது தவித்தது. ஆசைப்பட்டது. ஆனால் எத்தனை சொல்லியும் மருமகள் புரிந்து கொள்ளவில்லையே. தன்னை விரோதி மாதிரி அல்லவா நினைக்கிறாள். அழுகை வந்தது.

அன்றும் பின்னாலே எதுவும் கேட்கவில்லை. அடுத்த நாள் கூட வாயைத் திறக்க முடியவில்லை. பிள்ளை டிபனை வாங்கி கொடுத்து சாப்பாட்டை வாங்கி வந்து, மாலை சற்று சீக்கிரம் வந்து மாலை டிபனை வாங்கி வந்து அப்பாவிற்கு கொடுத்து தானும், சாப்பிட்டு பிள்ளைக்கும் ஊட்டி, இரவும் அப்படியே செய்து, பின் பாலைக் காய்ச்சி அவர்களுக்குக் கொடுக்கும் வரை பறந்து கொண்டிருந் தான். அவனைக் கேட்கவே சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. சற்று நேரம் கிடைத்தாலும் மனைவியின் மேல் எரிந்து எரிந்து விழுந்து கொண்டிருந்தான். அவன் ஒன்று பேச, அவள் ஒன்று பேச சண்டை சச்சரவுக்குப் போனது.

எதுவும் நடக்கவில்லை. கிட்டத்தட்ட நான்கு நாட்கள் ஓடிப் போய்விட்டது. சண்டையும், சச்சரவும் வீடே அமர்க்களமாக இருந்தது. பிள்ளை வேறு தனக்காக பாடு

Vennila

பட்டுக் கொண்டிருந்தான். அவர் சுத்தமாக நம்பிக்கை இழந்து போனார்.

அன்று வழக்கமாக வரும் பிள்ளை வரவில்லை. பேரன் வந்தவுடன் வழக்கம் போல் தாத்தாவின் கையைப் பிடித்துக் கொண்டு பிஸ்கட்டை எடுத்து, பாலைக் காய்ச்சச் சொல்லி, போர்ன்விடா கலந்து இருவரும் குடித்து, பிஸ்கட் சாப்பிட்டு ஹாலுக்கு வந்தபோது, தாத்தா வருத் தத்துடன் பேசுகிறார்.

''எனக்கு மட்டும் கண் தெரிஞ்சா இத்தனை கஷ்டம் இருக்குமா? எனக்கு இனிமே கண் தெரியாதுப்பா.''

''ஏன் தாத்தா?'' பேரன் பயத்தோடு கேட்க,

''யாருக்குமே நேரம் இல்லைப்பா. உங்கம்மாவுக்கு வேலை. லேட்டா வராங்க. உங்க அப்பா வேலைக்கும் போயிட்டு நம்பளையும் பார்த்துக்கறார் இல்லே. என்ன நடக்கறதோ நடக்கட்டும். கண் தெரியாம தவிக்கணும்னு கடவுள் எழுதி வச்சிருக்கார்'' அவர் புலம்ப,

''தாத்தா உங்களுக்கு இடம் தெரியுமா? நீங்க சொல் லுங்க. நான் கூப்பிட்டுகிட்டு போறேன்.''

''அது கொஞ்ச தூரத்துலே இருக்கேடா.''

''பரவாயில்லை தாத்தா. நான் கூப்பிட்டுகிட்டுப் போறேன். நீங்க வாங்க...''

ஒரு நிமிடம் யோசித்தவர் ''வா போகலாம்'' என் கிறார்.

''கண்ணா மேலே அலமாரியிலே வெள்ளை டப்பா இருக்கும்பாரு. அதுலே எத்தனை ரூபா இருக்கு பாரு?''

''தாத்தா முந்நூறு ரூபா இருக்கு'' பேரன் எடுத்துக் கொடுக்க,



''இன்னும் கொஞ்சம் ரூபா இருந்தா நல்லா இருக்கும்'' என்கிறார் தாத்தா.

''தாத்தா இருங்க. என்கிட்டே கொஞ்சம் இருக்கு.''

''உன்கிட்டே ஏதடா?''

''அம்மா லேட்டாவராங்க இல்லே. தினமும் நிறைய பைசா தராங்க.'' என்றவன், தன் பெட்டியைத் திறந்து பணத்தை எண்ணிக் கொடுக்க,

இரு நூறு ரூபாய் இருக்க, ''இது போதுண்டா'' என்று சந் தோஷப்பட்டவர் வீட்டைப் பூட்டிக் கொண்டு, பேரனின் கையைப் பிடித்துக் கொண்டு மெதுவாக நடக்கிறார்.

''தாத்தா இப்படி வாங்க. அப்படி வாங்க'' என்று தாத்தாவின் கையைப் பிடித்துக் கொண்டு மெதுவாக நடக்கிறான் பேரன். தாத்தாவை அழைத்துச் செல்லும் போது எச்சரித்தபடியே அழைத்துச் செல்கிறான் பேரன். கொஞ்ச தூரம் சென்றபின், தெருவை தாண்டிச் செல்ல வேண்டும். இருவரும் சேர்ந்து தெருவை கடக்க முயற் சித்த சட்டென்று திரும்பிய ஸ்கூட்டரில் அடிபட்டு கீழே விழுந்தான் பேரன். ஓவென்று கத்தி அழ ஆரம்பித்தான்.

''டேய் கண்ணா. என்னாச்சுடா?'' தாத்தா பதறி விடு கிறார். எல்லோரும் கூடி விடுகின்றனர்.

''ஏன் பெரிசு. உனக்கே உடம்பு சரியில்லை. வயசாச்சு. இந்த அழகுலே இந்த குழந்தையையும் ஏன் அழைச்சு கிட்டு வந்தே? பிள்ளையோட அப்பா, அம்மா எங்கே?''

இதற்குள் பேரன் கேவிக் கேவி அழ, மற்றவர்கள் உதவியோடு ஆட்டோ பிடித்து பக்கத்து டாக்டர் வீட் டிற்குப் போய் பேரனின் கையிலும், காலிலும் பட்ட காயத்திற்கு மருந்து போட்டு ஊசி போட்டு குழந்தையை

Vennila

வீட்டிற்கு அழைத்துச் செல்கிறார். கதவு பூட்டப்பட்டிருப்பதைப் பார்த்து, அங்கேயே வாயிலிலேயே நின்றிருந்த மகன் பாஸ்கரன் ஓடி வருகிறான்.

''என்னாச்சுப்பா? எங்கே போயிட்டு வறீங்க? கண்ணு தெரியலைன்னு சொன்னீங்க? குழந்தைக்கு என்ன?''

''என்னடா ஆச்சு'' குழந்தையைக் கேட்க, சட்டென்று அழுகிறான் மகன்.

''என்னடா கண்ணு ஆச்சு?''

''அப்பா ஸ்கூட்டர் இடிச்சிடுச்சு.'' லேசாக வாய் அருகில் கிழித்து மருந்து போடப்பட்ட இடத்தையும் காண்பித்து அழுகிறான்.

''என்னாச்சுப்பா? எப்படி அடிபட்டது? ஏன் அவன் வெளியே போனான்?'' பேரன் தாத்தாவின் கண்ணிற்காக டாக்டரை நாடிப் போனதைப் பற்றிச் சொல்ல,

''என்னப்பா இது?'' பதறுகிறான். எரிச்சலுருகிறான்.

''என்னப்பா என்ன அவசரம்? நான்தான் அழைச்சுகிட்டு போறேன்னு சொன்னேன் இல்லே. அதுக்குள்ளே உங்களுக்கு என்ன அவசரம்?'' மகன் கடிந்ததும் மௌனமாக நின்றார்.

''என்னப்பா இப்படி பண்ணிட்டீங்க? கையிலே, கால்லே, வாயிலே எல்லாம் அடிபட்டு இருக்கு.''

அப்பாவைக் கடிந்து கொண்டு, குழந்தையைத் தூக்கிக் கொண்டு உள்ளே போகிறான்.

''சாப்பிட்டியா கண்ணு?'' குழந்தையைக் கொஞ்சியபடி உள்ளே போகிறான்.

குழந்தைக்கு சாப்பாட்டை ஊட்டி, அவனைத் தட்டித் தூங்க வைத்து மனம், பதற வேலைகளைச் செய்கிறான்.



குழந்தைக்கு அடிபட்டு விட்டதே என்ற உணர்வு மூளையை மழுங்கச் செய்ய, எந்த வேலையையும் ஒழுங்காகச் செய்யத் தோன்றுவதில்லை. ஏறக்குறைய பத்து மணிக்கு குழந்தை தூங்க ஆரம்பித்தபோது தான் அப்பாவிற்கு சாப்பாடு தரவில்லை என்று உரைத்தது.

அதற்குள் மனைவியும் வந்துவிட மறுபடியும் சண்டை ஆரம்பித்தது.

''என்னாச்சு? என் குழந்தைக்கு என்னாச்சு?'' விஷயத்தைக் கேள்விப்பட்டு குதிக்க ஆரம்பித்தாள்.

''அடப்பாவி மனுஷா! போய்த் தொலைன்னு சொன்னேனே கேக்கலையே. என் குழந்தையை அநியாயமா சாகடிக்கப் பார்த்தியே. இனிமேல் நீ இங்கே இருக்கக் கூடாது. கிளம்பு. இப்பவே கிளம்பு. வா உன்னை நானே கொண்டு போய் சேர்த்துட்டு வரேன். எழுந்திரு.'' வெறி பிடித்தவள் போல் மரியாதை இல்லாமல் கத்த, ஏற்கனவே பேரன் அடிபட்ட துக்கம், பசித்த வயிறு, பயம் எல்லாம் சேர்ந்து கொள்ள, பொத்தென்று மயங்கி விழுகிறார் ஜகன்னாதன்.

## 12



''அப்பா...'' பதறி ஓடி வருகிறான் பாஸ்கரன்.

''என்னடி செய்யறே?''

''ஆமா... உங்கப்பா வேஷம் போடறாரு..'' மறுபடியும் ஆத்திரத்துடன் பட்டென்று மனைவியை அடித்து விடுகிறான்.

Vennila

''மதியம் சாப்பிட்டது. குழந்தைக்கு அடிபட்ட உடனே அவரை கவனிக்கக் கூட தோணலே. பாவம் சாப்பிடலை. மயக்கமா வேற விழுந்துட்டாரு. அப்பா பிளீஸ் எழுந் திடுங்க'' முகத்தில் தண்ணீர் தெளித்து விட்டு அவரை எழுப்புகிறான்.

''அப்பா டிபன் வாங்கிட்டு வந்திருக்கேன். சாப்பிடுங் கப்பா.''

அவர் மலங்க, மலங்க விழிக்க ஹார்லிக்ஸை கொண்டு வந்து புகட்டுகிறான். மனைவி கணவனையே எரிச்ச லோடு முறைத்தபடி நிற்கிறாள். கொஞ்சம் ஆப்பிளை வெட்டிக் கொண்டு வந்து அப்பாவிற்கு ஊட்டுகிறான். ''அப்பா இந்த வாழைப் பழத்தைச் சாப்பிடுங்க'' பிள்ளை சொல்வது காதில் கேட்டாலும் அவருக்கு நிச்சயமாக ஒன்றும் புரியவில்லை. வயிறு பசித்ததனால் கொடுத் ததை எல்லாம் சாப்பிடுகிறார்.

பின் சிறிது நேரத்தில் கண்களை மூடிக் கொண்டு உறங்கிவிட அப்பாவிற்கு போர்த்தி விட்டு வெளியே வருகிறான்.

''நீ செய்யறது நல்லா இருக்கா?'' ரொம்ப கோபம் வந்தால் ஒருமைக்கு மாறி விடுவாள் மனைவி.

''நான் செய்ததா? இல்லை நீ செய்ததா?''

''நான் என்ன செய்துட்டேன்?''

''வயசானவர், வியாதியோடு இருக்காரு. அவரைப் போ, போன்னு துரத்தறியே பாவம் இல்லே. நம்ப குழந்தை மாதிரி கவனிச்சுக்க வேண்டியவரை இப்படியா கேவலப் படுத்தறது?''

''என்ன கேவலம்? பெய்ட் ஹோம்லே நல்லா கவனிச் சுப்பாங்க. அங்கே கொண்டு போய் விடுங்கன்னு சொல்றது



தப்பா? அவருக்குன்னு எல்லா வசதியும் செய்து கொடுக் கறாங்க அங்கே நிம்மதியா இருக்கலாம். நல்லதை சொன்னா புரிஞ்சுக்கணும். அதுக்குப் பதிலாக மிருகம் மாதிரி என்னைப் போட்டு அடிச்சிட்டு... கேவலமா இருக்கு.''

''நீ ஏதேனும் உளறாதே. அவர் ஓல்ட் ஏஜ் ஹோமுக்குப் போனா செத்துடுவாரு. அவரால நம்பளை பிரிஞ்சு இருக்க முடியாது. புரிஞ்சுக்க.''

''ஏனாம். அப்படியே பிள்ளை, பிள்ளைன்னு பாசத்தைக் கொட்டி வளர்த்துட்டாரே அதுனாலயா?''

''இத பாரு அவரு பாசத்தைக் காண்பிச்சாதான் திருப் பிக் காண்பிக்கணும்னு எல்லாம் கிடையாது. அவர் எப்படிப்பட்டவரா இருந்தாலும் அவர் என்னோட அப்பா. அவர் நல்லா இருந்தாகூட அவரை தனியா விட்டுட்டு நாம வேற இடத்துக்குப் போக முடியாது. எனக்கு அவர் செய்தாதான் நான் செய்வேன்னு சொல்றது சிறு பிள்ளைத் தனம். என் அப்பா யாரும் இல்லாம கஷ்டப்படும்போது அவர் வேதனைகளை ஓரளவாவது நான் குறைக்க முயற்சி செய்யணும். தவிரவும் அப்பாவும் முன்னே மாதிரி இல்லே. நம்ப பையன்மேலே உயிரையே வச்சிருக்கார். ஏன் நம்ப எல்லார் மேலேயும் கூடப் பாசமாத்தான் இருக் கார். அவர் உடம்பு நல்லா இருந்த போது மருமக கஷ்டப் படக்கூடாதுன்னு சாமானை எல்லாம் விளக்கி வைக் கணும். காலைல அப்பப்படியே போட்டுட்டு போற வீட்டை சீர் பண்ணி வைக்கலை. பேரனை கவனிச்சுக்கலை. உம் பிள்ளை வந்ததுமே அவனுக்கு சாப்பிடக் கொடுத்து படிக்க சொல்லிக் கொடுத்து, பாடங்களை நடத்தி, உம் பிள்ளைக்கு டீச்சராக இருந்து அவர் முதல்லே எப்படி இருந்தார்? எல்லாத்தையும் தூக்கிப் போட்டுட்டு நம்ப குடும்பத்தோடு ஒன்றிப் போனவரையா அனுப்பணும்கறே.''

Vennila

"முடிஞ்ச வரைக்கும் வச்சுக்கலையா? இப்ப முடியலை."

"முடியும். நீ மனசு வச்சா முடியும். அவர் மனது கோணாம நடந்துக்க. எல்லோருக்கும் செய்யறதை அவருக்கும் கொடு. ரொம்ப சந்தோஷப்படுவாரு. வார்த்தைகளை கடுமையாகக் கொட்டாதே. ஸாப்டா பேசு. வெறுக்கும்படி அவர் எந்தத் தப்பையும் பண்ணலை. அவர் கிட்டே அன்பா இருக்கப் பாரு. எல்லா உயிரையும் நேசிக்க கத்துக்கணும். எல்லாமே உயிருமே இறைவனுடையது. அப்படின்னு நினைச்சா நேசிக்கத் தோணும். யாரையும் திட்ட தோணாது."

"அப்போ நானும் இறைவனோட ஒரு பகுதி தானே! என்னை எப்படி அடிக்க முடியுது. ஒரு தடவை இல்லே. உங்கப்பா முன்னாலே இரண்டு தடவை அடிச்சிருக்கீங்க. அடிக்கறது கேவலம்னு தெரியாதா?"

"கேவலம்தான். பெண்ணை அடிக்கறவன் பாபி. பெண்டாட்டியை அடிக்கிறவன் உதவாக்கரைன்னு எனக்கும் தெரியும். ஆனா எதுக்காக அடிச்சேன் யோசிச்சு பார்த்தியா? வேட்டைக்குப் போகிறவன் கூட சிங்கத்தை அடிக்கத்தான் போவான். புழுவையும், பூச்சியையும் எவனும் நசுக்க மாட்டான். அதைப் புரிஞ்சுக்க. அப்பா ரொம்பப் பாவம். உடம்பு சரியில்லே கண்ணு தெரியலே. அந்தக் கண்ணாடியை வாங்கிக் கொடுத்துட்டா அவருக்கு மட்டுமல்ல, நமக்கும் பாதி பிரச்சனை தீர்ந்திடும். என்னவோ அது தள்ளிகிட்டுப் போகுது. நாளைக்காவது கண்ணாடியை வாங்கிக் கொடுத்து தான் ஆகணும்."

புருஷன் சொல்ல, உர்ரென்று முகத்தை வைத்துக் கொண்டு உள்ளே செல்கிறாள். இது எதுவுமே சரியாகாது.



மாமனார் வேஷம் போடுகிறார். கண்ணாடி வந்தால் சரியாகி விடுமாம். எல்லாம் ஏமாற்று. இதை எப்படி சரி செய்வது? இந்த மாமனார் எப்படியாவது ஓல்ட் ஏஜ் ஹோமுக்குப் போய் விட்டால் மிகவும் நல்லது. எப்படிப் போவார் என்று தெரியவில்லையே. அதற்கு என்ன செய்வது? தோழி சொன்னதெல்லாம் செய்தாகி விட்டது. ஒன்றுமே நடக்கவில்லை. மற்றபடி கணவன் என்பவன் நல்லவன். ஒவ்வொரு கணவன்மார் போல் பெண்டாட்டி கூட பேசாதவனோ, பெண்டாட்டியை வெளியிடத்திற்கு அழைத்துச் செல்லாதவனோ இல்லை. பெண்டாட்டிக்கு செலவு செய்யாதவனோ இல்லை. வெளியே அழைத்துச் சென்றாலும் சிரிக்க, சிரிக்க பேசி தேவையானதை வாங்கிக் கொடுத்து ஆசையாக இருப்பான். மாமனாருக்கு உடம்புக்கு வந்ததிலிருந்து எல்லாமே மாறிப் போய் விட்டது. அப்பா நன்றாக இருக்கும்போது, பாஸ்கரன் ஒரு வார்த்தை, அரை வார்த்தை தான் பேசுவான்.

'ஹாய், ஹலோ' என்ற அளவில் தான் பழக்கம். இப்போது உடம்பு சரியில்லாமல் ஆனதிலிருந்து ஆளே மாறி விட்டான். அப்பா, அப்பா என்று ஜபிக்க ஆரம்பித்து விட்டான். தன்னுடன் பேசுவது கூட குறைந்து போய் விட்டது. எதற்கும் ஏதோ ஒரு குறை சொல்லி தன்னை அடிக்கறான். தான் மட்டும் எத்தனை வேலை செய்ய முடியும்? மனைவியும் ஒரு பெண் என்பதை மறந்து விட்டான். இப்படி நினைக்க நினைக்க ஆத்திரம் வந்தது. முதலில் இந்தக் கிழவனை இங்கிருந்து கிளப்பியாக வேண்டும். என்ன செய்வது?

இரவு முழுவதும் யோசித்து, யோசித்து தூக்கம் தொலைந்து போனது தான் மிச்சம். மறுநாள் எழுந்திருக்கும்போதே தலையை வலிக்க, எழுந்[illegible]

Vennila

லேட்டாகத்தான் எழுந்திருக்கிறாள். கணவன் எப்போது எழுந்தானோ தெரியவில்லை.

அப்பாவைக் குளிப்பாட்டி, மாற்று துணி மாற்றிச் சாப்பிடக் கொடுத்து பிள்ளைக்கும் ஊட்டி தானும் சாப்பிட்டு விட்டுக் கிளம்புகிறான். 'தன்னைச் சாப்பிட்டியா?' என்று கூட கேட்கவில்லை. ஆத்திரமும், எரிச்சலும் வந்தது. இன்று அலுவலகத்திற்குச் செல்லக் கூடாது. கிழவரை எப்படியாவது கிளப்பி அனுப்பி விட வேண்டியதுதான். கறுவியவாறே வீட்டில் இருந்தாள். பிள்ளையை பள்ளிக்குத் தயார் செய்தவன் பள்ளியில் கொண்டு போய் பிள்ளையை விட்டு விட்டு திரும்பி வருகிறான்.

''கிளம்புங்க'' உடையை மாற்றிக் கொண்டு கிழவரை தயார் படுத்துகிறாள், புவனா.

கிழவர் ஒன்றும் சொல்லத் தோன்றாமல் விழித்துக் கொண்டு நிற்க,

''ம் கிளம்புங்க. உங்களை கொண்டு போய் ஓல்ட் ஏஜ் ஹோம்லே சேர்த்துட்டு நான் ஆபீஸ் கிளம்பணும்'' என்றவாறே அவரை கிளப்ப, எதிரில் வந்து நிற்கிறான் பாஸ்கரன்.

குழந்தையை பள்ளியில் விட்டு விட்டு அப்படியே அலுவலகம் போய் விடுவான் என்று நினைத்ததற்கு மறுபடியும் வந்து நின்றது அதிர்ச்சியாக இருக்கவே விழிக்கிறாள். கிழவர் பையனையே பாவமாகப் பார்க்க,

''அப்பா... ரிலாக்ஸ்டா இருங்க. இன்னிக்கு ஆபீஸுக்கு லீவு போட்டுட்டேன். டாக்டர் சாயந்திரம் தான் வருவாரு. உங்களைக் கண்ணாடி கடைக்குக் கட்டாயம் அழைச்சிட்டுப் போகிறேன்'' என்கிறான்.



# 13



புவனாவின் முகம் வெளிறியது. 'இவன் மனிதனே அல்ல. இவன் ஆசை, இஷ்டம் எல்லாம் இவன் அம்மாவோடு போய் விட்டது, மாமியாரைதான் தான் தவறாக நினைத்தோம். அத்தனை வேலைகளையும் செய்து கொண்டு குழந்தையையும் பார்த்துக் கொண்டு வீட்டையும் நன்றாக நிர்வாகம் செய்து கொண்டு, விடுமுறை நாட்களானால் முக்கால் வாசி நாள் கணவனோடு வெளியே செல்வாள். சில நாட்கள் குழந்தையை அழைத்துச் செல்வாள். பின்னும் சில நாட்களில் குழந்தையை விட்டு செல்வாள்.

ஒரு தடவை கூட மாமியார் தன் கடமையைச் செய்யாமல் இருந்ததில்லை. ஒரு போதும் முணு முணுத்ததில்லை. சதா புன்னகை ததும்பியபடி இருப்பாள். வீடு ஒழுங்காக நடந்தது. நல்ல சாப்பாடு. நல்ல ஓய்வு, துப்புரவான வீடு. எந்தக் குறையும் இல்லாமல் சந்தோஷமான உணர்வு. வேளைக்கு சாப்பாடு கை நிறைய பணம். கூடவே இருக்கும் துணை, பொறுப்பாக எல்லாவற்றையும் கவனிக்கும் பெரியவர் என்று வாழ்க்கையே ஆனந்தமாக இருந்தது. மாமியார் இருந்தபோது அவளை இலட்சியம் செய்யத் தோன்றவில்லை. மாமியார் இறந்த பின் தான் அவள் எத்தனை வேலைகளை செய்து வந்தாள். எத்தனை அழகாக வீட்டை நிர்வகித்து வந்தாள் என்று தெரிந்தது. மாமியார் இறந்ததும் வெளியில் செல்ல நேரமில்லை. ஓய்வாக டி.வி. பார்க்க நேரமில்லை. இத்தனை ஏன்?

Vennila

கணவனிடம் நாலு வார்த்தை பேசவும் நேரமில்லை. இதுவே மனதை அறுக்க எரிச்சலும், ஆத்திரமும் வந்தது. எல்லாவற்றிற்கும் காரணமான மாமனாரை முறைத்து விட்டு நகர முற்பட, சண்டையை ஆரம்பிக்கிறான் கணவன்.

''என்னடி முறைக்கிறே? அவரை எங்க கொண்டு போய் விடலாம்னு பிளான் பண்ணிகிட்டு இருந்தே? ஓல்ட் ஏஜ் ஹோம் தானே. இத பாரும்மா இனிமே நீ இருக்கற இடத்துலே நானும் இருக்க இஷ்டப்படலே. நீ இரு. நாங்க எல்லாம் போயிடறோம்.'' மறுபடியும் முறைத்த வாறே கூறுகிறான்.

''வீடு என்னுடையது. நான் சம்பாதிச்சது. அதுனால நீ தாராளமாக கிளம்பலாம். அப்பா என்னோடதான் இருப் பாரு. அவருக்குக் கொடுக்கிற மரியாதையைக் கொடுத்து தான் ஆகணும். அவருக்குச் செய்ய வேண்டியதை செய்து தான் ஆகணும். எழுபத்தாறு வயதான எங்கம்மா, எல்லா வேலையும் செய்யலே. உனக்கு வேண்டாம்னா நீ வீட்டை விட்டு வெளியே போயிடலாம்.''

அவன் சொன்னது தான் தாமதம், இருக்கும் கோபம் அதிகமாக வெடிக்கிறாள்.

''என்னது வெளியே போகணுமா? அதைச் சொல்ற துக்கு உங்களுக்கு என்ன ரைட் இருக்கு? இப்ப சட்டம் என்ன தெரியுமா? பொம்பளைங்களை அப்படி எல்லாம் வெளியே அனுப்பிட முடியாது.''

''ஓ... அந்த திமிரா உனக்கு?''

''திமிரா? ஒழுங்கா இல்லேன்னா, என்னால உங்களை உள்ளே தள்ள முடியும். இந்த காலத்துலே பொம்பளைங்க நினைச்சா என்ன வேணா செய்ய முடியும். எங்களுக்கு



நிறைய ப்ரீடம் கொடுத்திருக்காங்க. நாங்க சின்னதா கம்ப்ளைண்ட் பண்ணினா நீங்க உங்க குடும்பத்தோடு அதாவது உங்க அப்பாவோடு சேர்ந்து உள்ளே போக நேரிடும். பத்திரம்'' சொல்லிவிட்டு விருட்டென்று அவள் உள்ளே நகர, லேசான அதிர்ச்சியோடு அவளையே பார்க்கிறான்.

திடுமென்று மனம் விழுந்தது.

மெதுவாக அங்கே இருந்த நாற்காலியில் அமர்ந்தான். 'பெண்டாட்டி சொன்னது போல் செய்து விடுவாளோ. தன்னை உள்ளே தள்ளினாலும் பரவாயில்லை. தன் தந்தையை ஏதேனும் செய்து விட்டால்... பாவம் வயதானவர். கண் வேறு தெரியவில்லை.' மனைவி மேல் ஆத்திரமும், கோபமும் வந்தது. சாதாரணமாக இருந்தால் இவள் சொன்னதை அலட்சியப்படுத்தி இருப்பான். இப்போது அப்படி அல்ல. தன் நண்பனின் ஞாபகம் வந்தது.

தன் நண்பன் அசோக் பெரிய வங்கியில் வேலை செய்பவன். பெண்டாட்டி கணினி துறையில் வேலை செய்பவள். சற்று பணக்கார இடம்தான். அசோக்கின் தாயாரும், தந்தையும் மிக, மிக நல்லவர்கள். அதுவும் அவன் தாய் அதிர்ந்து பேசாத அப்பிராணி. அவனுடைய ஒரே தங்கை பெங்களூரில் திருமணமாகி கணவனோடு இருப்பவள். அசோக்கின் மனைவிக்கும், அவனுக்கும் அவ்வப்போது சின்ன, சின்ன மனஸ்தாபங்கள் இருந்து கொண்டே இருந்தது. சின்ன, சின்ன விஷயத்திற்கும் கருத்து, வேற்றுமை மனஸ்தாபங்கள். இறுதியில் அவன் மனைவி வரதட்சணைக் கொடுமை என்று புகார் செய்து அசோக்கை மட்டுமல்ல, அசோக்கின் தாயார் அசோக்கின் தந்தை, பெங்களூரில் இருக்கும் அசோக்கி

Vennila

தங்கையின் கணவனைக் கூட விட்டு வைக்கவில்லை. எல்லோர் மேலும் புகார் செய்து, எல்லோரையும் உள்ளே தள்ளி, பதினைந்து நாள் ரிமாண்டில் வைத்து, கடைசியில் அசோக்கின் தாயார் அவமானம் தாங்க முடியாமல் இறந்தே போனார். தந்தைக்கு மனநலம் குன்றிவிட அசோக்கின் மேல் குற்றம் இல்லை என்று நிருபணம் ஆனாலும் அந்த குடும்பமே திண்டாடிப் போய்விட்டது. காவல் நிலையத்தில் பதினைந்து நாட்களும் அவர்களை அசிங்க, அசிங்கமாகக் கேட்ட கேள்வியில் பாதிக்கப்பட்டது தாய், தந்தை மட்டுமல்ல தங்கையும் தான்.

முதல் முறையாக கருவுற்றிருந்த தங்கைக்கு கருக் கலைப்பு நேர்ந்துவிட, அவளும் பிரமை பிடித்தவள் போல் தான் ஆனாள். அசோக்கின் தாயும் அவமானம் தாங்காமல் இறந்துவிட, அசோக்கின் தந்தைக்கு மனநலம் கெட்டு, பின் சரியாகி பெண்டாட்டி போய் விட்டாள் என்று தெரிந்ததுமே அவர் உயிரும் போனது. தங்கையை சுத்தப்படுத்தி தங்கை கணவரின் அவமானத்தைப் போக்க எத்தனை கஷ்டப்பட்டான். அசோக் பெண்டாட்டியிடம் இருந்து விவாகரத்து வாங்கியும் அவனுக்கு நிம்மதி இல்லாமல் போனது.

சில வருடங்கள் கழித்து அவனுக்கு வேறு திருமணம் புரிய தங்கை முயற்சி செய்தபோது, அவனுக்கு பெண் கொடுக்கவே மறுத்தனர். கடைசியில் போன வருடம் தான் உறவில் ஒரு பெண் கிடைக்க மறுபடியும் திருமணம் செய்து கொண்டான் அசோக். அவனும் அதிக நாட்கள் வரை திருமணமே வேண்டாம் என்று நடுங்கிப் போனான். இதெல்லாம் மனதில் ஓட, சற்று பயத்துடனே அமர்ந்திருந்தான் பாஸ்கரன்.

இப்போது என்ன செய்வது? ஒரு வேளை இவள் போலீஸுக்குப் போய் விட்டால் அப்பா என்ன ஆவார்?



நடுங்கியபடியே அமர்ந்திருக்கிறான். மனம் குறுகியது. என்னாகும்? இதுவரை இல்லாத பயம் இப்போது தோன்றியது. மௌனமாக அமர்ந்திருந்தான். இப்போது அவளைத் திட்டவோ அடிக்கவோ நிஜமாகவே பயமாக இருந்தது. யோசனையுடன் அமர்ந்திருந்தான். என்ன நடக்கும்? என் பிடி அவள் கையில் போல் நடந்து கொள்கிறாளே. எதையும் செய்யக்கூட யோசனையாக இருக்கிறது.

சரி அவள் ஆபீசுக்குப் போகட்டும். பிறகு நிதானமாக என்ன செய்ய வேண்டுமென்று யோசிக்கலாம். இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? இந்த சனியன் வேலைக்கு ஒழிந்ததும், பேசாமல் வீட்டைக் காலி செய்து வேறு வீட்டுக்குப் போய் விட வேண்டியது தான். கூடவே இருந்தால் தானே பிரச்சனை. இவள் போலீஸில் புகார் செய்து அவர்கள் நம்மைப் பிடிக்க வரு முன் ஜாமீன் கூட வாங்கி விடலாம்.

நினைத்தவன், மனைவி எப்போது போகப் போகிறாள் என்று காத்திருக்கிறான். பத்து, பதினொன்று, ஏன் பன்னிரண்டு கூட அடித்தது. மனைவி புறப்படும் வழியாகத் தெரியவில்லை. அதிர்ந்து போய் அமர்ந்திருக்க, மனைவி நிதானமாகக் குளித்துவிட்டு வந்து சமைப்பதைப் பார்த்தவன், அதிர்ந்து போகிறான்.



## 14

பாஸ்கரனுக்கு முதலில் எழுந்த ஆக்ரோஷம் எல்லாம் குறைந்து போய் ஒருவித பயம் எழுந்தது. சண்டை



Vennila

போடாமல் இவளிடம் பதமாகப் பேச வேண்டும். பழைய படி அப்பாவிற்கு செய்தால் கூட போதும். அவரைப் பட்டினி போடாமல் ஓரளவு கவனித்துக் கொண்டால் போதும். அதற்கு என்ன செய்வது?

அப்பாவிற்கு கண் தெரிந்தால் பிரச்சனைகள் நிச்சயமாக ஒய்ந்து விடும். முதலில் இன்று மாலை கண் டாக்டரிடம் அழைத்துச் செல்ல வேண்டும். அதற்கு முன் மனைவியிடம் பேச வேண்டும். வெளியில் சென்று அப்பாவிற்கு ஓட்டலிலிருந்து சாப்பாடு கொண்டு வந்து கொடுத்து சாப்பிட வைத்து, தானும் ஒரு வாய் சாப்பிட்டு விட்டு மெதுவாக வெளியே வருகிறான். பெண்டாட்டி கதை புத்தகத்தை வைத்துக் கொண்டு நாற்காலியில் அமர்ந்து சாப்பிடுவது தெரிந்தது. இப்ப போய் பேசலாமா? யோசித்தவாறே மெதுவாகச் சாப்பிடும் மேசை அருகில் செல்கிறான். மனைவி இவனை கவனித்த மாதிரி தெரியவில்லை. அவள் ஏதோ கதை புத்தகத்தில் மூழ்கி இருந்தாள் போல் இருந்தது.

அருகே சற்று நேரம் சும்மா நின்று கொண்டிருந்தவன் பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தான்.

"புவனா?" அவன் கூப்பிட்டதற்கு எந்த பதிலும் இல்லை. அவள் மும்முரமாக சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

"புவனா. உன்னைத்தான் உங்கிட்டே பேசணும்."

"எல்லாம் காதுலே விழுந்தது சொல்லலாம்." அவள் அலட்சியமாகக் கூற,

"புவனா என்னம்மா ஆச்சு? ஏம்மா இப்படி நடந்துக்கறே?" நாம பழையபடியே இருந்துட்டுப் போயிடுவோமே."



"என்ன சொல்லறீங்க? பழையபடி எல்லா வேலையையும் நான் செய்துகிட்டு வாயைத் திறக்காம இருக்கணும். அப்படித்தானே."

"அப்படி இல்லேம்மா. நீ தனியாக எந்த வேலையையும் செய்ய வேண்டாம். மொத்த வேலையும் நான் செய்யறேன். அப்ப ஒண்ணும் பிரச்சனை இல்லை இல்லே" அவன் சொல்லச் சொல்ல,

"உங்க அப்பா இருக்கற வரைக்கும் பிரச்சனை தான்."

"ஏம்மா இப்படிப் பேசறே? நீ செய்யறது தப்புன்னு கூடவா தெரியலை. உம் மனசாட்சி உன்னை உறுத்தலை."

"மனசாட்சியா? உங்களுக்கு அது இருக்கா? எத்தனையோ கஷ்டப்பட்டுட்டேன். இனிமே எதுவும் நடக்காது. ஒண்ணு நான் இருக்கணும். இல்லே உங்கப்பா இருக்கணும்."

மறுபடியும் வாக்குவாதம் ஆரம்பிக்க கருத்து வேற்றுமை பெரியதாகி சண்டை வலுத்தது. இருவரும் பேசி பேசி சண்டை ஆரம்பித்தது. அவன் எத்தனை சொல்லியும், அவள் எதற்குமே ஒத்துக் கொள்ளவில்லை. வாக்குவாதம் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தது. நிற்கும்படியாகத் தோன்றவில்லை. பேசி, பேசி அவன் குரல் தான் கட்டிப் போயிற்று. அன்று மகன் வரும் வரை இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். இதே சிந்தனையில் மனது உழல, டாக்டரிடம் அழைத்துப் போக வேண்டும் என்பதே மறந்து போனது.

பின்னும் நான்கு நாட்கள் சென்றது. மகன்தான் ஆரம்பிக்கிறான். "அப்பா, தாத்தா பாவம்பா, நான்தான்பா கண்ணாடியை உடைச்சேன். டாக்டர்கிட்டே காமிக்கலாம்பா. அவர் என் கூட விளையாடக்கூட முடியாம கஷ்டப் படறாரு. எனக்கு பாடம் சொல்லித்தர முடியலே. பாவம்பா

Vennila

அவர். கண்ணுலேந்து தண்ணி வந்து கிட்டே இருக்கு. நேத்து கூட அழுதாருப்பா'' பிள்ளை சொல்லச் சொல்ல,

மனைவியிடம் இருந்த கருத்து வேற்றுமையில் தந்தையாரைப் புறக்கணித்தது எத்தனை தவறு? தான் ஏன் இப்படி எல்லாவற்றையும் மறந்து விடுகிறோம். சின்ன விஷயம்கூட தன்னால் ஏன் செய்ய முடியாமல் போய் விட்டது?

இன்னும் மனைவியிடம் எதுவும் சரியாகவில்லை. பாத்திரத்தை போட்டு உடைக்கிறாள். தனக்கும், பிள்ளைக்கும் மட்டும் சமைத்துக் கொள்கிறாள்.

இரவில் வெகு நேரம் கழித்து தான் வீடே திரும்புகிறாள். அவளின் பேச்சில் ஒவ்வொரு முறையும் போலீஸில் உன்னை மாட்டி விடுவேன் என்ற தொனி ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

இப்போது பழையபடி பெண்டாட்டியிடம் சண்டை போடா விட்டாலும் சற்று அடக்கித்தான் வாசிக்கிறான். அன்று மாலை சற்று சீக்கிரம் வந்து விட்டான். 'இன்று அப்பாவை டாக்டரிடம் அழைத்துச் செல்ல வேண்டும் பையன் வந்து விடட்டும். அவனுக்கும் டிபனை வாங்கிக் கொடுத்து அழைத்துப் போகலாம்' என்று நினைக்கிறான். பாலைக் காய்ச்சுகிறான். ஓட்டலிலிருந்து வாங்கி வந்த டிபனை எடுத்து வைக்கிறான்.

அப்பாவின் அறைக்குப் போய் பார்க்கிறான். தூங்கிக் கொண்டு இருக்கிறார். வழக்கமாகத் தூங்க மாட்டாரே. கதவில் சாவியை வைத்துத் திறக்கும் போதே,

'''என்னப்பா பாஸ்கரா வந்துட்டியா'' என்பாரே. இன்று என்னாயிற்று? மதியமே சாப்பாட்டை சரியாகச் சாப்பிட வில்லை. பியூன் சொன்னானே. ஒரு வேளை உடல் நிலை சரியில்லையா?'



''அப்பா'' மெதுவாகக் கூப்பிடுகிறான்.

''சீ... பாவம்... தூங்கட்டும். வயோதிகம். உடல் நலம் சரியில்லை. மன உளைச்சல் வேறு. இன்னும் சற்று நேரம் பொறுத்து எழுப்பலாம். நினைத்தவன் உள்ளே எல்லாவற்றையும் ஒழுங்காக வைக்க ஆரம்பித்தான். காபி, டிகாஷன் வேறு போட்டு வைத்தான்.

இதற்குள் பையன் வந்துவிட, அவனுக்கு முகம், கை கால் கழுவி உடை மாற்றி போர்ன்விடா கலந்து கொடுத்து தான் வாங்கி வந்த பீட்ஸாவை பையனுக்குத் தர.

''ஐ... பீஸா'' என்றபடி குதிக்கிறான் பையன்.

டிபனை சாப்பிட்டுவிட்டு ''அப்பா... தாத்தாவுக்கு'' என்று குதிக்கிறான்.

''தாத்தாவுக்கு பீஸா ரொம்பப் பிடிக்கும்பா...'' மகன் சொல்ல, தானும் ஒரு வாய் சாப்பிட்டுவிட்டு அப்பாவிற்கு டிபனும், காபியையும் எடுத்துக் கொண்டு செல்கிறான்.

''அப்பா எழுந்திருங்க. டைம் ஆச்சு. டாக்டரைப் பார்க்கப் போகலாம். வாங்க எழுந்திருங்க. முகத்தைக் கழுவி விட்டு வந்து டிபன், காபி சாப்பிடுங்க...'' கிட்டே வந்து எழுப்ப, எழுப்ப உடலில் அசைவின்றி அவர் படுத்திருப்பதைப் பார்த்து அதிர்ந்து போகிறான்.

''அப்பா என்னாச்சுப்பா... அப்பா...'' அவன் கத்த,

''தாத்தா... தாத்தா...'' பேரன் கத்தி கூப்பிட, கண்ணை மூடியவாறே உயிரற்ற உடல் போல் எந்த அசைவுமில்லாமல் சாய்ந்த மரக்கட்டை போல் இருக்க, ''அப்பா... அப்பா'' என்று அழுதவாறே அடுத்த சில நிமிடங்களில் அப்பாவைத் தூக்கிக் கொண்டு பையனையும் அழைத்தவாறே, மருத்துவமனைக்குச் செல்கிறான்.

Vennila

புவனா அன்று அலுவலகத்தில் தோழியிடம் பேசிக் கொண்டிருக்கிறாள். தன் பிரச்சனைகள் ஓரளவு தீர்ந்ததைப் பற்றியும் பேசுகிறாள்.

"நீ சொன்ன மாதிரி போலீஸ் அப்படி, இப்படின்னு குண்டு போட்டதும் மனுஷன் அலண்டுட்டான். அது வரைக்கும் என்னை அடிச்சுகிட்டு இருந்தவன் அப்படியே பயந்து போயிட்டான். ஆனா எத்தனை செஞ்சாலும் அந்தக் கிழவன் அசர மாட்டேங்குது. கிட்டத்தட்ட ஒரு வாரமா நானும் போராட்டம் பண்றேன். புருஷன் கொஞ்சம் பயந்து போனாலும், ஒண்ணுமே நடக்காத மாதிரி ஹோட்டல்லேர்ந்து சாப்பாடு வாங்கிட்டு வரதும், அப்பனுக்கும், பிள்ளைக்கும் ஊட்டறதும் என்னை கொஞ்சம் கூட மதிக்காம நடக்கறதும் எரிச்சலை வரவழைக்குது..." புவனா சொல்லச் சொல்ல பேச ஆரம்பிக்கிறாள் தோழி.

"நான் சொல்றதைக் கேளு. இன்னிக்கு வீட்டுக்குப் போனா ஸ்டிரிக்டா சொல்லிடு. கிழவரை கட்டாயம் ஓல்ட் ஏஜ் ஹோம்லே விட்டாகணும்னு புருஷன் கிட்டே பேசு. போர்ஸ் பண்ணு. போலீஸைப் பத்தி சொன்னவுடனே உம் புருஷன் பயப்பட்டான் இல்லே. அதை வச்சுகிட்டு பய முறுத்து. கொண்டு போய் விடலேன்னா போலீஸுக்குப் போவேன்னு சொல்லு."

தோழி உசுப்பேற்றிவிட புவனாவிற்கும் இத்தனை நாள் இருந்த ஆட்டத்திற்கு முடிவு கட்ட வேண்டும் என்று தோன்ற, சற்று சீக்கிரம் வீட்டிற்குக் கிளம்பி விடுகிறாள். வீட்டை நெருங்கியதும், வீடு பூட்டியிருக்க எரிச்சல் உருகிறாள்.

'கண் டாக்டரிடம் அழைத்துப் போவதாகச் சொன் னாரே. போயிருப்பார்கள் போலிருக்கிறது. வரட்டும்' பல்லைக் கடித்தவாறே இரவு நேர சமையலில் ஈடுபடுகிறாள்.



டாக்ஸி வரும் ஒலி கேட்டு கறுவிக் கொண்டு காத்திருக் கிறாள் புவனா. 'இன்றைக்கு எல்லோருக்கும் சமையல் செய்தாகி விட்டது. இன்றைக்கு ஒரு நாள் கிழவருக்கு சாப்பாடு போட்டு விடலாம்.' நினைத்தவாறே கதவைத் திறந்தவள், அழுதவாறே பாடியை எடுத்து வந்த கண வனைப் பார்த்து அதிர்ந்து போகிறாள்.

"என்னாச்சு?"

"முடிஞ்சுது எல்லாமே முடிஞ்சுது. ஒரு வழியா மேலே போயிட்டாரு பாரு" சொல்லிவிட்டுத் தலையில் அடித்துக் கொண்டு அழுகிறான்.

"கண்ணாடி, கண்ணாடின்னு கேட்டுகிட்டு கடைசி யிலே அது கிடைக்காமலேயே போய் சேர்ந்துட்டாரு. வயசானவங்க எத்தனை நாள் இருக்கப் போறாங்க. இருக்கற வரைக்கும் நல்லா வச்சிருக்கக் கூடாதா? பாவி..." தலையில் அடித்துக் கொள்கிறான்.

"இப்ப... போயிட்டாரு. ஒரு வழியா போயிட்டாரு. ஓல்ட் ஏஜ் ஹோமுக்கு அனுப்பணும்னு சொன்னியே. உன் விவகாரமே வேண்டாம்னு மேலே போயிட்டாரு."

சொல்லி புலம்பியவாறே தலையில் அடித்துக் கொண்டு அழும் கணவனையும் 'தாத்தா... தாத்தா' என்று தாத்தா வின் உடலைக் கட்டிக் கொண்டு அழும் பிள்ளையையும் பார்த்து, 'இப்படி சீக்கிரமே போய் விடுவார் என்று தெரியாதே. தெரிந்திருந்தால் இருந்த வரைக்கும் அவரை நன்றாக வைத்துக் கொண்டு இருந்திருக்கலாமே? அனா வசியமாக அவரையும் கொடுமைப்படுத்தி, புருஷனின் மனதிலும் காயத்தை ஏற்படுத்தி, இனிமேல் எங்கள் உறவு சரியாக எத்தனை நாட்கள் ஆகுமோ?' மனம் வேதனைப்பட, அதிர்ந்து போய் நிற்கிறாள் புவனா.

Vennila

# புரியாத வயசு

1



கண்ணாடி முன் நின்று புருவங்களை சீர்திருத்திக் கொள்கிறாள் சுஷ்மா. பேர் அண்ட் லவ்லியை எடுத்து கன்னத்தில் தீற்றிக் கொண்டாள். அதன் மேல் லேசான பவுடர் போட்டுக் கொண்டு, லிப்ஸ்டிக்கை உதடுகளில் தீற்றிக் கொண்டு முகத்தை அப்படியும், இப்படியும் பார்க்கிறாள். முகம் சற்று வெளுத்தது போல் தோன்றியது. தலைமயிரை விரித்துவிட்டு வார ஆரம்பிக்கிறாள். இடுப்புக்கு கீழே நீளமாக, அடர்த்தியாகத் தொங்கிக் கொண்டிருக்கும் தலைமயிர். சுஷ்மாவிற்கு எரிச்சலாக வந்தது. தன் பிரண்ட்ஸ் எல்லாம் தோள் வரைக்கும் அழகாக வெட்டி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை அம்மா ஒத்துக் கொள்ளவே மாட்டார்கள். லேசான ஆத்திரத்துடன் தலையை அழுத்தி, அழுத்தி வாரிக் கொண்டிருக்கிறாள்.

இத்தனையும் பார்த்தவாறே அன்றைய செய்தித் தாளிலும், பாதி கண்ணை செலுத்தியவாறே இருக்கிறான்



சுவாமி. ஒரு அரைமணி நேரமாக பெண் கண்ணாடி முன் நின்று மேக் அப் போட்டுக் கொள்வதும், இப்படியும், அப்படியும் தன் அழகை பார்த்துக் கொண்டிருப்பதையும் பார்த்தாலே எரிச்சல் வந்தது.

ஒன்பதாவது படிக்கும் பெண்ணிற்கு எதற்கு இத்தனை அலங்காரம்? படிக்கும் நேரத்தை யாராவது வீணடிப்பார்களா? லேசான ஆத்திரம் எழுந்தது. தன் பெண் தன்னைப் போல், தன் மனைவியைப் போல் மாநிறம்தான். ஆனால் தெறித்துவிட்டது போன்ற மூக்கும், கண்களும் பெண்ணை நினைத்தாலே அவனுக்கு பூரித்துப் போகும். இத்தனை நாட்கள் வகுப்பில் முதல் பத்து இடத்தில் தான் பெண் வந்திருக்கிறாள்.

கடந்த இரண்டு மாதமாக பெண் நாற்பதாவது ரேங்க் தான் வாங்குகிறாள். எத்தனையோ அடித்தாயிற்று. மிரட்டியாயிற்று.

''நான் நல்லாதான் படிக்கிறேன். டீச்சருக்குத்தான் என்னைக் கண்டா பிடிக்கலை.'' என்கிறாள் பெண். பெண்ணை எதுவும் சொல்ல பிடிக்கவில்லை. சாதாரணமாக அவன் வீட்டில் இருந்தாலே சிம்ம சொப்பனம் தான். கத்துவான். மிரட்டுவான். சில நேரங்களில் அடிக்கக் கூட போயிருக்கிறான். ஒரே பெண் என்று செல்லம் எல்லாம் கொடுத்ததில்லை. அப்பா இருக்கும் போதெல்லாம் பெண் அடக்கியே வாசிப்பாள். இப்போது கூட அப்பா எங்கோ வாயிலில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருக்கிறார். இப்படி நினைக்கவே தான் மாய்ந்து, மாய்ந்து அலங்காரம் செய்து கொண்டு இருக்கிறாள்.

''ஏய் மேனகா... ஏய்...'' கத்துகிறான் சுவாமி.

விடியற்காலையில் எழுந்து, காபி போட்டு, டிபன் செய்து, மதியம் எடுத்துப் போவதற்கு சாப்பாடும் செய்து,

Vennila

தங்கள் மூன்று பேருக்கும் டிபன் பாக்ஸில் போட்டு வைத்து இதன் நடுவில் கணவனுக்கு காபி கொடுத்து, பேப்பர் எடுத்துக்கொடுத்து, வெந்நீரை பதமாக விளாவி வைத்து, அவன் கூப்பிட்ட குரலுக்கு எல்லாம் ஓடி, ஓடி செய்து விட்டு அலுவலகத்திற்கு கிளம்புவாள் மேனகா.

தொலைபேசியில் உயர் அதிகாரியாக இருப்பவள். கணவன் வங்கியில் உயர் அதிகாரி. அவன் பீமசேனன் போல் இருப்பான். அவள் வற்றல் குச்சிதான். தாய், தந்தையர் பார்த்து வைத்த திருமணம். உடல் பொருத்தம், மனப்பொருத்தம் என்று எந்த பொருத்தமே அவர்களிடத்தில் இல்லை. அவன் ஆறடி. அவள் ஐந்தடிதான் இருப்பாள். அவள் வேலை என்பது அவளுக்கு ஒரு வடிகால். தன் சோகங்களை மறக்கச் செய்யும் ஒரே துணை அது.

கணவன் தான் வாங்குகின்ற சம்பளத்தை, அப்படியே வங்கியில் போட்டு சேமித்து விடுவான். வீட்டிற்கு, படிப்பிற்கு என்று எல்லாவற்றிற்கும் அவள்தான் பணம் தர வேண்டும். புருஷன் தான் சம்பாதித்த பணத்தைக் கொண்டு இரண்டு வீடுகள் வாங்கி போட்டிருந்தான். தான் சொத்து வாங்கத்தானே, வீட்டுச் செலவையெல்லாம் தன்னைச் செலவழிக்கச் சொல்கிறான் என்று மனதை தேற்றிக் கொள்வாள். 'இன்று கணவனுக்கு காபி கொடுத்தாகி விட்டது. எதற்கு கத்துகிறான்? '

''என்னங்க என்ன விஷயம்?'' என்றவாறே ஓடி வருகிறாள்.

முன்பக்கம் லேசான நரை. முதுமையைப் பூசிக் கொண்டிருக்கும் முகம். தலை வாரப்படாமல், பவுடர் போன்ற ஒப்பனைகள் எதுவும் இல்லாமல் வந்து நிற்கிறாள் மேனகா. இன்னும் வேலைகள் இருக்கின்றன. முடிக்க வேண்டும். இவனுடன் பேசிக் கொண்டு நின்றிருந்தால்



வேலை கெட்டுவிடும். தான் வேறு அலுவலகத்திற்கு கிளம்ப வேண்டும். நினைத்தவாறே, லேசான எரிச்சலோடு நிற்கிறாள் மேனகா.

''அங்கே பார்த்தியா?'' பெண் இன்னும் தலை மயிரை வாரிக் கொண்டிருப்பதைக் காண்பிக்கிறான். மேனகாவிற்கு எரிச்சல் அதிகமாயிற்று.

''என்னாச்சுங்க? அவ தலையைத் தானே வாரிகிட்டு இருக்கா?''

''அதைத்தான் கேக்கறேன்? எத்தனை நேரம்? படிக்கற வயசுலே என்னடி மேக் அப்?''

''என்ன பேசறீங்க?'' மேனகா லேசான எரிச்சலோடு சற்று பதைத்துப் போய் கேட்கிறாள்.

''பொண்ணை வளர்த்து வச்சிருக்கிற இலட்சணத்தைப் பார்த்தியா?'' வள்ளென்று விழுகிறான். சோர்ந்து போகிறாள் மேனகா. பெண்ணிற்கும், அப்பாவிற்கும் எப்போதுமே எட்டாம் பொருத்தம் தான். பெண் எது செய்தாலும் குற்றம். பெண்டாட்டி நின்றால் குற்றம். நிமிர்ந்தால் குற்றம் என்று நினைக்கும் கணவன்.

இவன் எத்தனை அடக்க முயல்கிறானோ அத்தனை எதிர்ப்பைக் காட்டுகிறது பெண். இவர்கள் இரண்டு பேருக்கும் நடுவில் கிடந்து தான் மாட்டுகிறோம்.

''சுஷ்மா.. சுஷ்மா...'' கத்துகிறாள் மேனகா.

''என்னம்மா?'' பெண் பதிலுக்கு கத்துகிறாள்.

''அப்பா கூப்பிடுகிறார் பார்'' சொல்ல, அடுத்த நிமிடம் சிட்டாகப் பறக்கிறாள் பெண்.

பெண்ணுக்கு டிபன் பாக்ஸை கொடுத்துவிட்டு, அவளை அனுப்பிவிட்டு தான் உள்ளே வருகிறாள் மேனகா.

''ஏய் வெந்நீர் எடுத்து வைக்கலே.'' கணவன் வள்ளென்று விழ, அவனுக்கு வெந்நீர் எடுத்து வைத்துவிட்டு,

Vennila

அவனுக்கு டிபனை தந்துவிட்டு, சாப்பாடு கட்டி அனுப்பி வைத்துவிட்டு, தனக்கு அவசரம், அவசரமாக டிபனை வாயில் கொட்டிக் கொண்டு, சாப்பாட்டைக் கொஞ்சம் கட்டிக் கொண்டு டிரஸ் செய்தபடி ஓடுகிறாள்.

கணவன் மோட்டார் பைக் வைத்திருக்கிறான். அதில் அழைத்துச் செல்லமாட்டான்.

''நான் வேற வழியிலே போகணும். சுத்திகிட்டு எல்லாம் போக முடியாது.'' என்று மறுத்துவிடுவான். மேனகா அரக்க, பரக்க ஓடி வருகிறாள். நல்லவேளை பஸ் வர, இன்னும் ஐந்து நிமிடம் இருக்கிறது.

''என்ன இன்னிக்கும் லேட்டா?'' தினமும் பஸ்ஸில் இவளோடு செல்லும் ரேவதி கேட்க, பெருமூச்சு விட்ட வாறே ''ஆம்'' என்று தலை அசைக்கிறாள் மேனகா.

சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு, மறுபடியும் பேச ஆரம்பிக்கிறாள் ரேவதி அவள் வீட்டுக் கதையைச் சொல்ல, மேனகா தன் வீட்டு விஷயத்தை வருத்தத் தோடு பகிர்ந்து கொள்கிறாள்.

''இந்த காலத்துலே பெண்களுக்கு எத்தனையோ பிரீடம் கொடுத்திருக்காங்க. நம்ப வளர்ந்த மாதிரி எல்லாம் இப்ப வளர்க்க முடியாது. எங்க வீட்டுக்காரருக்கு எதுவுமே புரியமாட்டேங்குது. இன்னும் பழைய பஞ்சாங்கமாகவே இருக்கார். நாம அடக்க, அடக்க எதுவுமே கைக்கு மீறிப் போயிடும். அது இவங்களுக்கு புரியவே மாட்டேங்குது.'' என்றவாறே சொல்லி வருத்தப்படுகிறாள்.

அன்று அலுவலகம் சென்று தன் வேலையில் மூழ்கி விட, அவளுக்குத் தொலைபேசி வருகிறது.

''ஹலோ'' பெண் படிக்கும் பள்ளியின் தலைமை ஆசிரியரிடமிருந்து தொலைபேசி வருகிறது.




''சுஷ்மாவோட மதர்தானே.''

''சொல்லுங்க மேடம்.''

''உங்க பொண்ணு ஏன் ஒரு வாரமா ஸ்கூலுக்கு வரலே. உடம்பு சரியில்லையா ஏன்? லீவ் லெட்டரும் தரலை ஏன்?'' கேட்க, கேட்க.

''என்னது ஒரு வாரமா ஸ்கூலுக்கு வரலியா?'' அதிர்ந்து போகிறாள் மேனகா.

## 2



மேனகாவிற்கு ஒரு நிமிடம் ஒன்றும் புரியவில்லை - என்ன இது? சுஷ்மாவின் ஹெட்மிஸ்ட்ரஸ் இப்படி பேசுகிறார். இன்று கூட பெண் பள்ளிக்கு சீக்கிரம் போக வேண்டும் என்று டப்பாவில் எல்லாவற்றையும் கட்டிக் கொடுத்து அனுப்பினாளே. பெண் காலையி லேயே புறப்பட்டு போய்விட்டாளே. ஒரு வேளை வேறு யாரையோ நினைத்துக் கொண்டு பேசுகிறார்களா?

''மேடம் நீங்க சொல்றது எனக்கு ஆச்சரியமா இருக்கு. தினமும் ஸ்கூலுக்கு கரெக்ட் நேரத்துக்கு கிளம்பிடு வாளே. இன்னிக்கும் அவளை அனுப்பிச்சிட்டு தான் நான் ஆபீசுக்கே வந்தேன்.''

எதிர்முனையில் தலைமை ஆசிரியை எரிச்சல் படுவது தெரிந்தது. ''நாங்க என்ன வேணும்னா சொல்லறோம்?'' என்று ஒரு நொடி எரிச்சல் பட்டவள், பின் குரலை சற்று மிருதுவாக்கிக் கொண்டு சொல்கிறாள்.

''இதுதாம்மா பெத்தவங்க கிட்டே இருக்கற ஒரு பெரிய வீக்னஸ். தன் குழந்தைகளை நம்பற அளவிற்கு அவங்க வேற யாரையும் நம்பறதில்லை.'' சட்டென்று மறுபடியும் தான் சொல்ல வேண்டியவைகளைச் சொல்கிறாள்.

Vennila

"இத பாருங்க மேனகா ஒரு வாரமா உங்க பொண்ணு வரலை. அதற்குப் பதில் சொல்லியாகணும். இன்னும் இப்படியே - ஆப்சென்ட் ஆகிகிட்டே இருந்தா ஸ்கூலை விட்டு வெளியே அனுப்பிடுவோம். டிஸ்மிஸ் பண்ணிடு வோம். நீங்க உங்க பொண்ணுக்கு வேற ஸ்கூல்ல இடம் பார்க்க வேண்டி இருக்கும்." சற்று கறாறாக சொல்லுகிறாள் தலைமை ஆசிரியை.

"நோ மேடம். அப்படி எதுவும் செய்துடாதீங்க. இனிமே அவ ஒழுங்கா ஸ்கூலுக்கு வருவா. என்ன விஷயம்னு தெரியலை சாரி." ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. இந்தப் பள்ளியில் சேர்க்க தான் எத்தனை கஷ்டப்பட் டோம். ஐந்தாவது வரை வீட்டின் அருகில் இருக்கும் பள்ளியில் பெண்ணை சேர்த்திருந்தாள். ஆறாவது ஒரு நல்ல பள்ளியில் படிக்க வைக்க வேண்டுமென்று புகழ் பெற்ற இந்த பள்ளியில் சேர்க்க, எத்தனை கஷ்டப்பட் டிருக்கிறாள். பெண்ணோடு தானும் அல்லவா, பல மாதங்கள், பல பாடங்களை படிக்க நேர்ந்தது. பெண் தேர்வில் நல்ல மார்க் எடுத்தது மட்டுமில்லாமல் பெற் றோர்களையும் அல்லவா இன்டர்வியூ செய்தார்கள். கணவனும் வந்தே ஆக வேண்டும் என்று பள்ளி நிர்வாகம் சொல்ல, முதல் தடவை கணவன் பள்ளிக்கு வரவே இல்லை. பின் கணவன், கையில், காலில் விழுந்து, கணவனுடன் பேசி, கோவிலுக்கு எல்லாம் நேர்ந்து கொண்டு ஒரு வழியாக பெண்ணுக்கு அந்தப் பள்ளியில் இடம் கிடைத்தது.

இத்தனை நாட்கள் பெண் ஒழுங்காகத்தானே போய்க் கொண்டிருந்தாள். இன்று என்ன வந்துவிட்டது? அதன் பிறகு வேலையில் மனமே செல்லவில்லை. ஒரே தவிப்பாக இருந்தது. பெண்ணைக் கண்டு பிடித்து நாலு சாத்து சாத்த வேண்டும் போல் தோன்றியது.



சாதாரணமாக கணவன் அனுசரணையாக இருந்தால் அவனிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தன் ஆதங்கத்தை கஷ்டத்தைச் சொல்லி அழுதிருக்கலாம். ஆனால் தன் கணவனிடம் எதுவும் சொல்ல முடியாது. சொல்லிவிட்டால் போதும். வெட்டுகிறேன், குத்துகிறேன் என்று ஆரம்பித்து, தன்னையும் சேர்த்து மிதிப்பான்.

முதலில் பெண் எங்கே இருக்கிறாள் என்று கண்டு பிடிக்க வேண்டும். அவசரம், அவசரமாக பெண்ணை செல்லில் தொடர்பு கொள்கிறாள். வாடிக்கையாளர் தொடர்பு கொள்ளும் எல்லையில் இல்லை என்று வர எரிச்சலடைகிறாள். எத்தனை முறை போன் செய்வது?

தலைமை ஆசிரியை சொல்வது போல், தன் பெண் ஏதோ ஒரு திருட்டுத்தனம் செய்கிறது. ஒருவேளை காதல், கண்றாவி ஏதேனும் இருக்குமோ. நினைக்கும் போதே தூக்கி வாரிப்போடுகிறது. இன்னும் பதினைந்து வயது கூட நிரம்பவில்லை. அதற்குள் காதலா? ஒரு நிமிடம் எகிறிக் குதித்த மனதை அடக்குகிறாள்.

முதலில் விஷயம் என்னவென்று தெரியாமல் தான் ஏன் தவறாகவே கற்பனை பண்ணிக் கொள்ள வேண்டும். பார்ப்போம். பள்ளிக்கு போகிறாளோ இல்லையோ சரியாக ஐந்து மணிக்கு வீடு வந்து சேர்ந்துவிடுகிறாள். தான் வருவதற்கு அரை மணி முன்பாகவே வந்து விடுவதாக சொல்லி இருக்கிறாள். இன்று பிடித்துக் கொள்வோம். அதற்கு மேல் வேலையில் மனம் ஓடவில்லை. அரை நாள் விடுப்பு எழுதிக் கொடுத்துவிட்டு, வீட்டிற்கு வந்து சேர்கிறாள். பெண் வரும்வரை ஒரே தவிப்புதான்.

சரியாக ஐந்து மணிக்கு, சைக்கிளில் பெண் வருகிறாள். உள்ளே நுழைந்ததுமே பொறுமை இல்லாமல் கத்துகிறாள் மேனகா.

Vennila

"எங்கேடி சுத்திட்டு வரே?"

"என்னம்மா நீ ஸ்கூலுக்கு போயிட்டு வரேன்."

"ஸ்கூலுக்கா? எந்த ஸ்கூலுக்கு?"

"என்னம்மா என்னென்னவோ பேசறே?"

பெண் இப்படிக் கேட்க, கோபம் வந்து பட்டென்று அடித்து விடுகிறாள்.

"பொய்யா சொல்றே?"

அம்மா திடீரென்று அடித்ததால் சுஷ்மா கண்ணீர் விடுகிறாள். அதிர்ச்சி அடைகிறாள். அடிபட்ட கன்னத்தை தடவிக் கொள்கிறாள். அம்மாவையே லேசாக முறைத்துப் பார்க்கிறாள்.

"என்னடி முறைக்கறே? எங்கே போன சொல்லு. உங்க எச்.எம். போன் பண்ணி, "இன்னும் கொஞ்சநாள் நீ ஸ்கூலுக்கு வரலைன்னா பேரை எடுத்துடுவேன்னு" சொன்னாங்க. ஸ்கூலுக்கு போறதா சொல்லிட்டு எங்கேடி போறே?" பெண்ணை உலுக்குகிறாள்.

"சொல்லு." பெண் இறுகிய முகத்துடன் அம்மாவையே பார்க்கிறாள்.

"என்னடி இத்தனை கேக்கறேன் பேசாம இருக்கே, உங்கப்பன் போல நெஞ்சழுத்தம் சொல்லு." அவள் கத்த, கத்த பதில் பேசாமலேயே நிற்கிறாள்.

"ஏண்டி பேச மாட்டேங்கறே? எவனையாவது லவ், கிவ் பண்றியா என்ன?"

பெண் அதற்கும் பதில் பேசாமல் இருக்க,

"இத பாருடி, லவ், கிவ்னு ஆரம்பிச்சே தொலைச்சிடுவேன். லவ் பண்ற வயசாடி இது. படிக்கற பொண்ணு. படிப்பை விட்டு, விட்டு என்ன கண்றாவி இதெல்லாம். உங்கப்பாவுக்கு மட்டும் விஷயம் தெரிஞ்சதுன்னா



என்னாகும்னு தெரியும் இல்லே. ஒண்ணு புரிஞ்சுக்கங்க. நீ இன்னும் மைனர் தான். ஏதாவது தப்பா நடந்து கிட்டியானா, சீர்திருத்த பள்ளிக்கு போக வேண்டியதுதான். ஜாக்கிரதை."

இன்னும் ஜெயிலின் கொடுமைகளைப் பற்றி சொல்கிறாள். அம்மா அப்பா இல்லாவிட்டால் சாப்பாட்டுக்கு கஷ்டப்பட வேண்டும் என்று சொல்கிறாள். இப்படி எத்தனையோ விதமாக பயமுறுத்தி வைக்கிறாள். பெண் அசைந்து கொடுக்கக் காணோம்.

"என்னடி கேட்டுக்கிட்டே இருக்கேன். திமிரா?" மறுபடியும் கேட்கிறாள்.

அதுவரை அடிகளையும், திட்டுக்களையும் வாங்கிக் கொண்டிருந்த பெண் பொறுக்க முடியாமல் ஆவேசத்தில் கத்துகிறாள்.

"நான் லவ் பண்றேன்னு சொன்னேனா? ஏம்மா அசிங்கமா பேசறீங்க?"

"பின்னே ஒரு வாரமா ஸ்கூலுக்கு ஏன் போகலே?"

பெண் ஒரு நிமிடம் விறைப்பாகப் பார்த்தாள். பின் பேச ஆரம்பித்தாள்.

"போன வாரம் நான் கஷ்டப்பட்டு, டியூசன் முடிச்சுட்டு பஸ்ஸைப் பிடிச்சுகிட்டு நின்னுகிட்டு வந்தேனே அப்பா என்ன சொன்னாரு?"

"என்ன சொன்னார்?" மேனகாவிற்கு உண்மையிலே ஞாபகம் இல்லை.

"இதெல்லாம் மறந்துடுங்க. என்னை மட்டும் கேள்வி மேல் கேள்வி கேளுங்க. என்னை எங்கே ஊர் சுத்திகிட்டு வரேன்னு அப்பா கேக்கலே."

மேனகாவிற்கு இப்போதுதான் ஞாபகம் வந்தது. போன வாரம் பெண் லேட்டாக வந்தாள் என்று லேட்டாக வந்த பெண்ணை, சாப்பிடக் கூட விடாமல் அடிக்கவே



Vennila

அடித்துவிட்டான். பெண் அழுது கொண்டே போனதும் ஞாபகத்திற்கு வந்தது.

"அதுக்காக?"

"நான் கஷ்டப்பட்டு, படிச்சு ஏன் திட்டுவாங்கணும்? உண்மையாகவே சுத்தினா என்னான்னு தோணிச்சு. அதான் ஒரு வாரம் கிளாஸுக்கு மட்டம் போட்டேன். உங்ககிட்டே கம்ப்ளைண்ட் வரவரைக்கும் இப்படித்தான் செய்யணும்னு நினைச்சுகிட்டு இருந்தேன்."

மேனகா அதிர்ந்து போகிறாள். 'இதென்ன அசட்டுத் தனம்? அப்பா மேல் கோபித்துக் கொண்டு, தன் வாழ்க்கையை யாராவது வீணடித்துக் கொள்வார்களா? இத்தனை பெரிய பெண்ணுக்கு கடவுள் ஏன் புத்தியைக் கொடுக்க வில்லை.'

"இத பாரும்மா. உங்கப்பா மேலே உள்ள கோபத்துலே நீ தப்பான வழியிலே போயிடாதே. அப்பான்னா அப்படித் தான் கோவிச்சுப்பாங்க. அதெல்லாம் பெரிசா எடுத்துப் பாங்களா? உன் பியூச்சர் முக்கியம். நீ நல்லா படிக்கணும். பெரிய ஆளா வரணும். அதுதானே முக்கியம்."

"வேண்டியதில்லை. அப்பா சொல்றபடி நான் ஊர் சுத்தறவளாகவே ஆகிட்டுப்போறேன். அவர் சொன்னதை நிஜம்னு நிரூபிக்கப் போகிறேன்."

தலையை சிலுப்பிக் கொண்டு, மகள் பேசப் பேச அதிர்ச்சியோடு பார்க்கிறாள் மேனகா.

3

"சுஷ்மா என் தங்கம் இல்லை. அப்பா எக்கேடும் கெட்டுப் போகட்டும். நீ எதையும் நினைக்காதேடா. நல்லா படிக்கணும். பெரிய ஆளா வரணும். உன் ஆசைப்படி கம்ப்யூட்டர் இன்ஜினியர் ஆகணும்."



பெண்ணை அணைத்தவாறே மெதுவாக சொல்கிறாள். பெண் விறைப்புடன் கேட்டுக்கொண்டு இருந்தாள். அன்று கணவன் வந்தபோது மேனகா எதையும் பேசவில்லை. இனிமேல் பெண்ணை பள்ளியில் தானே விட்டு வரவேண்டும் நினைத்துக் கொள்கிறாள்.

அடுத்தநாள் "இன்னிக்கு ஆபீசுலே வேலைங்க." என்ற வாறே பெண்ணுடன், காலையிலே கிளம்பிப் போகிறாள்.

"இப்ப எதுக்கு எங்கூட வறீங்க?" பெண் முறைக்க,

"இல்லைம்மா எச்.எம்.மை பார்த்துட்டு போனவாரத் துக்கு, லீவு லெட்டர் கொடுத்துவிட்டு சொல்லிட்டு வரணும்."

பெண் முக இறுக்கத்தோடு கூடவே வர, "கண்ணா பிராமிஸ் பண்ணுடா. அப்பா மேலே இருக்கற கோபத்துலே, நீ உன் வாழ்க்கையை பாழ் பண்ணிக்கக் கூடாது. ஓ.கே."

பெண்ணின் கைகளை வலுக்கட்டாயமாக பிடித்து அழுத்திக் கேட்கிறாள். சுஷ்மா லேசாக தலை அசைக்க, பெருமூச்சு விடுகிறாள் மேனகா.

"சரி நான் கிளாஸுக்குப் போறேன்."

"இல்லைம்மா என் கூட வா எச்.எம்மை பார்த்துட்டு போ.." "அம்மா சொல்ல மௌனமாக அம்மாவைப் பின் தொடர்ந்தாள். 'உண்மை தெரிந்திடுமோ?' நெஞ்சம் அடித்துக் கொள்ள பின் தொடர்கிறாள்.

மேனகா "குட்மார்னிங் மேடம்" என்று சொல்லிய படியே உள்ளே நுழைய, சுஷ்மாவும் குட்மானிங் சொல்லு கிறாள். சுஷ்மாவையே பார்த்துக் கொண்டிருந்த தலைமை ஆசிரியர், மேனகாவின் கடிதத்தை வாங்கியபடி சிரித்துப் பேசுகிறாள்.

"இந்த காலத்துலே எல்லோரும் வேலைக்கு போறவங்க தான். இருந்தாலும் அப்பப்ப குடும்பத்தையும் கவனிக்

Vennila

கணும். குழந்தைகள் என்னாச்சுன்னும் பார்க்கணும். இந்த காலத்துலே சின்ன வயசுலேர்ந்து குழந்தைகளுக்கு பாட்டு, டான்ஸ், படிப்புன்னு எல்லாத்துக்கும் பெத்தவங்க பிரஷர் கொடுத்து வளர்க்கிறாங்க. அது சரின்னு சொல்லலே. இருந்தாலும் அந்த கவனிப்பிலே தான் நூற்றுக்கு ஐம்பது பேராவது நல்ல நிலமைக்கு போறாங்க. அதனால பேரண்ட்ஸோட கவனிப்பு பிள்ளைகளுக்கு ரொம்ப அவசியம்.''

தலைமை ஆசிரியை சொல்ல, ஒரு புன்சிரிப்போடு வெளியே வருகிறாள் மேனகா. தன்னைவிட இந்த தலைமை ஆசிரியை ஒரு இரண்டு வயது பெரியவர்களாக இருப்பார்களா? கண்ணும், மூக்கும், அந்த பளீரென்ற வெள்ளை நிறமும், இந்த மேடம் சிறு வயதில் மிக மிக அழகான பெண்ணாக இருந்திருப்பார்கள். நினைத்தவாறே அவள் கிளம்பிப் போக இங்கே சுஷ்மா நடுங்கியவாறு, தலைமை ஆசிரியரின் முன் நின்று கொண்டிருக்கிறாள்.

''என்ன இதெல்லாம்? உன்னைப் பத்தி நல்ல ரிப்போர்ட்டே வரலை. உங்க அம்மாகிட்டே மொத்தமும் சொல்லிடட்டுமா?''

''சாரி மேடம். இனிமே இப்படி நடந்துக்கமாட்டேன். எக்ஸ்டிரீம்லி சாரி.''

''ஓ.கே. இப்ப விடறேன். திஸ் ஈஸ் தி லாஸ்ட் வார்னிங். இன்னொரு முறை இப்படி நடந்ததுன்னா உன்னை ஸ்கூல்ல வச்சுக்க முடியாது. உங்கப்பா பேங்கிலே பெரிய ஆபீசர். உங்கம்மா டெலிபோன்ஸ்லே பெரிய ஆபீசர். உனக்கு ஏன் இப்படி புத்தி போகுது? ஆர் யூ நாட் அஷேம்ட்?'' என்று சற்று உரத்த குரலில் கத்த, சுஷ்மா தலைகுனிந்தபடி போகிறாள். கண்களில் கண்ணீர். எல்லாம் கூடப் படிக்கும் கசியால் வந்த வினை.



போன வாரத்தில் ஒரு நாள் புதிதாக, வேறு ஊரிலிருந்து வந்த பையன் சதீஷைப் பார்த்து சிரித்துக் கொண்டார்கள். அவன் சற்று பயந்த சுபாவமாக இருக்க, கசி வேண்டுமென்றே அந்தப் பையனிடம் வம்புக்குப் போய் கேலி செய்கிறாள். பயந்தவனை கேலி செய்வது வேடிக்கையாக இருக்க, சுஷ்மாவும் சேர்ந்து கேலி செய்கிறாள்.

அவன் புத்தகத்தை ஒளித்துவைத்துவிட்டு, அவன் லன்ச் பாக்ஸை தூக்கி எறிந்துவிட்டு, இதெல்லாம் சுஷ்மா செய்ய, கூடே வந்த இன்னும் இரண்டு ஆண் நண்பர்கள் அவன் முடியைப் பிடித்து இழுத்து, அவனை அடித்து இன்புற, அடுத்த நாளே அவன் பெற்றோர் பள்ளிக்கு வந்து விட்டனர். அவன் பெரிய டி.எஸ்.பி.யின் மகனாம். அன்றே அவர்கள் நான்கு பேருக்கும் தண்டனை கொடுக்கப்பட்டது. எல்லோரும் பார்க்க, மேடையில் மாலைவரை முட்டி போடச் சொன்னார்கள். அது போதாதென்று வகுப்பில் ஆசிரியர் நன்றாக அடித்து பின்னி எடுத்து விட்டார். அதே நாள் மன்னிப்பு கடிதத்தோடு தாய், தந்தையரை அழைத்து வரவேண்டும் என்று சொல்ல, சுஷ்மா நடுங்கிவிடுகிறாள்.

'அம்மா, அப்பா அழைத்து வருவதைவிட, ஸ்கூலை விட்டு நின்றுவிடலாம்' என்று நினைத்துக் கொள்கிறாள். பிறகு ஒரு வாரம் வரைக்கும் பள்ளிக்கே செல்லவில்லை. கொஞ்ச நாட்கள் சென்றால் மறந்துவிடுவார்கள் என்று நினைத்து இருந்தாள். அது இத்தனை தூரத்திற்குப் போகும் என்று நினைக்கவே இல்லை. தலைமை ஆசிரியரோடு பேசிக் கொண்டிருந்ததில் வகுப்புகள் ஆரம்பமாகி விட்டது. வகுப்பின் அருகில் போய் நிற்க,

''என்ன சுஷ்மா மழை பெய்யுதா? அட்லாஸ்ட் யு ஹேவ் கம்'' என்று வகுப்பாசிரியர் பேச, மொத்த வகுப்பும்

Vennila

சிரித்தது. தலைகுனிந்தபடியே தன் இடத்தில் போய் அமருகிறாள். மூன்று, நான்கு பாடங்கள் போய்விட்டது. இந்த ஒரு வாரத்தில் அத்தனையும் நடத்தி முடித்திருக்கிறார்கள். மௌனமாக அமர்ந்து இருக்கிறாள். ஏனோ பாடத்தில் மனதே போகவில்லை. ஒரே வருத்தமாகத் தான் தெரிந்தது.

இந்த ஒரு வாரமும் வீட்டின் அருகில் இருக்கும் பூங்கா, பள்ளிக்கு அருகில் இருக்கும் பூங்கா இல்லையென்றால் கடைத்தெரு என்று சுற்றி, சுற்றி, 'இது எப்போது முடியும்?' என்றுதானே அலுத்தது உண்டு.

தவறு செய்தவர்கள் நான்கு பேர்தான். இருந்தும் வகுப்பு மொத்தமும் தன்னைக் கேலி செய்வதாகத் தோன்றியது. வகுப்பு முடிந்ததும் தன்னைப் பார்த்து எல்லோரும் குசுகுசுவென்று பேசுவதும் புரிந்தது. அவமானப்பட்டவளாய் அமர்ந்திருந்தாள், சுஷ்மா. இந்த பள்ளியில் படிக்க விருப்பமில்லை. இங்கிருந்து ஓடிப்போய் விட்டால் போதும் என்று தோன்றியது. யாரும் அவளோடு பேசவும் இல்லை. மதியம் சாப்பிடுகிறாள். மெதுவாக பள்ளியை விட்டு வெளியே வருகிறாள். பழையபடி இங்கும் அங்கும் இலக்கின்றி உலாவுகிறாள். வேண்டாம். அந்த பள்ளியே வேண்டாம். நினைத்தவாறே பழையபடி பள்ளியை ஒட்டி இருக்கும் பூங்காவில் போய் அமர,

''ஏய் ஒரு வாரமா வர குட்டியைக் காணோமேன்னு நினைச்சேன். இதோ வந்திடுச்சுடா.''

யாரோ இருவர் சொல்ல, தூக்கி வாரிப் போட்டவாறே, திரும்பிப் பார்க்கிறாள். யாரோ இரண்டு தடியன்கள், இவளுக்கு நேர் பின்னால் அமர்ந்தவாறே கேலி செய்ய அதிர்ந்து போகிறாள்.



'ஐயையோ இவனுங்க யார்னு தெரியலையே.' நினைத்தவளாய் ஸ்கூல் பையோடு தட, தடவென்று ஓட, பின்னால் இருந்தவர்களும் ஓட வர பயந்தவாறே வேகமாக திபு, திபுவென்று ஓடுகிறாள். பயத்தில் நெஞ்சு அடித்துக் கொள்ள முகம் வியர்த்தது. அழுகை வந்தது.

"அம்மா... அம்மா..." பயந்துபோய் அம்மாவை நினைத்து அழுகிறாள். இவள் வேகமாக ஓட, ஓட சரக்கென்று இவளின் முன் ஒரு கார் வந்து நிற்க, பயந்தபடி பார்க்கிறாள் சுஷ்மா. காரைப் பார்த்ததும் பின்னாடி ஓடி வந்தவர்கள் நிற்க,

''டேய் யாருடா அது?'' என்று போலீஸ் உடையில் இருந்த டிரைவர் கூப்பாடு போட, அருகே வந்து நின்றவர்கள் மெதுவாக பின் வாங்கிப் போய்விட்டனர்.

''வா சுஷ்மா வா கார்லே ஏறு'' சதீஷ் தான் கூப்பிடுகிறான். தயங்கிப் போய் நிற்கிறாள் சுஷ்மா. தன்னால் அவமானப்பட்டவன் இவன். எதற்காக கூப்பிடுகிறான். இவனை தொந்தரவு செய்ததற்கு தான் நன்றாக பனிஷ்மெண்ட் வாங்கியாகிவிட்டது. இன்னும் தனக்கு அவமானம் வேறு போகவில்லை. இந்த நிலையில் இவன் ஏன் என்னை வற்புறுத்துகிறான்.

"நோ.. தேங்க்ஸ்" சொல்லிவிட்டு இவள் நகர,

''வா சுஷ்மா'' அவள் கையை பிடித்து இழுத்து, காருக்குள் இழுத்து காரின் கதவைச் சாத்துகிறான் சதீஷ்.

## 4

சுஷ்மா பயந்து போகிறாள். 'இந்தப் பையனை தான் துன்புறுத்தியதால் தன்னை ஏதேனும் செய்து விடுவானோ.'

"சாரி சதீஷ் தெரியாம உன்னை இன்ஸல்ட் பண்ணிட்டேன். இனிமே உன் பக்கமே வரமாட்டேன்."

Vennila

சொல்லும்போதே கண்களில் கண்ணீர் வந்தது. "ஒருவேளை அவங்க அப்பாகிட்டே சொல்லி ஜெயில்லே போட்டுடுவாங்களோ. அம்மா சொன்ன மாதிரி களி தின்னணுமா?" சட்டென்று அழுகிறாள்.

"ப்ளீஸ் சதீஷ். எனக்கு ஸ்கூல்லே வேண்டிய அளவு பனிஷ்மெண்ட் கொடுத்திட்டாங்க. நீயும் கொடுத்திடாதே ப்ளீஸ்." அழுகிறாள்.

"நோ..நோ... நீ தப்பா புரிஞ்சுகிட்டு இருக்கே. ஐ அம் யுவர் பிரண்ட். நான் உனக்கு பிரண்ட்தான் என்னை நம்பு சுஷ்மா. நானும் வீட்டிற்கு ஒரே பிள்ளைதான். எங்கப்பா பெரிய போலீஸ் ஆபீசர். எங்க வீட்டுல என்னை மிரட்டி மிரட்டி வளர்த்ததுனாலே எனக்கு தைரியமே இல்லாம போயிடுச்சு. ஆனா பீயிங் எ கேர்ள் நீ எவ்வளவு தைரியசாலியா இருக்கே. உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. உனக்கு ஹெல்ப் பண்ணணும் தான் உன்னை பிடிச்சு இழுத்தேன். நீ எங்க வீட்டுக்கு வா. எங்கம்மா ரொம்ப சந்தோஷப்படுவாங்க. அப்புறம் கொஞ்ச நேரம் பிளே பண்ணிட்டு உங்க வீட்டுலே டிராப் பண்ணிடறேன்."

"தேங்க்யூ" என்றவள் அவனுடன் வீட்டிற்குப் போகிறாள். அவனுடைய தாயார் கொடுத்த போண்டா, பூஸ்ட் எல்லாவற்றையும் சற்று கூச்சத்துடன் சாப்பிடுகிறாள். தன் வீட்டில் மாலை இப்படிச் சுடச்சுட அம்மா டிபனைக் கொடுத்ததில்லை. தான் வந்து ஒரு மணி நேரம் கழித்து தான் அம்மா வருவாள். இரண்டு பிஸ்கட்டுகளையும், போர்ன்விடாவையும் கலந்து கொடுத்துவிட்டு வேலைகளைப் பார்ப்பாள். இந்த சூடான போண்டாவும், பூஸ்டும் மிக மிகச் சுவையாக இருக்க குதூகலிக்கிறாள். அன்று சதீஷிடம் பேசிவிட்டு திரும்ப வருகையில் ஒரே மகிழ்ச்சியாக இருந்தது. அவனுடைய கம்ப்யூட்டரில் வீடியோ கேம்



ஆடிவிட்டு, அவனுடன் கொஞ்ச நேரம் டென்னிஸ் ஆடிவிட்டு வேண்டிய அளவு சாப்பிட்டுவிட்டு, வீட்டிற்கு வரும்போதே மணி எட்டடித்தது. வீடு மறந்து போனது. அம்மா, அப்பா ஞாபகமே இல்லை.

அன்று வீட்டிற்குப் போய் காரில் இருந்து இறங்கும் போதே அம்மா பயந்து ஓடி வருவது தெரிந்தது.

"சுஷ்மா எங்கேடி போயிட்டு வரே?" இதற்குள் அப்பா சண்டாளக் கோபத்துடன் திபு, திபுவென்று இறங்கி வருவது தெரிய, ஒரு நிமிடம் உறைந்து நிற்கிறாள் சுஷ்மா. சதீஷ் காரில் இருந்தபடியே 'பை' என்று சிரித்தபோது இவளும் கை ஆட்ட அருகே வந்த சுவாமி பளாரென்று சுஷ்மாவின் கன்னத்தில் அறைய, கண்கள் கலங்கியபடி அதிர்ச்சியோடும், ஆத்திரத்தோடும் அப்பாவையே பார்க்கிறாள்.

இதற்குள் சதீஷ் பயந்து போய், காரின் பின் சீட்டில் மறைந்து கொள்கிறான். கார் புறப்பட்டு போக,

"எத்தனை நாளா இது நடக்குது?" என்று எரிச்சலோடு கேட்கிறான் சுவாமி. கண்கள் முழுவதும் கண்ணீரோடு அப்பாவையே பார்க்கிறாள்.

"என்னடி முறைக்கறே? எலும்பை முறிச்சிடுவேன். யாரந்த பையன்? அவன் கூட உனக்கு என்ன வேலை? மணி என்னாகுது பாத்தியில்லே." எரிச்சலோடு அவன் கேட்க, பதில் பேசாமல் அழுத்தமாக நிற்கிறாள்.

"என்னடி கேட்டுகிட்டே இருக்கேன் திமிரா?" எரிச்சலுடன், ஆத்திரத்துடனும் மறுபடியும், மறுபடியும் அடிக்கிறான்.

பெண் அடிவாங்குவதைப் பார்த்து துடித்துப்போய் நிற்கிறாள் மேனகா.

"முதல்ல வீட்டுக்குள்ளே கூப்பிடுங்க. அப்புறம் இந்த வேலையைப் பார்க்கலாம்."

Vennila

''என்னது?'' திரும்பி மனைவியைப் பார்த்து முறைக்கிறான்.

''எல்லாம் நீ கொடுக்கிற இடம். பெண்ணையா வளர்க்குறே? செல்லம் கொடுத்து குட்டிச் சுவராக்கிட்டே.'' மனைவியையும் ஆத்திரத்துடன் கன்னத்தில் அடிக்க, அவள் ஒரு புறமாக போய் விழுகிறாள்.

''இத பாரு.. இதுதான் கடைசி. ஒழுங்காக இருக்கறதுன்னா இரு. இல்லேன்னா வீட்டைவிட்டு இப்பவே கிளம்பிப்போ. உன் இஷ்டப்படி வாழ்ந்துக்க. வெளியே போய் பிச்சை எடுத்தாதான் சொந்த புத்தி வரும்.''

அவன் உறும, உறுமா சுஷ்மா இறுகி நிற்கிறாள். கத்திவிட்டு சுவாமி உள்ளே சென்றவுடன், அவள் வாயிலேயே நிற்கிறாள். உள்ளே போகவும் இல்லை. அந்த இடத்தை விட்டு நகரவும் இல்லை. அவசரம், அவசரமாக மேனகா வெளியே ஓடி வருகிறாள்.

''வாடி உள்ளே வா. இங்கே நின்னுகிட்டு என்ன செய்யறே?'' அம்மா கேட்க, அம்மாவின் கையைத் தட்டிவிடுகிறாள். பெண்ணை ஆதரவாகத் தொட்டபோது, ''கையை எடும்மா'' கர்ச்சிக்கிறாள்.

''உனக்கு என்னாச்சு?''

''இனிமேதான் ஆகணும்'' சொல்லும்போதே பெண்ணின் கண்களில் கண்ணீர்.

''என்னடா இது? உள்ளே வா.'' அம்மா மகளைக் கேட்க,

''போதும். இது வீடா. இங்க ஏன் பொறந்தோம்னு இருக்கு.''

கத்துகிறாள்.

''என்னடி?'' லேசான எரிச்சலோடு மேனகா கேட்க,

''இப்ப வந்துட்டு போனானே, சதீஷ். அவன் நல்ல பிரண்ட் எனக்கு. ஒரு பாடத்துலே டவுட் கேக்கறதுக்காக



அவங்க வீட்டுக்கு அழைச்சுகிட்டு போனான். அவங்க அப்பா ரொம்ப ஸ்டிக்டாம். அப்பா கூட ஏன் வந்தேன்னு கேக்கலை. நம்ம வீட்டுலே நடந்துகிட்ட மாதிரி இன்டீஸன்டா யாருமே நடந்துக்கலே. அவங்க அம்மா சுடச்சுட போண்டாவும், பூஸ்டும் கொண்டு வந்து கொடுத்தாங்க. ஆனா நம்ப வீட்டுலே கூட யாராவது வந்தாலே சந்தேகம். நின்னா சந்தேகம். நிமிர்ந்தா சந்தேகம். என்னை எத்தனை அசிங்கப்படுத்தறீங்க?'' அழுகிறாள்.

''அழாதேம்மா வா...''

''வேண்டாம் விடுங்க. எனக்கு எதுவும் வேண்டாம்.''

''ப்ளீஸ் சுஷ்மா தயவு செய்து வாம்மா.''

ஒரு அரைமணி நேரம் பெண்ணைக் கெஞ்சி, கொஞ்சி கடைசியில் சுஷ்மா உள்ளே வருகிறாள். முகத்தை தூக்கி வைத்துக் கொள்கிறாள். சாப்பிடாமல் பிடிவாதம் பிடிக்கிறாள். அவளை சமாதானப்படுத்தி சாப்பிடவைப்பதற்குள் போதும், போதும் என்றாகிவிட்டது.

அடுத்த இரண்டு நாட்களும் ஒரே அமர்க்களம். கோபம். அப்பாவுடன் கூட சுஷ்மா முகம் கொடுத்து பேசவில்லை. முதலில் பள்ளி என்பது வேப்பங்காயாக இருந்தது. எல்லா பிள்ளைகளின் கேலியினால் பள்ளிக்கே போக பிடிக்கவில்லை. ஆனால் இப்போது பள்ளி தேவலாம் போல் தோன்றியது. சதீஷ் அவளின் நண்பனாக ஆனதும், பள்ளியில் அவளுக்கு எதிராக பேசுவதும் குறைந்தது. இப்போது வீட்டுக்கு வரத்தான் பிடிக்கவில்லை. முதல் நாள் வருத்தத்துடன் போன போது சதீஷ்தான் அவளைத் தேற்றுகிறான்.

''இல்லை சதீஷ் என் வீடே எனக்கு பிடிக்கலை. பேரண்ட்ஸ் கொஞ்சம் கூட புரிஞ்சுக்காதவங்களா இருந்தா என்ன செய்ய? எல்லாம் என் தலையெழுத்து.''

Vennila

''இட் ஈஸ் ஓ.கே. கவலைப்படாதே எல்லாம் சரியாயிடும்.''

அப்புறம் சுஷ்மாவிற்கு சதீஷ் எல்லாமாகிப்போனான். அவனுடன் சேர்ந்து படிக்கிறாள். சேர்ந்து சாப்பிடுகிறாள். எப்போதும் அவனுடன் சேர்ந்தே இருக்கிறாள். அன்று அம்மா கொடுத்த பாக்கெட் மணியை சேர்த்து வைத்து சதீஷுக்கு அழகான கை கடிகாரத்தை வாங்கித் தருகிறாள்.

''ஏய் எதுக்குப்பா எனக்கு?''

''யு ஆர் மை பிரண்ட். உனக்கு செய்ய எனக்கு பிடிச்சிருக்கு. வாங்கித் தரேன்.''

''தேங்க்யூ'' என்றவாறே அதை தன் கையில் கட்டிப் பார்க்கிறான். தன் ஜாமுண்டிரி பாக்ஸில் வைத்துக் கொள்கிறான்.

அடுத்த நாள் வெள்ளியில் ஆன ஒரு லட்சுமி டாலரைத் தருகிறான் சதீஷ்.

''எதுக்குடா எனக்கு?''

''இது ரொம்ப லக்கி. இதை வச்சுகிட்டா எக்ஸாம் எல்லாம் ஈஸியா இருக்கும்.''

அவளும் ஆவலோடு எடுத்து தன் பர்ஸில் வைத்துக் கொள்கிறாள். அம்மா, அப்பாவோடு நேரத்தை செலவு செய்வதை விட சதீஷோடு இருப்பதே பிடித்தமாக இருந்தது. நாளாக, நாளாக சதீஷைப் பார்க்காமல், சதீஷோடு பேசாமல் இருக்கவே முடியவில்லை.

பள்ளி முடியும்போது, ''ஐயோ மறுபடியும் நாளைக்கு காலையில் தானே பார்க்க முடியும்.''

நாளுக்கு நாள், அவன் மேல் நட்பு அதிகரித்து அன்பாக பரிமளித்து, வீட்டுக்கு வந்தும், கொஞ்ச நேரம் கூட பொறுக்க முடியாமல் அவனுடன் செல்லில் தொடர்பு கொள்வாள். மணிக்கணக்காக பேசுவாள். நடுவில்



சாப்பிட்டு விட்டு தன் அறைக்கு வந்துவிட்டால் மீண்டும் ஏதோ ஞாபகம் வந்தது போல் மணிக்கணக்காக பேசுவாள். அன்று இரவு பால் சாப்பிட மறந்து போய் விட்ட பெண்ணைத் தேடி, அவள் அறைக்குப் போனவள், பெண் செல்லில் குழைந்து, குழைந்து பேசுவதைப் பார்த்து திடுக்கிட்டாள்.

## 5



''சுஷ்மா'' அம்மா கூப்பிட, கவனியாமல் பேசுகிறாள்.

''ஏய் சுஷ்மா யாரோட பேசிகிட்டு இருக்கே?'' அப்போது அம்மாவைக் கவனித்தவள், ஒரு நிமிடம் திடுக்கிட்டுப் போகிறாள்.

அடுத்த நிமிடம் ''எம் பிரண்டும்மா.'' சுஷ்மா சொல்ல,

''எதுக்குடி ராத்திரியிலே இத்தனை நேரம் பேசறே? போதும் செல்லை ஆப் பண்ணு.''

''என்னம்மா நீ எம் பிரண்ட் பேசிகிட்டு இருக்கேன்?''

''பார்த்தேன். சாயந்திரம் ஆறு மணிக்கு பேச ஆரம்பிச்சே. நடுவிலே சாப்பிட்டு போனே. மறுபடியும் பேச ஆரம்பிச்சே எவ்வளவு நேரம் பேசுவே. போதும்.''

சுஷ்மா ஆத்திரத்தோடு செல்லை அணைக்கிறாள். சே! இந்த வீட்டில் பிரீடமே இல்லை. ஆத்திரமும், எரிச்சலும் வந்தது. செல்லை தூக்கி தூரப் போட்டவள்,

''இந்தா பாலை சாப்பிடு.''

''வேண்டாம்.''

''சே! ஒரு பொண்ணுன்னு செல்லம் கொடுத்தது என் தப்பு. எனக்கு இன்னும் வேண்டும். இதுவும் வேண்டும். உங்கப்பா சொல்றது சரிதான் போலருக்கு.''

மேனகா சொல்ல, சொல்ல பாலைக் கொட்டிக் கவிழ்த் தாள் சுஷ்மா.

Vennila

"திமிராடி உனக்கு?" எரிச்சலுற்றாள் மேனகா.

"எனக்குத் திமிரில்லை. என் பிரைவஸியை கெடுக்கற உங்களுக்குத்தான் திமிர்."

"பேசுவடீ. உங்கப்பாதான் உனக்கு லாயக்கு. அவர் திட்டராரேன்னு நினைச்சேன். திட்டறது சரிதான். மரியாதையா எல்லாத்தையும் துடை" கத்துகிறாள்.

"இது என் ரூம் தானே. நான் பார்த்துக்கறேன். நீங்க போங்க." அம்மாவிடம் கத்திவிட்டு, அம்மா வெளியே சென்றதும் கதவை சாத்தியவள், மறுபடியும் வெறி பிடித்தவள் போல் சதீஷின் நம்பரை போன் செய்து பேசுகிறாள். மணிக்கணக்காக, எல்லாவற்றையும் மறந்து பேசுகிறாள்.

அடுத்தநாள் பள்ளிக்கு போன பின்பு, சதீஷிடம் புலம்பித் தீர்த்து விடுகிறாள்.

"இட் ஈஸ் ஓகேம்மா. வா. இன்னிக்கு ஏதாவது மூவிக்கு போகலாமா?" என்கிறான். முதலில் இவர்களைப் பார்த்து பயந்த பையனா இவன்? அன்று பள்ளிக்கு மட்டம் போட்டு விட்டு சினிமாவிற்குச் சென்றார்கள். ஆரம்பித்தது இப்படித்தான். வீட்டில் டென்ஷனாக இருக்கும்போது, அவனிடம் வந்து அழ சினிமாவிற்குப் போனார்கள். பாதி நாட்கள் பள்ளிக்குப் போகாமல்தான் இருந்தார்கள். பள்ளிக்கு வந்து ஒரு சில வகுப்புகளுக்கு இருந்து விட்டு ஓடுவது இருவருக்கும் பிடித்திருந்தது.

ஒருநாள், "சுஷி நீ இல்லாமல் இருக்க முடியாது தெரியுமா? ஐ லவ் யுடா" என்கிறான் சதீஷ்.

அவளும் மெய்மறந்து பேசுகிறாள். "மீ.. டூ.." என்கிறாள். பிடிக்காத வகுப்பு, பரீட்சைக்கு மட்டம் போட்டவர்கள், பிடித்த வகுப்புக்கு கூட போக விரும்பவில்லை. காலையில் சமர்த்துப் பிள்ளைகளாக பள்ளிக்கு வருபவர்கள், யாரும் அறியாமல் நழுவிவிடுவார்கள். தொடர்ந்து



ஒருவாரம் வராததைக் கண்டு, வகுப்பு ஆசிரியை எல்லோரையும் கேட்க,

"இல்லை மேம்.. ரெண்டு பேரும் ஒண்ணா வந்தாங்க. ஆன எங்கே போனாங்கன்னு தெரியலை."

"ரெண்டு பேரும் ஒண்ணா சுத்தறாங்க மேம்." இன்னொரு பெண் சொல்லிவிட்டு, நமுட்டு சிரிப்பு சிரிக்க, வகுப்பு முழுவதும் சிரித்தது.

"ஸ்டாப் இட்" என்று கர்சித்த ஆசிரியை நேரே தலைமை ஆசிரியரின் அறைக்குச் சென்றுவிட்டார். தலைமை ஆசிரியையும் ஏதோ யோசனையில் ஆழ்கிறாள்.

"இந்தப் பெண் சரியான பெண் இல்லை போலருக்கு. ஒரு நிமிடம் ஆத்திரம் வந்தாலும் அடுத்த நிமிடம் பச்சாதாபம் எழுந்தது. புரியாத வயசு. இப்போது என்ன செய்வது? அவள் தாயாரை கூப்பிட்டு பிரயோசனமில்லை. தந்தையிடம் பேச வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள். அவர்கள் வீட்டிற்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டாள். கூடவே சதீஷ் வீட்டிற்கும் ஒரு கடிதம் போனது. இரண்டு நாட்கள் கழித்து சதீஷின் தந்தை சற்று பதற்றத்துடன் வந்து விட்டார்.

தலைமை ஆசிரியை மிகப்பொறுமையுடன் சதீஷைப் பற்றி சொல்லுகிறாள். முதல்ல ரொம்ப பயந்த பையனா? ரொம்ப ஸாப்ட் ஆக இருந்தான். ஆக்சுவலா அந்த பொண்ணு உங்க பையனை டீஸ் பண்ணி, பனிஷ்மெண்ட் கூட வாங்கினவ - ஆனா என்ன ஆச்சுன்னு தெரியலை. இரண்டு பேரும் சேர்ந்து ஸ்கூலுக்கு லீவு போடறாங்க. ஒரு பீரியட் அட்டெண்ட் பண்ணிட்டு போயிடறாங்க. சில நாட்களிலே அது கூட இல்லை. இப்பவே கவனிச்சுகிட்டா பெட்டரா இருக்கும். இன்னிக்கு கூட ரெண்டு பேரும் கிளாஸுக்கு வரலை."

Vennila

அவருடைய முகமே இருண்டது. எதையும் நம்பும்படியாக இல்லை. முகத்தை துடைத்துக் கொள்கிறார். வியர்வை ஆறாக ஊற்றுகிறது.

"சாரி மேடம். இதை நான் பார்க்கறேன். இனிமே என் பையன் கரெக்டா ஸ்கூலுக்கு வருவான். அன்று பையன் வீட்டுக்கு வந்த போது ஒன்றும் சொல்லாமல் செல்போனை பிடுங்கி வைத்தார்.

"அப்பா ப்ளீஸ் என்னப்பா இது? என் பிரண்ட்ஸ் கூப்பிடுவாங்க."

"இருக்கட்டும். இனிமேல் செல்போன் பிள்ளைகள் யூஸ் பண்ணக்கூடாதுன்னு உங்க எச்.எம். எனக்கு லெட்டர் அனுப்பி இருக்காங்க." என்றவர்,

"ஆமா ஸ்கூலுக்குப் போகாம எங்கே போனே?" உயர்ந்த குரலில் கத்துகிறார். பிள்ளை பயந்து போய் வாய் மூடிக் கொள்ளவும், "உன்னைத்தாண்டா கேக்கறேன்."

அதற்கும் பிள்ளை பதில் பேசாமல் இருக்க, அதுவரை காத்து வந்த பொறுமையை கைவிட்டு, பெல்டை எடுத்து பையனை விளாச,

"எல்லாம் உன்னால் தாண்டி வந்தது" பெண்டாட்டியைப் பார்த்து உறுமுகிறார். அவனுடன் பழகும் பெண்ணின் விலாசத்தை மனைவியின் மூலம் தெரிந்து கொள்கிறார்.

அடுத்த நாளே வேலை முடிந்துவரும்போது இரவு அவர்கள் வீட்டிற்கு வருகிறார். அன்றைக்கு சதீஷ் பள்ளிக்கு வரவே இல்லை. அன்று முழுவதும் தவித்துப் போகிறாள் சுஷ்மா.

சதீஷின் தந்தை வந்ததும், "அங்கிள் சதீஷ் எங்கே?" லேசாக தயங்கியவாறு அவள் கேட்க, அவளை உறுத்துப் பார்த்துவிட்டு,



"உங்க டாடி எங்கே?" கேட்கிறார்.

ஒரு நிமிடம் லேசான அதிர்ச்சியோடு நின்றவள், "டாடி" என்று குரல் கொடுக்கும் முன் வெளியே வருகிறார் சுவாமி.

"யார் நீங்க? என்ன வேணும்?"

"பர்சனலா பேசணும்." என்று வந்தவர் கூற, தனியாக அழைத்துப்போகிறான். சுருக்கமாக தலைமை ஆசிரியை சொன்னதை சொல்கிறார். எம் பையனை அடக்கி வச்சுட்டேன். உங்க பெண்ணையும் அடக்கி வையுங்க. அதை சொல்லத்தான் இங்கே வந்தேன்."

கதவுக்கு வெளியே நின்று கேட்டுக் கொண்டிருந்த சுஷ்மா, அதிர்ச்சியில் முகம் மாறினாள்.

## 6

"என்ன சார் பேசறீங்க நீங்க? உங்க பையன் வந்ததுலேந்து தான் எம்பொண்ணு கெட்டு போயிட்டா. அவ எத்தனை பயந்தாங்கொள்ளி பொண்ணுன்னு தெரியுமா? உங்க பையனுக்கு செல்லம் கொடுத்து கொடுத்து வச்சிருக்கீங்க. அதே எங்க வீட்டுலே வந்து பாருங்க. என்ன நடக்குது? என்னை பார்த்தாலே நடுங்குவா."

"என்ன சார் என்னென்னவோ பேசறீங்க. படிக்கற பசங்க லைஃப் கெட்டுப் போயிடும்னு நான் சொல்ல வந்தா என்னென்னவோ பேசறீங்க?"

"எப்படி சார் சொல்லறீங்க? என்னமோ எல்லா தப்பையும் எம் பொண்ணு பண்ணின மாதிரி பேசறீங்க?"

அதற்கு மேல் அவர் நிற்கவில்லை.

"எம் பையனை நான் அடக்கி வச்சுக்கறேன். உங்க பொண்ணை நீங்க பார்த்துக்கங்க." சொல்லிவிட்டு அவர் நகர,



Vennila

"ஏய் மேனகா." உரத்துக் குரல் கொடுக்கிறான் சுவாமி.

"என்னங்க ஆச்சு?"

"என்ன ஆச்சா? உம் பொண்ணு எங்கே கூப்பிடு."

"என்ன விஷயம்?"

"என்ன விஷயமா?" சட்டென்று பெண்டாட்டியின் கன்னத்தில் பளாரென்று அறை விடுகிறான். "பெண்ணையா வளர்ந்து வச்சிருக்கே? உம் பொண்ணு இத்தனை கேவலமாவா இருக்கும்? படிக்கற வயசுலே படிக்கற பையனோடு ஊர் சுத்தி கிட்டு இருக்கா. கிளாஸுக்குப் போறதில்லே. ஹெட் மிஸ்டர்ஸ் லெட்டர் அவருக்கு அனுப்பி இருக்காங்க."

"நமக்கு ஒண்ணும் அனுப்பலீங்களே?"

"அனுப்பலேன்னா அந்த ஆள் சொன்னது பொய்யினு ஆயிடுமா?"

மேனகா அடிபட்ட கன்னத்தை தடவியவாறே உள்ளே கிளம்பிப் போகிறாள். பெண் ஸ்கூலுக்கு சரியாக வருவதில்லை என்று சொன்னாளே தவிர, இந்தப் பையனைப் பற்றி ஒன்றும் பேசவில்லையே. மனப்போராட்டத்தில் ஆழ்ந்தாள் மேனகா.

"எங்கேடி உன் பெண்?"

அதுவரை மறைந்திருந்து எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த சுஷ்மா வெலவெலத்துப் போனாள். அப்பா கையில் மாட்டினால் தன்னைத் தவிடு பொடி ஆக்கிவிடுவார்.

"என்ன செய்வது? தண்ணீர் குடிக்கக் கூட வெளியே போக முடியாது. அப்பாவின் கண்களில் படாமல் தப்பிக்க வேண்டும். எப்படி?"

முதலில் தன் இடத்தில் இருந்து உறுமிக் கொண்டிருந்த சுவாமி பின் வெறி பிடித்தவன் போல் வீடு முழுவதும் தேடுகிறான்.



"எங்கே போய் விட்டாள் பெண்."

நல்லவேளை அப்பா உள்ளே வந்து தேடத் தொங்கினவுடனே வில்லிலிருந்து விடுபட்ட அம்பு போல் வெளியே பாய்ந்து ஓடுகிறாள் சுஷ்மா. தான் வந்து சேர்ந்த இடத்தைப் பார்க்கிறாள். சதீஷின் வீடு தான். உள்ளே எப்படி போவது? இப்போது தானே சதீஷின் தந்தை குறை சொல்லிவிட்டு போயிருக்கிறார். தான் இங்கே வந்தது தெரிந்தால் என்னாகும்? மனம் படபடக்க காம்பௌண்ட் சுவர் ஓரமாக நிற்கிறாள். சதீஷ் வீட்டையே எட்டி எட்டிப் பார்க்கிறாள். சிறிது நேரத்தில் சதீஷ் பால்கனிச் சுவரைப் பிடித்தபடி சோகமாக நிற்பது தெரிய,

"ஹாய் சதீஷ்" என்று கையை ஆட்டுகிறாள் சுஷ்மா.

"ஹாய் சுஷி" என்று அவசரம் அவசரமாக கீழே இறங்கி ஓடி வருகிறான்.

அவள் கையை இழுத்தபடியே, "வா" உள்ளே என்று அழைத்துச் செல்கிறான். வாயிற் பக்கம் போகாமல் பின் பக்கம் அழைத்துச் செல்கிறான். பிறகு மாடிப்படியில் ஏறி தன் அறைக்கு அழைத்துச் செல்கிறான். சுற்றும், முற்றும் பார்த்தபடி அவளை உள்ளே இழுத்துக் கொண்டு அறையின் கதவைச் சாத்துகிறான். சுஷ்மா சட்டென்று அழுகிறாள்.

"எதுக்கு அழறே சுஷி?"

"உங்க டாடி எங்க வீட்டிற்கு வந்திருந்தாரு.". சொல்லிவிட்டு அழுகிறாள்.

"என் டாடியா?"

"ஆமாம்" என்று தலை ஆட்டுகிறாள்.

"என்ன சொன்னாங்க?"

"நம்ப ஸ்கூல் எச்.எம். நம்பளைப் பத்தி ஏதோ சொல்லி இருக்காங்க."

Vennila

''இங்கேயும் லெட்டர் வந்தது.'' சதீஷ் மெதுவாக சொல்லுகிறான்.

''இப்ப என்னடா பண்றது?'' அழுகிறாள் சுஷ்மா.

''எங்கப்பா கைல மாட்டினா என்னைக் கொன்னுடு வாரு.'' அழுகிறாள் சுஷ்மா.

''இன்னும் யூனிபார்ம் கூட மாத்திலைடா. ஒண்ணும் சாப்பிடலை. ஐ டிண்ட் டேக் எனிதிங்க். இப்ப என்ன பண்றதுன்னு தெரியலைடா.''

''எங்க வீட்டிலேயும் பெரிய பிரச்சனைதான். இதை பார்த்தியா?''

பெல்டால் அடிபட்ட இடங்களை காண்பிக்கிறான்.

''இப்ப என்னடா பண்றது?''

''இப்பவே இங்கேர்ந்து போயிடணும். இல்லேன்னா எங்கப்பா கூட என்னைக் கொன்னுடுவாரு. கொஞ்சம் இரு. உனக்கு ஏதாவது சாப்பிட கொண்டு வரேன்.''

சொல்லிவிட்டு நகருகிறான். சமையலறையில் சமையற்காரர் இல்லாதிருக்க வசதியாகப்போய்விட்டது. அவர் ஏற்கனவே காய்ச்சி வைத்திருந்த பாலில் கொஞ்சம் பூஸ்ட் போட்டு கலந்து, குளிர்சாத பெட்டியைத் திறந்து கேக், சாக்லெட் எல்லாம் எடுத்து வருகிறான். நல்ல வேளை வெளியே சென்ற அப்பா இன்னும் வரவில்லை.

அம்மா தன்னுடைய அறையில் இருந்தாள். எல்லா பொருள்களை சாப்பிடக் கொடுக்கிறான். மிகுந்த பசி எடுக்கவே சுஷ்மா ஒருவித பயத்தோடு திரும்பி, திரும்பி பார்த்தவாறே அவசரம், அவசரமாக சாப்பிடுகிறாள்.

''பயப்படாதே. இங்கே யாரும் வரமாட்டாங்க. நீ இங்கே நிம்மதியா இருக்கலாம்.'' கதவை இறுக மூடி விட்டு சுஷ்மாவின் அருகில் அமர்ந்து கொள்கிறான்.



''சதீஷ்.. ஏய் சதீஷ் என்ன செய்யறே?''

சதீஷின் தாயார் குரல் கொடுக்க,

''ஹோம் வொர்க் எழுதிகிட்டு இருக்கேன் மம்மி.'' பல்லைக் கடித்தபடி பதில் சொல்கிறான் சதீஷ். வெளியே வந்தவுடனே சதீஷை வாங்கு வாங்கென்று வாங்குகிறார் சதீஷின் தந்தை. என்ன, ஏது என்று சதீஷின் தாய் கேட்கு முன்னே சதீஷை உள்ளே தள்ளி, பெல்டால் அடி, அடியென்று அடித்து விடுகிறான். அடித்த பின்பு தான் காரணத்தையே சொல்கிறார் சதீஷின் தந்தை. சதீஷின் தாய் ஜமுனா துடித்து விடுகிறாள். விஷயம் தெரிந்த பின் கலங்கிப் போகிறாள் ஜமுனா. படிக்கும் வயதில் பிள்ளையா இப்படி நடந்து கொள்வான்.

ஒன்பதாவது படிக்கும் பையனுக்கு காதலா வரும்? நினைத்துப் பார்க்கவே ஆச்சரியமாக இருந்தது. ஒவ்வொரு பிள்ளைகளும் நன்றாக படிக்கவேண்டும். அதிக மதிப்பெண் வாங்க வேண்டும் என்று நினைக்கும்போது, தன் பையன் இப்படி கேவலமாக நினைக்கும்போதே அருவறுப்பாக இருந்தது. தன் பையன் பயந்தாங்கொள் ளியே தவிர, படிப்பில் மந்தமல்ல, பத்து, பதினோரு ரேங்கில் வருபவன். இப்போது பள்ளிக்கு செல்லாமல், படிப்பிலும் நாட்டமில்லாமல் இது என்ன பிழைப்பு?

அவன் கூடவே ஒரு பெண் வந்ததே, தோழி என்றல் லவா நினைத்தாள். தன் காலமாக இருந்தால் எந்த ஆண் மகனிடம் பழக முடியாது. ஆனால் இன்று காலம் எத் தனையோ மாறிவிட்டது. ஒரு ஆணும், பெண்ணும் உண்மையாக நண்பர்களாக பழக முடியும் 'இப்படி நம்பித்தானே தான் பழக விட்டோம்' அந்தப் பெண் அடிக்கடி வீட்டுக்கு வருவது எதுவும் கணவனுக்குத் தெரியாது. தெரிந்தால் தனக்கும் சேர்ந்து திட்டு விழும்.

Vennila

இந்த பிள்ளை இப்படி ஏமாற்றிவிட்டதே. நினைக்க, நினைக்க ஆத்திரம் வந்தது. தானும் வேண்டிய அளவிற்கு பிள்ளையை திட்டி அடித்தாகிவிட்டது. இப்போது நினைத்தாலும் பற்றிக் கொண்டு வந்தது.

"டேய் சதீஷ் உள்ளே என்ன பண்றே?"

"என்னம்மா நீங்க ஹோம்வொர்க் பண்ணிகிட்டு இருக்கேன்." குரல் கலங்கிப்போய் ஒலித்தது.

"நீ கதவைத் திற. நீ ஹோம்வொர்க் பண்றியா வேறெதாவது பண்றியான்னு பார்க்கணும்."

"என்னம்மா பேசறீங்க?"

"உன் செல் எங்கே? கொஞ்சம் ஏமாந்தா அதுலே பேசிகிட்டே இருப்பே."

"அப்பா நேத்தே வாங்கி வச்சிட்டாரேம்மா." சொல்லி விட்டு அவசரம் அவசரமாக கதவைத் திறக்கிறான்.

உள்ளே எட்டிப்பார்த்தவள், சதீஷ் கணக்கு புத்தகம், நோட்டுக்களை விரித்தபடி கணக்கு போட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்கிறாள். லேசான பெருமூச்சுவிட்டவாறு வெளியே போகிறாள். சதீஷ் அவசரம், அவசரமாக கதவைத் தாள் போடுகிறான். பாத்ரூமில் அமர்ந்து இருந்த சுஷ்மா மெதுவாக வந்து அமர்ந்து கொள்கிறாள்.

"டேய் சதீஷ் ரொம்ப பயமா இருக்குடா." என்றவாறே ஒரு ஓரமாக வந்து அமர்ந்து கொள்கிறாள்.

ஒரு ஒருமணி நேரம் சென்றபின், தொலைபேசி அழைப்பு வர, சதீஷின் தந்தை ஓ வென்று கூச்சல் போடுவது கேட்டது.

"பார்த்தியா. அந்த பொண்ணு கூட சேர வேணாம்னு சொன்னேனே. கேட்டியா?"

அவள் கத்த, உள்ளிருந்த சதீஷ், சுஷ்மா வெல வெலத்து நின்றார்கள்.



7



"என்னாச்சுங்க?"

"என்னாச்சா? அந்தப் பொண்ணு வீட்டை விட்டு ஓடிடுச்சாம்."

"யார் சொன்னாங்க?"

"யார் சொல்லுவாங்க? பெண்ணோட அப்பன்தான். ஒரே குதியாக குதிக்கிறான். அவ வீட்டை விட்டு ஓடினதுக்கு சதீஷ்தான் காரணம். அவன் வீட்டுலே இருக்கானான்னு கேக்கறான். சதீஷ் எங்கே?"

"என்னங்க நீங்க இப்படி பேசறீங்க? உள்ளே மேத்ஸ் ஹோம்வொர்க் பண்ணிக்கிட்டு இருக்காங்க. யாரோ, ஏதோ சொன்னாங்கன்னு நம்ப பையனை தப்பா நினைப்பீங்களா? சொன்னவங்களை லெப்ட் அண்ட் ரைட்டா வாங்கி இருக்க வேண்டாம். நம்ப பையன் மேலே கோபிக்கறீங்க."

"சதீஷைக் கூப்பிடு."

முதல் நாளே இப்படித்தான் கூப்பிட்டு, கூப்பிட்டு அடித்தாயிற்று. ஒரு நிமிடம் பையனைப் பற்றி நினைத்தவள், பரிதாபத்தோடு பெருமூச்சு விட்டவாறே,

"சதீஷ் டேய் சதீஷ் மறுபடியும் கதவைத் தட்டுகிறாள். சுஷ்மா பயந்துபோய் பால்கனியில் போடப்பட்டிருந்த நாற்காலிக்குப் பின்னால் ஒளிந்து கொள்கிறாள். சதீஷ் சற்று பயந்தவாறே கதவைத் திறக்கிறான்.

"என்னடா பண்ணிகிட்டு இருந்தே? உடனே கதவைத் திறக்கலையே ஏண்டா?"

"என்னம்மா நீ பாத்ரூம் போயிருந்தேன்" எரிச்சலோடு பேசுகிறான் சதீஷ்.

ஒரு நிமிடம் அறையை அளந்தவள் "உங்க அப்பா கூப்பிடறார். வாடா." என்கிறாள். சதீஷ் மெதுவாக வெளியே வந்து அப்பாவையே பார்க்கிறான். கண்களில் கலக்கம்,

Vennila

முகம் வாடி பயந்தது போல் இருக்க, அவருக்கே ஒரு மாதிரியாக இருந்தது. குழந்தையை அப்படிப் போட்டு அடித்து இருக்கக்கூடாது. நினைத்துக் கொள்கிறார். சதீஷின் தாயாரும் கணவனை சற்று பாவமாகவே பார்க்கிறாள்.

''இப்படி செய்யலாமா நீங்கள்'' என்று குற்றம் சாட்டுவது போல் அவள் பார்வை அமைய,

''சரி.. சரி என்ன பண்ணிகிட்டு இருக்கே?'' என்கிறார்.

"மேத்ஸ் போட்டுகிட்டு இருக்கேன்பா..." சொல்லும்போதே சதீஷ் குரல் அடைத்துப் போய் பேச முடியாமல் நிற்க,

''சரி.. சரி.. போ'' என்கிறார் அவனின் தந்தை.

சதீஷ் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு உள்ளே வருகிறான். கதவை மூடவே பயம் இருக்க, தயங்கித் தயங்கி போய் நாற்காலியில் அமருகிறான். யாராவது பார்க்கிறார்களா என்று ஓரக்கண்ணால் பார்க்கிறான். பால்கனிப் பக்கம் வேறு பார்வை இருந்தது. நல்லவேளை சதீஷின் தாயார் வெளிப்பக்கம் கதவைச் சார்த்திக் கொள்ள, மெதுவாக தாழ்ப்பாள் போடுகிறான்.

''என்னடா ஆச்சு?'' கேட்டபடி அங்கும், இங்கும் பார்த்தபடி வருகிறாள் சுஷ்மா.

"நீ வீட்டை விட்டு வந்தது தெரிஞ்சு போச்சு, உங்கப்பா, எங்கப்பாகிட்டே சண்டை போட்டுகிட்டு இருக்காராம்.''

''ஐயையோ இப்ப என்னடா பண்றது? நான் இங்கே இருக்கறது தெரிஞ்சா பிரச்சனை ஆயிடுமே.''

''ஏதான வழி கண்டுபிடிக்கலாம் பேசாம இரு.'' சதீஷ் அவளை தைரியப்படுத்துகிறான்.

ஒரு எட்டு மணி ஆகி இருக்கும். அம்மா வெளியில் இருந்து கத்துகிறாள்.

''சதீஷ் சாப்பிடவா.''



''ஓ.கேம்மா.'' என்று கத்தியவன், வாயில் விரலை வைத்து எச்சரிக்கிறான்.

நல்ல பிள்ளையாக சாப்பிடப் போகிறான். சதீஷ் எதுவும் சாப்பிடாமல் தலைகுனிந்து அமர்ந்த போது,

''என்னடா கண்ணு? ஏன் சாப்பிடலை?'' என்றவாறே வந்து பையனின் தலையைக் கோதுகிறாள்.

''நான் ஊட்டி விடட்டுமா?'' அம்மா ஆசையாக கேட்க,

''செல்லம் கொடுத்து, கொடுத்து தான் அவனை கெடுத்து வச்சிருக்கே. அவன் என்ன சின்ன குழந்தையா? அவனே சாப்பிடட்டும்.''

''மம்மி....'' மெதுவாக அம்மாவைக் கூப்பிடுகிறான்.

''என்னடா கண்ணு?''

''நாளைக்கு டெஸ்டுமா. நான் படிச்சுகிட்டே சாப்பிடறேம்மா. என் ரூமுக்குப் போறேன்.''

''என்னடா கண்ணு இது. எக்ஸாம் டென்ஷன்லே சரியா சாப்பிடமாட்டே. சாப்பிடு.''

''இல்லேம்மா. நானே தட்டிலே நிறைய போட்டுகிட்டு போறேன். எக்ஸாம்னா நான் எப்பவுமே படிச்சுகிட்டே தானே சாப்பிடுவேன். உங்களுக்குத் தெரியாதா?''

''சரி இந்தா'' என்று தட்டில் குழம்பு சாதம், தயிர் சாதம் போட,

''இன்னும் நிறைய போடுங்கம்மா. நான் படிச்சுகிட்டே நிறைய சாப்பிடுவேன்.''

சதீஷின் தாயார் சந்தோஷத்தோடு இன்னும் நிறைய வைக்கிறாள்.

''டேய் இவ்வளவு எடுத்துகிட்டு போற எல்லாத்தையும் மீத்து வச்சிடப்போறே.'' என்றவாறே நிறைய போட்டு அனுப்ப, சதீஷ் உருளைக்கிழங்கு வறுவலை பாக்கெட்டுடன் எடுத்துச் செல்கிறான்.

Vennila

அறையினுள் நுழைந்து அறைக்கதவை சாத்துகிறான். தட்டை மூடி எடுத்து வருவது போல் இன்னொரு தட்டையும் போட்டு மூடி எடுத்து வருகிறான். கதவை பூட்டி விட்டு இருவரும் சாப்பிடுகிறார்கள்.

''சதீஷ் எனக்கு பயமா இருக்கு. இங்க ரொம்ப நாள் தங்க முடியாது. கண்டுபிடிச்சா பிரச்சனை ஆயிடும். நான் வேணா வேற எங்காவது போயிடறேண்டா.''

''ம்.. பேசாம இரு. நாம ரெண்டு பேரும் எஸ்கேப் ஆயிட லாம். நீ இல்லாம நான் ஸ்கூலுக்கு போக மாட்டேன்.'' சுஷ்மா சதீஷையே சற்று பயத்துடன் பார்த்துக் கொண் டிருந்தாள்.

''கமான் சுஷ்மா. தைரியமா இரு. கிளம்பிடலாம்.''

அடுத்த நாள் பள்ளிக்கு செல்வது போல் கிளம்புகிறான் சதீஷ். அதற்கு முன் யாரும் அறியாமல், சுஷ்மாவிற்கு டிபனை கொண்டு வந்து கொடுத்து, அவள் சாப்பிட்டான தும், அங்கேயே குளித்து விட்டு ஏற்கனவே அணிந் திருந்த ஜீன்ஸ், டாப்பையும் அணிந்து கொண்டாள்.

அம்மா வீட்டின் உள்ளே வேலையில் இருக்கும்போது, அப்பா காலை ஓட்டத்திற்கு சென்றபின், யாரும் அறியா வண்ணம் சுஷ்மாவை அழைத்துக் கொண்டு வெளியே வருகிறான் சதீஷ்.

''சுஷி.அங்க பக்கத்துலே இருக்கிற கோவில்லே போய் உட்கார்ந்துக்க, நான் ஸ்கூலுக்கு கிளம்பறேன்னு சொல் லிட்டு எஸ்கேப் ஆயிடறேன்.''

சுஷ்மா தலையை ஆட்டியபடி கிளம்பிச் செல்கிறாள். சற்று பயந்தபடியே கோவில் வாசலிலேயே ஒரு ஓரமாக அமர்ந்து கொள்கிறாள். சதீஷ் அம்மாவிடம் 'ஸ்பெஷல் கிளாஸ்' இருப்பதாகச் சொல்லிவிட்டு ஸ்கூல் யூனிபார்மில் வெளியே வருகிறான்.



''ஏண்டா ஸ்கூல் பஸ் இன்னும் வரலியே? அதுக் குள்ளே எதுக்கு அவசரப்படறே?''

''இல்லேம்மா இன்னிக்கு கார்னர்லே பஸ் வரும். அங்க வந்து ஏறிக்கங்கன்னு சொல்லி இருக்காங்க.'' சொல்லி விட்டு அம்மாவின் பதிலை எதிர்பார்க்காதவனாய் வேக வேகமாக நகர்ந்து செல்கிறான். சில நாட்களில் சீக்கிரம் ஸ்பெஷல் கிளாஸ் இருந்தால் ஸ்கூல் பஸ் தெருக்கோடி யில் வந்து ஏறிக் கொள்ள சொல்வதையும் இவள் பார்த் திருக்கிறாள். அதனால் பிள்ளையை அவசரம் அவசரமாக அனுப்புவதில் முனைந்தாள்.

லன்ச் பாக்ஸ் வழக்கத்தை விட, சற்று பெரியதாக எடுத்துக் கொள்கிறான்.

''என்னடா இன்னிக்கு பெரிசா எடுத்துக்கறே?''

''இல்லே மம்மி போன வீக் கொடுத்து அனுப்பின லன்ச்சை எல்லா பிரண்ட்ஸும் எடுத்துகிட்டாங்க. பிள்ளைங்க எல்லாம் நம்ம வீட்டு லன்ச் நல்லா இருக்குன்னு சொல்றாங்க. எல்லோரும் கேட்கும்போது எப்படி கொடுக்காமல் இருக்க முடியும்?'' சதீஷ் சொல்ல, சொல்ல அவனின் தாயின் முகம் மலர்ந்தது. இந்த வார்த்தைகளையும் அவன் எப்போதும் சொல்வதுதான்.

அதனால் சற்று சந்தோஷமாகவே கூடவே, பொரியல், பொரித்த அப்பளம், இன்னும் நிறைய சாம்பார் சாதம், தயிர் சாதம் எல்லாவற்றையும் வைத்தாள் சதீஷின் தாயார். லன்ஞ் பாக்ஸை வாங்கியவாறே,

''தேங்க்யூ மம்மி. நான் கிளம்பறேன். பை...'' என்ற வாறே அவன் கிளம்ப,

''ஏய் கொஞ்சம் இருடா.'' சாப்பிட எடுத்துப் போட்டுக் கொள்ள, இரண்டு ஸ்பூன்களை கொடுத்துவிட்டாள். சாப்பாடு மட்டுமில்லாமல் இரண்டு, மூன்று [illegible]

Vennila

ஒரு சிப்ஸ் பாக்கெட், நான்கு வாழைப்பழங்கள் எல்லாவற்றையும் கொடுத்து அனுப்பினாள்.

"ரொம்ப தேங்க்ஸ் மம்மி." என்றவாறே கிளம்புகிறான். மகனின் கன்னத்தை லேசாக தட்டியபடியே உள்ளே போகிறாள் சதீஷின் தாயார். சதீஷ் அவசரம், அவசரமாக கிளம்புகிறான். கோவிலுக்குப் போய் சுஷ்மாவை அழைத்துக் கொண்டு ஓட்டமும், நடையுமாக கிளம்புகிறான். ஏற்கனவே பத்திரப்படுத்தி வைத்திருந்த பாக்கெட் மணி ஐநூறு ரூபா இருக்கிறதா என்று பார்க்கிறான். இருவரும் பஸ் ஏறி இலக்கில்லாமல் வேறொரு இடத்தில் இறங்கி அங்கே வேறு பஸ்ஸுக்காக காத்திருக்கிறார்கள்.

"டேய் எங்கேடா போறோம்?" சுஷ்மா மெதுவாகக் கேட்க,

"தெரியலை. இங்கேர்ந்து தாம்பரம் போவோம். அங்கே போயிட்டா நம்பளை யாரும் கண்டுபிடிக்க முடியாது."

சதீஷ் சொல்ல, சொல்ல அந்த வழியாக காரில் சென்ற தலைமை ஆசிரியை அவர்கள் இருவரையுமே உற்றுப் பார்த்தவாறே செல்கிறார்.

**8**



அந்தப் பெண்ணைப் பார்த்தவுடனே யாரென்று தெரிந்தது. அவனும் சதீஷ் என்று புரிந்தது. பையனாவது யூனி பார்மில் இருக்கிறான். பெண் அப்படியே வந்திருக்கிறாள். 'இத்தனை தூரம் பெற்றோரைப் பார்த்து சொல்லியும் ஒரு பிரயோசனமுமில்லை. என்ன பேரண்ட்ஸ் இவர்கள் எல்லோரும். பெண்ணைப் பெற்றவர்களாவது சற்று ஜாக்கிரதையாக இருந்திருக்கக் கூடாதா? எத்தனை சொல்லியும் இரு பெற்றோர்களுமே எதையும் சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை என்று தோன்றுகிறது.



பிள்ளைகள் மேல் நம்பிக்கை வைக்க வேண்டியதுதான். அதற்காக இப்படியா? இந்த காலத்தில் பிள்ளைகளை அதிகமாக அடக்கி வைத்திருந்தார்கள் அதுவும் தவறு தான். தான் அத்தனை தூரம் சொல்லியும் ஒன்றும் பலன் இல்லை.

பிள்ளையின் அப்பாவாவது வந்தார். பெண்ணின் அப்பாவை வந்து பார்க்கும்படி கடிதம் எழுதியாயிற்று. இன்னும் வந்து கூட பார்க்கவில்லை. இன்று பள்ளிக்குச் சென்றவுடனே அந்தப் பெண்ணின் தாயாரைத் தொடர்பு கொண்டு தந்தையிடம் உடனே பேச வேண்டும் என்று சொல்ல வேண்டும். இன்று மட்டும் இந்தப் பெண் யூனிபார்ம் அணியாமல் வரட்டும். பார்த்துக் கொள்ளலாம்.' மனதிற்குள் கறுவியவாறே சற்று கோபத்துடன் சாய்ந்து அமருகிறாள்.

பள்ளிக்குச் சென்று காலை வணக்கங்கள், பிரார்த்தனைகளை முடித்துக் கொண்டு, எழுந்து தன் வேலைகளைக் கவனிக்கலானாள். அவளைச் சந்திக்க வந்த சில பெற்றோர்களைப் பார்த்து பேசி அனுப்புகிறாள். வேறு பள்ளியில் வந்தவர்களிடமும் பள்ளியின் விஷயமாக பேசுகிறாள். பள்ளி ஆசிரியைகளிடம் அடுத்த இலக்கிய விழா பற்றி பேசி முடிவெடுக்கிறாள்.

இதில் காலையில் பார்த்த சதீஷ், சுஷ்மா இவர்களைப் பற்றிய நினைவே மறந்தே போனது. எல்லாவற்றையும் பேசி முடித்துவிட்டு, ஏதோ பைல்களைப் பார்த்துக் கொண்டிருந்தவளிடம் பியூன் வருகிறான்.

"மேடம் ஒருத்தர் ரொம்ப நேரமா உங்களைப் பார்க்க வெயிட் பண்ணிகிட்டு இருக்காங்க."

"வரச்சொல்லு" என்றவாறே, குனிந்து ஏதோ கோப்புகளை சரி பார்த்துக் கொண்டிருந்தவள், "எக்ஸ்க்யூஸ்மி" குரல் கேட்டு நிமிருகிறாள்.

Vennila

ஒரு நிமிடம் அதிர்ந்து போகிறாள். அவனா இது? முன்பக்கம் வழுக்கை. பர்ஸ் போல் நீண்ட வாய், சற்று தாட்டியான உருவம். இதெல்லாம் அவனாக இருக்குமோ என்ற சந்தேகத்தை எழுப்பியது. தான் அதிர்ச்சி அடைந்தது போல் அவ்விடத்தில் எந்த வித மாற்றமும் இல்லை. அவன் சாதாரணமாகக் காணப்பட்டான்.

ஒரு நிமிடத்தில் தன்னை சமாளித்துக் கொண்டவள்,

''வாட் கேன் ஐ டூ பார் யூ'' அவள் கேட்க,

''மேடம் ஐ அம் சுவாமி. சுஷ்மாவோட பாதர்.'' சொல்லும்போதே சீருடை அணியாத அந்தப் பெண்ணின் ஞாபகம் வந்தது. தாடை இறுகியது. ''சொல்லுங்க.'' என்கிறாள். அவன் சட்டென்று உணர்ச்சி வசப்பட்டு போனான். குலுங்க, குலுங்க அழுகிறான்.

''எம் பொண்ணு.. எம் பொண்ணை காணலை.''

ஒரு நிமிடம் வியப்பு ஏற்பட்டது. காலையில் தானே யூனிபார்ம் போடாமல் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தது. காணோமாமே. ஆத்திரத்துடன், ''நீங்க அந்த பெண்ணோட ஒரிஜினல் பாதர் தானே,'' அவள் கேட்க,

''மேடம் என்ன பேசறீங்க?'' சற்று கோபமாகக் கேட்கிறான் சுவாமி.

''இத்தனை நாள் எங்கே சார் போயிருந்தீங்க? லெட்டர் போட்டும் வரலை. எத்தனையோ சொல்லியும் கேட்கலை. உங்க வைஃப்பை கூட கூப்பிட்டு ஒரு தடவை எச்சரிச்சு அனுப்பி இருக்கேன். இப்ப வந்து நான் பெண்ணோட பாதர்னு சொன்னா என்ன செய்யறது? நீங்க சொல்லி தான் பெண்ணோட பாதர்னே தெரியுது. பசங்க தப்பு பண்றாங்கன்னா அதை கண்டிச்சு சரி செய்ய வேண்டாமா?''

அவள் கேட்க, கேட்க பின்னும் கலங்கிப் போகிறான்.



''மேடம்... மேடம்...'' அழுகிறான்.

''எனக்கு எந்த விஷயமும் தெரியாது மேடம். என் வைஃப் தான்.. பல்லைக் கடிக்கிறான்.

''எம் பொண்ணு எங்கே போனான்னு தெரியலை மேடம். கண்டுபிடிச்சிட்டேன்னா அப்புறம் எல்லாத்தையும் சரி பண்ணிடுவேன் மேடம்'' அவன் குமுறி, குமுறிக் கொட்ட,

''உங்க பெண்ணை காலைல பஸ் ஸ்டாண்டிலே பார்த்தேனே. ஸ்கூல்ல தான் இருப்பா'' என்றவள் பியூனிடம் சொல்லி சுஷ்மாவைக் கூப்பிடச் செய்கிறாள். பியூன் ''சுஷ்மா பள்ளிக்கே வரவில்லை'' என்று சொல்ல அதிர்ச்சி அடைகிறாள்.

''எந்த பஸ் ஸ்டாண்டிலே பார்த்தீங்க மேடம்'' சுவாமி கேட்க, தன் வீட்டின் வழியாக வரும் பஸ் ஸ்டாண்டைப் பற்றி சொல்லுகிறாள்.

''மேடம் ப்ளீஸ் எந்த ஆக்ஷனும் எடுக்காதீங்க. எம் பெண்ணை கண்டு பிடிச்சுடுவேன். இனிமே அவ ஒழுங்கா இருக்கற மாதிரி பார்த்துப்பேன் ப்ளீஸ்.''

''ஓ.கே...'' என்று அவள் கூற,

''தேங்க் யூ மேடம்'' என்றவாறே கிளம்புகிறான். தலைமை ஆசிரியை ஏதோ யோசனையுடன் அமருகிறாள். வெகுநேரம் அப்படியே அமர்ந்து இருக்கிறாள்.

''லட்சுமி... லட்சுமி...'' அம்மா எரிச்சலோடு கூப்பிட, கூப்பிட லட்சுமி பதில் சொல்லவில்லை.

''என்ன பண்றா இவ வீட்டுலே பாதி வேலை அப்படியே இருக்கு.'' என்றவாறே புழக்கடைப்பக்கம் வருகிறாள் காமாட்சி. மகள் துவைக்கும் கல்லில் ஏறி, எதையோ பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்து.

''என்னடி செய்யறே?'' அதட்டலாய் கேட்க, சட்டென்று கீழே குதிக்கிறாள். பதினாறு வயது லட்சுமி,

Vennila

மூக்கும், கண்ணும் திருத்தமாக, பளபளவென்ற நிறத்தோடு, நீண்ட தலைமயிர் சாட்டையாகத் தொங்க, மருண்டு போய் அம்மாவைப் பார்க்கிறாள்.

முகத்தில் லேசான அச்சம் வேறு தாக்க, ''அம்மா'' அவள் ஆரம்பிக்க,

''என்னடி இதெல்லாம்?'' கேட்கிறாள் காமாட்சி.

''இல்லைம்மா. பக்கத்து வீட்டுலே ஏதோ சத்தம். அதான் என்னன்னு பார்த்தேன்.'' சமாளிக்கிறாள் மகள்.

கண்கள் மருண்ட பார்வை பார்த்தது.

''பக்கத்து வீட்டு ஜெயாவோட சொந்தக்காரங்க வந்திருக்காங்க. சும்மா, சும்மா.. போய் எட்டிப் பார்க்காதே. அவங்க சித்தப்பா வீட்டுலே இருந்து வந்திருக்காங்க. அவங்க வீட்டுலே இருந்து விருந்தாளி ஊருக்குப் போகிற வரைக்கும் அவங்க வீட்டுப் பக்கம் கூட போகக்கூடாது புரியுதா?'' என்கிறாள்.

இது அறியாத வயது. இந்த வயதைத் தானே அவளும் தாண்டி வந்திருக்கிறாள். பெண் மனது புரியாதா என்ன? ''போய் வேலையைப் பாரு போ. சும்மா பின்னாடி போய் நின்னுகிட்டு இருக்காதே.''

லட்சுமி தலை குனிந்தபடி வேலைகளைச் செய்கிறாள். மனம் மட்டுமல்ல உடலும் சேர்ந்துதான் நடுங்குகிறது. அம்மா எந்த விஷயத்தையும் மறைக்க மாட்டாள். தான் எட்டிப் பார்த்ததிலிருந்து எல்லாவற்றையும் சொல்லிவிடுவாள். தெரிந்துவிட்டால் போதும் வீட்டில் பூகம்பமே வெடித்துவிடும்.

ரொம்ப பழைய காலத்தில் பெண்ணை சொத்தாக பாவிப்பார்களாம். குழந்தை, தங்கம் என்றெல்லாம் கூப்பிடுவார்களாம். அடுத்த காலம் தான் லட்சுமி இருக்கும் காலம். பெண் என்பவள் ஒரு பொருள்தான். அவளுக்கு



என்று எதுவும் கிடையாது. ஒரேடியாக துக்கத்தைக் காண்பிக்கக் கூடாது. ஒரேடியாக மகிழ்ச்சியும் அடையக் கூடாது. சற்று கலகலவென்று சிரித்தால் போதும்,

''பொட்டச்சிக்கு என்ன சிரிப்பு?'' என்று உறுமுவார் அப்பா.

ஐந்து மணிக்கு மேல் வீட்டை விட்டு வெளியே போகக்கூடாது. காலை ஐந்து மணிக்குள் எழுந்து விட வேண்டும். மதியம் தப்பித்தவறி படுத்து விடக்கூடாது. வெளி ஆண் பிள்ளைகள் வந்தால் வெளியே வரவே கூடாது. ஓரளவுக்கு மேல் பெண்களாக இருந்தாலும் பேசக்கூடாது. இப்படி ஆயிரம் கட்டுப்பாடுகள். ஒன்றாவது படிக்கும் போதே பாவாடை, தாவணி, இப்படி எல்லாவற்றிலுமே கட்டுப்பாடுகள்தான். நல்லவேளை வீட்டு விலக்கு ஆன பின், வயதுக்கு வந்த பின் படிப்பை நிறுத்தவில்லை. படிக்க அனுமதிக்கப்பட்டாள். பதினொன்றாவது படித்துக் கொண்டிருந்தாள். அதற்குப் பிறகு என்ன செய்ய வேண்டும், என்ன ஆக வேண்டும் எதுவுமே அவளுக்குத் தெரியாது. எல்லாவற்றையும் அப்பாவே முடிவு செய்வார்.

பக்கத்து வீட்டில் காலை விருந்து, ஒரே சிரிப்பும், வேடிக்கையுமாக கத்தலும்... ஆர்வம் துளிர்க்க தான் பார்த்தாள். அதுவே வினையாகப் போய்விட்டது. வீட்டை சுத்தமாகப் பெருக்கி குப்பை கொட்ட கதவைத் திறந்தவள் வாயிலை பார்த்து திடுக்கிட்டாள்.

## 9



அடுத்த வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தாளி. ஏறக்குறைய அவள் வயது தான் இருக்கணும்.

''ஹாய்'' என்கிறான் வந்தவன். சென்னையில் இருந்து வந்திருக்கிறான் போலும். மிகவும் நாகரீக

Vennila

மாக ஒரு ஜிப்பாவும், தொள, தொள பைஜாமாவும் போட்டுக் கொண்டிருந்தான். அவள் கருவிழிகளில் புதியவனைப் பார்த்துவிட்ட வெட்கம். அவன் அவளையே கூர்ந்து நோக்குகிறான்.

"ஹாய் ஹலோ" என்கிறான்.

"நீங்க யாரு என்ன வேணும்?" கேட்கிறாள்.

"நான் ஜெயாவோட கசின்." அவன் சொன்னது அவளுக்குப் புரியவில்லை.

"அப்படீன்னா?"

"அவங்க சித்தப்பா பையன்." என்றபடி அவளையே பார்த்தவன்,

"யு லுக் பியூட்டிபுல்" என்கிறான்.

பியூட்டி புல்லுக்கு மட்டும் அர்த்தம் புரிந்தது. லட்சுமி எஸ்.எல்.சி. படிக்கிறாளே தவிர, படித்ததெல்லாம் தமிழ் மீடியம். ஆங்கிலம் மட்டும் அவளுக்கு வரவே வராத பாடம். ஆங்கிலம் முழுவதும் மனப்பாடம் செய்துதான் ஒரு ஐம்பது மார்க் வரை வாங்கி விடுவாள். மற்றபடி ஆங்கிலம் அவ்வளவாகத் தெரியாது. அவன் மிகவும் நாகரீகமாக ஆங்கிலம் பேசிய விதம் அவளுக்குப் பிடித்துப் போனது. எந்த ஆண் பிள்ளைகளிடமும் ரொம்ப பேசியதில்லை. படித்ததெல்லாம் பெண்கள் பள்ளி. பெண் ஆசிரியைதான் அவளுக்கு. ஆண்களிடம் பேசுவ தென்றாலே சுபாவமான கூச்சம் வந்து ஒட்டிக் கொண்டு விடும். பேச நாவே எழாது. இவன் வேறு ஸ்டைலாக வந்து நின்றபடி பேசி அவளையே மொய்த்து விடுவது போல் பார்த்தது இன்னும் வருத்தத்தை ஏற்படுத்தியது.

"அப்பா வெளியே போயிருக்கார்."

"தெரியுமே. நான் உன்னைத் தானே பார்க்க வந்தேன்." சொன்னவுடன் இன்னும் வெட்கம் ஏற்பட்டது.



"யாருடி அது?" அம்மா கேட்க,

"ஜெயாவோட சித்தப்பா பையன்மா." சொல்லிவிட்டு விடும் என்று உள்ளே மறைகிறாள். தன்னிடம் வந்து நீ மிக அழகாக இருக்கிறாய் என்று சொன்ன முதல் ஆண் மகன் அவன்தான். மனம் மகிழ்ச்சியில் துள்ளியது. மனம் எப்பொழுதுமே தன்னை பாராட்டுவதைத்தான் விரும்பு கிறது. ஒரு சின்ன வேலையாக இருந்தாலும் பாராட்டி விட்டால் இந்த மனம் குளிர்ந்து போய்விடுகிறது. இது வெறும் பாராட்டு மட்டுமல்ல. தன் பருவ வயதில் ஒரு ஆண் மகனின் பாராட்டு வேறு. பெண் மனம் பூரித்து மகிழ்ந்தது.

அவனைத் தன் கணவனாகவே வரித்தது. அடுத்த சில நாட்களில் அவள் ஆற்றுக்குப் போனாலும், கடைக்குப் போனாலும் கோவிலுக்குப் போனாலும் வந்து ஒட்டிக் கொள்வான்.

"ஏய் அசோக் நான் போற இடமெல்லாம் தயவுசெய்து வராதேப்பா" என்று கெஞ்சுகிறாள்.

"இந்த ஊர்லே இப்படி ஒண்ணா போனா தப்பா நினைச்சுப்பாங்க. மன்னிச்சுக்கங்க. எங்கூட எல்லாம் வராதீங்க" அவள் சொல்ல, சொல்ல,

"போ லட்சுமி. டோன் பி சில்லி. உன் கூட பேசும் போது பறக்கலாம் போல இருக்கு. தெரியுமா? மை ஸ்வீட்டி. யு ஆர் லுக்கிங் வொண்டர்புல்." அவன் சொல்ல, சொல்ல மனம் மகிழ்ந்தது. குதூகல உணர்வு தோன்றியது. அவள் அழகி என்று தெரியும். நிறைய பேரின் கடைக் கண் பார்வை அவள் மேல் உண்டு. கண்டும், காணாதது போல் பார்த்திருக்கிறார்கள். சில பேர் அப்படியே அவளை உறுத்துப் பார்ப்பார்கள். மற்றபடி அவள் சந்தோஷப் படும்படி யாரும் அவளை புகழ்ந்ததில்லை.

Vennila

வீட்டிலே சதா திட்டும், மிரட்டும் அப்பா, எப்போதுமே உபதேசிக்கும் அம்மா, இதில் தான் எங்கே பெருமையாக உணர முடியும்? அதனால் முன், பின் தெரியாத ஒரு ஆடவன் தன்னைப் பற்றி புகழப் புகழ உச்சி குளிர்ந்தது.

அன்று கோலம் போட்டு எழுந்தபோது,

"நீ போட்டதா? பென்டாஸ்டிக். என்ன கைத்திறமை" மறுபடியும் புகழுகிறான். அவன் வயதும் சின்ன வயது தான். அவரைப் பார்த்ததும் தேன் குடித்த நரியாகி விட்டான். லட்சுமி தான் பயப்படுகிறாள். இவனோடு இப்படி தனியாக பேசுவது தெரிந்தாலே தன் விதியே மாறிவிடும். அப்பா அடித்தே கொன்றுவிடுவார். இல்லை வீட்டை விட்டே விரட்டி விடுவார். தன் படிப்பு பாழாகும்.

அவ்வப்போது அந்த உணர்வு வர, மனம் சில்லிட்டுப் போனது. பயம் எடுத்தது. ஆனாலும் ஆசை வெட்கம் அறியாதது அல்லவா? அவனை நினைந்து, நினைந்து மனம் மறுகியது. சாப்பிடப் பிடிக்கவில்லை. தூக்கம் பிடிக்கவில்லை. இருக்கப் பிடிக்கவில்லை. சதா அவனின் நினைவுகள் வருத்திற்று. பகல் நேரம் எப்போது வரும் என்று மனம் குதியாட்டம் போடுகிறது.

இட்லிக்கு ஒரு சின்ன சட்னி செய்தால் கூட,

"ஆஹா இதை செய்த கைக்கு தங்க வளையல் போடணும்" என்பான்.

"அப்...பா என்ன தலைமயிர்? எத்தனை அழகா இருக்கே? உன் ஹேர் பார்க்கும் போதே அப்படியே மழையைப் பார்க்கிற மாதிரி ஒரு பீலிங். இந்த லிப்ஸ் இத்தனை அழகா இருக்கே." ஒவ்வொரு அசைவுக்குமா ஒருவன் புகழ்வான். வலிய வந்து பேசி அவளை புகழ்ந்து, புகழ்ந்து தெருவில் இருக்கும் ஒருவனுக்கு திடீரென்று ராஜ கிரீடம் வந்தால் எப்படி இருக்கும்? அப்படித்தான் நினைத்தாள் லட்சுமி.



இது போதாத குறைக்கு "என் மனது ஒன்றுதான். உன் மீது ஞாபகம்" இந்த மாதிரி பாடல்கள் வேறு மனதைக் கிளப்பிவிட, அவன் இருந்த இந்த ஒரு மாதமும் அவனோடு மனதால் நிறையவே நெருங்கிவிட்டாள். மனதால் ஏற்கனவே அவன் மனைவியைப் போலவே வாழ்கிறாள்.

அன்று அவன் புறப்படும் நாள். காலையில் இருந்து சாப்பாடு கூட கொள்ளவில்லை. பெற்றோருக்குத் தெரியாமல் உள்ளுக்குள் அழுகிறாள். அன்று தண்ணீர் எடுக்க ஆற்று பக்கம் வந்தபோது, யாரும் அறியாவண்ணம் எப்போதும் சந்திக்கும் தனி இடத்தில் இருவரும் பேசுகிறார்கள்.

"டியர்.. உன்னை பிரியணும்னு வருத்தமா இருக்கு" அவனும் நிறைய அழுது இருக்கிறான். அவன் கண்கள் வேறு சிவந்திருந்தன.

"நீ எனக்கு வேணும்" ரொம்ப ஆசையாக அவளின் கையைப் பிடித்துக் கொள்ள, சட்டென்று அறிவு விழித்துக் கொள்ள,

"இதெல்லாம் வேண்டாம். மேரேஜுக்கு அப்புறம் தான் எல்லாம்." என்கிறாள்.

"ஓ.கே. நீயும் நல்லா படி. இந்த எஸ்.எல்.ஸி படிச்சவுடனே வேலை தேடிக்கறேன். அப்புறம் நம்ம மேரேஜ்தான்."

அவள் முகம் மலர்ந்து போகிறாள். அன்று பிரிய முடியாமல் பிரிந்து சென்றனர். ஒரு வருடம் ஓடித்தான் போய் விட்டது. எப்படி போயிற்று? தெரியவில்லை. லட்சுமி ஜோதியிடம் பேசி மெதுவாக விலாசத்தை தெரிந்து கொண்டாள். அவனுக்கு கடிதம் வேறு ஆசையாக எழுதுகிறாள். தன் உள்ளத்தில் எழுந்த அன்பை கொட்டிக் கவிழ்த்து எழுதுகிறாள். அங்கிருந்து பதில் இல்லை.

ஒரு வாரம், ஒரு மாதம் ம்ஹூம் பதில் இல்லை. நான்கு கடிதங்களுக்குப் பிறகு மீண்டும் அவனுக்கு கடிதம் எழுதுகிறாள். இந்தக் காலம் போல் போ

Vennila

எதுவுமே இல்லாத காலம். ம்... ஹூம் அதற்கும் பதில் இல்லை.

நான்கு மாதங்கள் அவனுக்காக காத்திருந்தது தான் மிச்சம். படிப்பில் முதலாவதாக இருந்தவள், பத்தாவது ரேங்குக்குப் போய்விட்டாள்.

"என்னடி ஆச்சு உனக்கு? எப்பவும் விளக்கெண்ணெய் குடிச்ச மாதிரி முகத்தை வச்சுகிட்டு இருக்கே? ஏன் மார்க் எல்லாம் குறைஞ்சுது? இப்படி படிச்சியானா ஒன்றும் பிரயோசனமில்லை. உங்கப்பா படிப்பை நிறுத்திடுவாரு. அப்புறம் எங்களை மாதிரி கரண்டியைப் பிடிச்சுகிட்டு வீட்டோடு உட்கார வேண்டியதுதான்."

ஒரு நிமிடம் திக்கென்றது. "ஐயோ, அப்பா படிப்பை நிறுத்திவிட்டால் தான் நினைத்தபடி அசோக்கைத் திருமணம் புரிய முடியாது. நன்றாக படித்தால்தான் திருமணம் புரிந்து கொள்ள முடியும். அப்பா அவசரப்பட மாட்டார். அதற்குள் அசோக்கும் படித்து கிராஜுவேட் ஆனால் தானே நல்ல சம்பளம் கிடைக்கும். தானும் படித்தால் ஒரு வேலைக்குப் போகலாம். இப்போதே பெண்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக வேலைக்குப் போகத் தொடங்கி விட்டார்கள். தானும் வேலைக்குச் சென்று விட்டால் குடும்பத்தை நன்றாக பார்த்துக் கொள்ளலாம்.

மனம் இப்படி கணக்கு போட்டதும், அவன் நினைவை மனதில் இருந்து வலுக்கட்டாயமாக அகற்றுகிறாள். படிப்பில் கவனம் செலுத்துகிறாள். பள்ளியில் முதல் மாணவியாக, மாகாணத்தில் முப்பதாவது இடத்தில் வருகிறாள்.

ஜெயா சந்தோஷத்தோடு அவளின் கையைக் குலுக்கியவள்,

"நீ நல்ல மார்க்லே பாஸ் பண்ணிட்டே. ஆனா அசோக் பெயிலாயிட்டான்." என்கிறாள்.



# 10



லட்சுமி அதிர்ந்து போகிறாள். அசோக் பெயிலா? எத்தனை அழகாக ஆங்கிலம் பேசுகிறான். எப்படி பெயிலாகி இருக்க முடியும்? தான் அப்படி மனப்பாடம் செய்து தான் ஆங்கிலத்தில் ஐம்பத்து நாலு மார்க் வாங்கிவிட்டோம். கணக்கில் முழு மார்க். மற்றபடி விஞ்ஞானம், சமூகவியல், தமிழ் எல்லாவற்றிலும் எண்பதுக்குமேல் அவன் தன்னை விட அதிக மதிப்பெண்கள் வாங்குவான் என்றல்லவா நினைத்தாள். ஏன் இப்படி? இருந்தும் அவனை சமாதானப்படுத்தும் விதமாக ஒரு கடிதம் போட்டாள்.

அவள் மேலே படிக்க வேண்டும் என்று அடம் பிடித்ததில் பி.யூ.ஸியில் சேர விண்ணப்பம் வாங்கித் தருவதாக அப்பா சொன்னபோது, அவள் மகிழ்ச்சியின் உச்சிக்கே போனாள். சித்தப்பா சென்னையில் இருப்பதால் அங்கே போய் படிக்கலாம் என்று அப்பா சொல்ல குதிக்கிறாள். சென்னையிலா. என் அசோக்கைப் பார்க்கலாம். நாட்கள் பறந்தன என்பதை விட ஓடின என்று சொல்லலாம்.

லட்சுமிக்கு சென்னையில் உள்ள கல்லூரியில் இடம் கிடைக்க, மிக மிக சந்தோஷத்துடன் கல்லூரியில் சேருகிறாள். அம்மாவுக்குத்தான் பெண்ணைத் தனியே விட இஷ்டமில்லை. மிக மிக வருத்தத்துடனும், தயக்கத்துடனும்தான் பெண்ணை அனுப்புகிறாள்.

அங்கே சித்தப்பாவின் பெண் வனஜா இந்த வருடம் தான் எஸ்.எல்.ஸி எழுதப் போகிறாள்.

"அக்கா நீ ரொம்ப நல்ல மார்க் வாங்கி இருக்கேன்னு அப்பா சொன்னாரே."

"ம்... ஹூம் அப்படி எல்லாம் இல்லை. எனக்கு இங்கிலீஷில் தான் கம்மி மார்க். எனக்கு இங்கிலீஷ் வராது."

Vennila

''ஏன்?''

''நான் தமிழ் மீடியத்துலே படிச்சேன். அதான்.''

''இட் ஈஸ் ஓ.கே. கவலைப்படாதே. நாங்க எல்லாம் இங்கிலீஷ் மீடியம்தான். இங்கிலீஷை புரிஞ்சுக்கறது அத்தனை கஷ்டமில்லை.''

அவள் சொன்னதன் பொருள் அப்போது விளங்கவில்லை. ஆங்கிலம் படிப்பது மட்டும் கல்வி அல்ல என்பது போகப் போகத்தான் புரிந்தது. இருந்தும் பி.யூ.ஸியில் ஆங்கிலக் கல்விமுறையில் மிகவும் துன்பப்பட்டாள். புரிந்து கொள்ள மிகவும் கஷ்டப்பட வேண்டி இருந்தது.

ஆங்கில மீடியத்தில் படித்த தன்னை விட சுமாரான மார்க் வாங்கிய பிள்ளைகள் எல்லோரும், பரீட்சையில் தன்னைவிட அதிக மதிப்பெண்கள் வாங்க, சற்று துவண்டு தான் போகிறாள் லட்சுமி.

அசோக் இம்முறை படித்து சுமாரான மார்க்கில் பாஸ் செய்து விட்டானென்று லீவுக்கு ஊருக்கு வந்த ஜெயா லட்சுமியைப் பார்த்து சொல்லுகிறாள். இத்தனை நாட்கள் ஊரிலிருந்தெல்லாம் அவனுக்கு கடிதம் போட்டவள், சென்னை வந்தபின் எதையும் எழுதியதில்லை. முதலாவதாக அவன் நன்றாகப்படித்து பாஸ் பண்ண வேண்டும். அவனுக்கு ஒரு வேலை கிடைத்தால்தான் தங்கள் திருமணத்தைப்பற்றி பேசமுடியும். அதுவரைக்கும் அவனை மனத்தளவில் கூட சலனப்படுத்தக் கூடாது. பி.யூ.சியில் இரண்டாவது கிளாஸில் பாஸ் பண்ணுகிறாள்.

ஆங்கிலம், தமிழில் சி, சிபிளஸ் வாங்குகிறாள். மற்றவைகளில் பியும், பி பிளஸ்ஸும் தான். அம்மா பெண் படித்தது போதும் என்று ஆரம்பிக்கிறாள். அப்பாதான் பெண் மேலே படிக்கட்டும் என்று பச்சை கொடி காட்ட, புதிதாக வந்திருக்கும் பொருளாதார பிரிவில் சேர்ந்தாள்.



ஆங்கில வழிக் கல்வியில் படித்திருந்தால் பொருளாதாரத்தையும் ஒரு கை பார்த்திருக்கலாம். பள்ளி இறுதி வரை தமிழ் வழிக் கல்வி முறையில் படித்திருந்ததால் எல்லாவற்றையுமே மனப்பாடம் செய்துதான் படிக்க வேண்டி இருந்தது. எப்படியோ படித்து முடிக்கிறாள்.

அசோக்கும் இளங்கலை கடைசி ஆண்டு படிக்கிறான். லட்சுமி முதுகலை படிப்பிற்கு விண்ணப்பிக்கிறாள். இளங்கலையில் பெரிய அளவு மதிப்பெண்கள் வரவில்லை என்றாலும் ஒரு வழியாக ஆங்கிலம் கை வசப்பட்டது.

முதுகலை பட்டப்படிப்பு படிக்க ஆரம்பிக்கிறாள். இதற்குள் அம்மா அவளுக்குத் திருமணம், திருமணம் என்று பிடிவாதம் பிடிக்க அந்த பிடிவாதத்தின் நடுவிலே, முதுகலைப் படிப்பை மிக நன்றாகவே படித்து முடிக்கிறாள் லட்சுமி. இதற்கு நடுவில் ஓரிருமுறை அசோக்கை பார்க்கும் வாய்ப்பு கிட்டுகிறது. ''அவன் பெயிலாகிவிட்டான். சரியாகப் படிக்கவில்லை'' என்று மற்றவர் திட்ட இவள் மனம் உருகிவிடுகிறது. அவனைப் பார்த்து பேசுகிறாள். ஆறுதல் சொல்கிறாள்.

அப்போதும் ''யு லுக் பியூட்டிபுல்'' என்றும்,

''உன்னை மாதிரி பெண்ணை மீட் பண்ணதே இல்லை'' என்றும் சொல்லிக் கொள்கிறான் அசோக். இருவரும் சந்திக்கும்போது,

''உன்னை ஒரு முறை முத்தமிடலாமா?'' உத்தரவு கேட்கிறான் அசோக். லட்சுமி தன்னை சமாளித்துக் கொள்கிறாள்.

''அதெல்லாம் மேரேஜுக்கு அப்புறம். இப்ப அதுலே எல்லாம் மனசை செலுத்தினா வாழ்க்கைல உயர முடியாம போயிடும்.'' என்கிறாள்.

நாட்கள் சென்றது என்பதை விட, பறந்தது என்று சொல்லலாம்.

Vennila

இதற்குள் அவள் வீட்டில் மும்முரமாக மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிக்க அவள் மறுக்க ஆரம்பிக்கிறாள்.

"இத பாருடி உன்னை ஒத்த பசங்க, எல்லாம் கல்யாணம் ஆகி கையில் ஒண்ணு, வயித்துல ஒண்ணு வச்சுகிட்டு இருக்கு. இருபத்து மூன்று வயசாச்சு. இன்னும் மாப்பிள்ளை பார்க்க வேண்டாம்னா என்ன அர்த்தம்?" அம்மா குதிக்கிறாள். அப்பாவும் தன் பங்குக்கு கத்துகிறார்.

"இத பாரும்மா. மாப்பிள்ளையை பார்க்க ஆரம்பிச்சிடறேன். உனக்கு பிடிச்சிதுன்னா பண்ணிக்க." கண்டிப்பாக சொல்லி விடுகிறார்.

"அப்பா இந்த வருஷம் கடைசி வருஷம். முடிச்சிடறேனே."

"படிச்சுகிட்டே இரு. அதுக்குள்ளே கல்யாணம் பிக்ஸ் ஆயிடுச்சுன்னாலும் என்ன? மீதி படிப்பை மாப்பிள்ளை வீட்டிலேயே சொல்லி முடிச்சுக்கலாம்."

அசோக் இப்பதான் எம்.ஏ. முதலாண்டு படிக்கிறான். இன்னும் ஒரு வருடம் காத்திருந்தால் போதும். அவனுக்கு வேலை கிடைத்துவிடும். பிறகு தங்கள் திருமணம் தான். தெரிந்தவன் என்ற முறையிலேயே அவர்கள் வீட்டிற்குப் போய் அசோக்கைப் பார்த்து பேசிவிட்டு வருவாள். எப்போது அவனைப் பார்த்தாலும் 'மை பியூட்டி க்வீன்' என்றெல்லாம் பிதற்றுவான்.

லட்சுமிக்கு தினமும் வரன்கள் வந்தபடி இருந்தன. பதினாலு வயதில் இருந்தது போலவே இந்த இருபத்து மூன்று வயதிலும் தகதகவென்று மின்னிக் கொண்டிருந்தாள் லட்சுமி. பார்ப்பவர்கள் எல்லோருமே லட்சுமியைப் பிடித்து விட்டது என்று சொல்ல, லட்சுமி எதை, எதையோ சொல்லி தட்டுவிக்கிறாள். இடங்கள் என்பது இவர்கள் வர்க்கத்தைச் சேர்ந்ததாகத்தான் வந்திருந்தது.



"முடியாது" என்று ஏதோ ஒரு காரணம் காட்டி லட்சுமி கல்யாணத்தை தவிர்த்தாள். இதற்குள் இவள் படிப்பும் முடிந்து, ஒரு பள்ளியில் டீச்சராக வேலைக்குச் சேர்ந்தவள், மேலே பி.எட். படிக்கிறாள்.

"என்னங்க இவ பாட்டுக்கு படிச்சுகிட்டே போனா, அதுக்கு மேலே படிச்சவனைத் தான் பார்க்கணும்." அம்மா முட்டுக்கட்டை போடுகிறாள். இப்போது அசோக் இரண்டாம் ஆண்டு முதுகலைப் படிப்பில் இருக்கிறான். எப்போது அவனைப் பார்த்தாலும் "உன்னோடு நான் சந்தோஷமாக இருக்கணும்" என்றபடி அவளை வர்ணிப்பான்.

இதற்குள் லட்சுமி ஒரு இன்ஜினீயர் மாப்பிள்ளை வந்தது. பிள்ளையும் பார்ப்பதற்கு வெகு அழகாக, திறமாக நல்ல வேலையில் இருக்க அப்பா, அம்மா இருவருக்குமே பிடித்து விட்டது. அவள் மறுப்பை காதில் போட்டுக் கொள்ளாமல், நிச்சயம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய, லட்சுமி பயந்து விடுகிறாள். அசோக்கைப் பார்த்துப் பேசுகிறாள்.

"சொல்லு அசோக். என்ன பண்ணலாம் சொல்லு."

"நம்ப கல்யாணம் நடக்காது" என்கிறான் அசோக்.

சட்டென்று கண் கலங்கி விடுகிறாள் லட்சுமி.

"என்ன அசோக் இப்படிச் சொல்லறே? நான் உன்னை நினைச்சுகிட்டு கல்யாணம் எல்லாம் வேணாம்னு சொல்லிகிட்டு இருக்கேன்."

"எங்க அண்ணிதான் குடும்பத்திலே ரொம்ப பவர்புல். அவுங்களைக் கேளு. அவுங்க நினைச்சா நம்மைச் சேர்த்து வைக்க முடியும்."

"என்ன சொல்றே அசோக். உங்க அண்ணி கிட்டே எனக்கு ரொம்ப பழக்கம் கிடையாது. நான் உங்கப்பா கிட்டே நம்ம விஷயத்தைச் சொல்லட்டுமா?"

Vennila

''டிரை பண்ணிப் பாரு'' சொல்லி விட்டு மெதுவாக நகர்ந்து விடுகிறான். அது வரைக்கும் பியூட்டி க்வீன், வேர்ல்ட் பியூட்டி என்று சொன்னவன், அதன் பிறகு மறந்தும் அவளைப் பற்றி எதுவும் பேசவில்லை.

லட்சுமி முன், பின் எந்த விளைவுகளைப் பற்றியும் யோசிக்கவில்லை. அசோக்கை கணவனாக வரித்து ஏறக் குறைய ஒவ்வொரு வினாடியும் அவனோடு வாழ்ந்து கொண்டிருக்கிறாள். இப்போது தன் மனதை எப்படி மாற்றிக் கொள்வது? அவனைத் தவிர வேறு யாரையேனும் நினைக்க முடியுமா என்ன? அசோக்கின் தந்தைக்கு துணிந்து ஒரு கடிதம் எழுதியே விட்டாள்.

## 11

அன்று பள்ளிக்கு போய் விட்டு வந்த பின், அம்மா எரிமலையாக நின்றாள்.

''ஏண்டி கழுதை லவ் கேக்குதா உனக்கு லவ்? எங்களை அசிங்கப்படுத்தணும்னு இதெல்லாம் செய்வியா நீ? ஊரே காறித் துப்புது. ஜெயாவோட அம்மா வந்து மூஞ்சியிலே துப்பாத குறையாக கேட்டுட்டுப் போறாங்க. உனக்கு வெக்கமா இல்லை.''

சட்டென்று லட்சுமியின் தலை முடியைப் பிடித்து இழுத்து அறைகிறாள். விஷயம் வெளி வந்தது. இவளின் கடிதம் கிடைத்ததும் அசோக் இவளைக் காதலிக்கவே இல்லை என்று மறுத்து விட்டானாம். சாதாரணமாக தோழமையாகத்தான் பழகினானாம். இப்படி என்று தெரிந்தால் பழகி இருக்கவே மாட்டானாம். லட்சுமி அதிர்ந்து போகிறாள். சும்மா கிடந்தவளை பியூட்டி க்வீன், டார்லிங், ஸ்வீட்டி, கிஸ் கொடுப்பியா இப்படி எல்லாம் கேட்டது யார்? அம்மா தலை, தலையாய் அடித்துக் கொள்கிறாள்.

''ஐயோ என் மானம் போச்சே. எனக்குன்னு ஒரு மரியாதை இருந்ததே. எல்லாமே போச்சே'' அவள் கதறி



அழுதாள். மேலும் மேலும் பெண்ணை அடிக்க முற்பட, தந்தை வந்து தடுக்கிறார்.

''குழந்தையை அடிக்காதே.''

''என்னங்க குழந்தை?''

''ஏம்மா உன் லெட்டரையும் சேர்த்து அனுப்பிச்சிருக்காங்களே. நீயா எழுதினே? நீ எழுதினதெல்லாம் நிஜமா?''

லட்சுமி தலை குனிகிறாள். பின் மெதுவாகப் பேசுகிறாள்.

''சத்தியமா உண்மைப்பா.'' சொல்லும் போதே அழுகிறாள்.

''முதல்லே அவன்தாம்பா எங்கிட்டே வந்து, என்னை எப்போதும் பிரைஸ் பண்ணிகிட்டே இருந்தான். என்னை விரும்பறதா சொன்னதும் அவன்தாம்பா. இப்ப எனக்கும் அவன் மேல் விருப்பம் வந்திடுச்சுப்பா. இப்படி எல்லாம் ஆகும்னு தெரிஞ்சிருந்தா செத்துப் போயிருப்பேன்பா. யாரையும் அசிங்கப் படுத்தி இருக்க மாட்டேன்.'' அவள் அழுதபடி கூற, அப்பா புரிந்து கொண்டார். மௌனமாக பெண்ணை தேற்றுகிறார்.

''பார்த்தீங்களா? எப்படி பேசறா பார்த்தீங்களா? நெஞ்சிலும் மார்பிலும் போட்டு வளர்த்த பொண்ணு, நெஞ்சில் நெருப்பை அள்ளிக் கொட்டரா? அவன் யாரு அவன்? அவனுக்காக இவ செத்துப் போவாளாம். நம்ப பெண்ணுக்கு நம்ப மேலே பாசமே இல்லையா?''

''த்சு... பேசாம இரு'' அப்பா அடக்குகிறார்.

''என்னங்க பேசாம இருக்கறது? இவளால பக்கத்து வீட்டுலே கூட பேச முடியலே. எல்லோரும் கேலியா பார்க்கறாங்க. ஜெயாவோட அம்மாவே நாக்கை பிடுங்கற மாதிரி கேள்வி கேட்டுட்டுப் போறாங்க. இந்தப் பெண்ணாலே இனிமே யாரையும் நிமிர்ந்து கூட பார்க்க முடியாது. இப்படி செய்துட்டாளே இவ.''

''சரி விடு. போனதைப் பத்தி என்ன?''

Vennila

''என்னங்க போனதைப்பத்தி என்னன்னு கேக்கறீங்க?'' சொல்லிவிட்டு உடைந்து போய் அழுகிறாள் லட்சுமியின் தாய்.

''எனக்கு மானமே போச்சு. அக்கம் பக்கம் பார்த்து பேசக்கூட பயமா இருக்கு.''

லட்சுமிக்கு தன் தாயின் நிலை பாவமாகத்தான் இருந்தது. பெற்றவர்களால் பிள்ளைக்கு பெருமை வேண்டும் என்பார்கள். தன்னால் அம்மாவுக்கு சிறுமைதான். இப்படி ஆகும் என்று தெரிந்தால் கட்டாயம் கடிதம் எழுதியிருக்க மாட்டாள். திருமணம் ஆகும் வரை காத்திருந்து பிறகு அவனைச் சந்தித்து மண முடித்திருப்பாள்.

தன்னை கடிதம் எழுது என்று சொல்லிவிட்டு தன்னை நல்லவனாக காட்டிக் கொண்ட அவன் மேல் ஆத்திரம் வந்தது. ஒருவேளை பெற்றோருக்கு பயந்து இப்படிச் செய்து விட்டானோ. ஏனோ அழுகை வந்தது. தன்னை யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமென்றாலும் திட்டட்டும். ஆனால் தன்னால் தன் பெற்றோர்களுக்கு கெட்ட பெயர் ஏற்பட விடவே மாட்டாள். அவள் செய்து கொண்ட முடிவைப் பற்றி தெரியாமல் அம்மா இன்னும் திட்டிக் கொண்டும் புலம்பிக் கொண்டும் இருந்தாள். அப்பா மட்டும் வேறொருவர் மூலமாக அந்தப் பையனைக் கேட்டுப் பார்க்கலாம் என்று நினைத்திருந்தார்.

பின்னும் இரண்டு வருடங்கள் ஓடியேவிட்டது. அசோக் எப்படியோ பேங்க் பரீட்சை பாஸ் செய்து வங்கியின் அதிகாரி ஆகி விட்டான். அவனுடைய அண்ணன்மார்கள் எல்லோரும் வங்கியில் உயர் பதவியில் இருப்பவர்கள். இவனுக்கு வேலை வாங்கித் தந்து விட்டதாகவும் சொன்னார்கள். எது நிஜம் என்று தெரியவில்லை.

இப்போது அவன் வங்கி அதிகாரி. இப்போது அவன் தனி மனிதனாகி விட்டானே. கேட்டுப் பார்க்கலாமா?



அப்பா, அம்மாவிடம் முன்பிருந்த பயம் இருக்காது என்று நினைத்து லட்சுமி அவனைத் தொடர்பு கொள்ள பலமுறை முயற்சி செய்தாள். அவன் அகப்படவில்லை. இவள் தொடர்புகளை அவன் தவிர்க்கிறான் என்று திட்டவட்டமாகத் தெரிந்தது. தெரிந்தவர் மூலம் சென்ற அப்பாவின் முகத்திலும் அடித்துப் பேசினார்களாம்.

''எம் பையன் பேங்கிலே பெரிய ஆபீசர். லட்சம், லட்சமா செய்யக் காத்துகிட்டு இருக்காங்க'' என்று முகத்தில் அடித்தாற் போல் அவன் தந்தை பேச,

''சார் எங்க சக்திக்கு மீறி கட்டாயம் செய்வோம். ஆனா லட்சம் லட்சமா செய்ய எங்கிட்டே பணம் இல்லே'' லட்சுமியின் அப்பா சொல்ல,

''இத பாருங்க அவுங்க கோடி, கோடியா கொட்டினா கூட இப்படிப்பட்ட சம்பந்தம் வேண்டாம். கல்யாணத்துக்கு முன்னாடியே காதல், கண்றாவின்னு பொண்ணுக்கு கேரக்டரே சரியில்லை.''

அசோக்கின் தாய் சொல்லிவிட லட்சுமியின் தந்தை அவமானப்பட்டு தான் திரும்புகிறார். லட்சுமிக்கு விஷயம் தெரிந்து கொதித்து தான் போகிறாள். ஆனாலும் என்ன செய்ய முடியும்? சாக்கடையில் காலை விட்டாகி விட்டது. காலில் சாக்கடைத் தண்ணீர் பட்டு விட்டது என்று புலம்புவது எந்த விதத்தில் நியாயம்? பெண்ணுக்குத் திருமணம் ஆகவில்லையே என்று அம்மா படுத்த படுக்கையானாள். ஒரு நாள் இறந்தும் போனாள்.

இன்னும் ஒரு வருடம் ஓடியே போய்விட்டது. திருமணப் பேச்சை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்த அப்பா, மறுபடியும் ஆரம்பிக்கிறார்.

''இத பாரும்மா உனக்கு இருபத்து ஏழு வயசாச்சு. இனிமேலும் கல்யாணம் ஆகலைன்னா ஊர் ஒரு மாதிரி பேசும்'' என்கிறார்.

Vennila

தன் நண்பரின் மகள் திருமணம் வந்தே ஆக வேண்டும் என்று வற்புறுத்த மகளுடன் கிளம்பிச் செல்கிறாள். சக்திக்கு மீறி கடன் வாங்கி செலவழித்து திருமணம் செய்கிறார்கள். பெண் தொலைபேசியில் அதிகாரியாக பணியாற்றுகிறாள். பெண் வேலையில் இருக்கிறாள். நிறைய செய்வதாக ஒத்துக் கொண்டதால் தான் இந்தத் திருமணம் என்றனர்.

நண்பர் கடனை வாங்கி பணத்தை தண்ணீராகத்தான் செலவு செய்தார். பெண் மாநிறத்துக்கும் கீழாக, குண்டாக இருந்தாள். மணமகன் அசோக்தான். லட்சுமி அதிர்ந்து போகிறாள். வழிந்த கண்ணீரைத் துடைக்க இயலாமல் சிறிது தூரே போய் உட்கார்ந்து கொள்கிறாள்.

''காபி குடிக்கிறீங்களா?'' சற்று அனுதாபத்துடன் கேட்கிறான் அசோக்கின் தம்பி.

''ஏய் இங்கே வாடா'' அசோக்கின் அக்கா கத்துகிறாள்.

''எதுக்குடா போய் பேசறே? அந்தப் பொண்ணு எல்லாத்தையும் லவ்வுன்னு நினைச்சுக்கப் போகுது. அசோக் ஏற்கனவே சொல்லி இருக்கானில்லே. நாங்களே பேச யோசிக்கிறோம். நீ எதுக்குப் போய் பேசற?''

இதைக் கேட்டதும் லட்சுமி பின்னும் குறுகிப் போகிறாள். என்ன மாதிரி வார்த்தைகள் இவை. தவறு செய்தது இரண்டு பேரும் இதில் தண்டனை தனக்கு மட்டுமா? அவன் சுற்றிச் சுற்றி வந்து தன்னை காதலித்ததால்தானே தனக்கு இந்த உணர்வே ஏற்பட்டது. இவன் தானே அண்ணிக்கு கடிதம் எழுதச் சொன்னான். இதற்குள் அசோக்கின் சொந்தக்காரர்கள் எல்லோரும் பேயைப் பார்ப்பது போல் அவளைப் பார்த்து குசுகுசுவென்று பேச, அவள் பின்னும் மனம் உடைந்து போகிறாள்.

அசோக் எதையும் இலட்சியம் செய்யாமல், திருமணம் புரிந்து கொள்கிறான். மொத்த பேரும் தீண்டத்தகாத



வர்கள் வந்து விட்டது போல் இவளை நடத்த, அதற்கு மேல் அப்பாவிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் வீடு வந்து சேர்ந்தாள்.

மதியம் அப்பா வீடு வந்தபோது, அழுத முகத்துடன் கலங்கிப் போயிருக்கும் பெண்ணைப் பார்த்து, அதிர்ந்து போனார்.

''ஏனம்மா இப்படி சொல்லிக் கொள்ளாம வந்துட்டே? என்னாச்சு உனக்கு?''

''ஒன்னுமில்லேப்பா'' அவள் பெருமூச்சு விட,

''சொல்லும்மா'' அவர் கேட்க,

''எல்லோரும் சேர்ந்து என்னை அவமானப் படுத்தறாங்கப்பா. அம்மா அழுதபோது எனக்குப் புரியலைப்பா. இப்ப நான் படும்போது புரியுதுப்பா. அப்பா ஒருத்தர் மேலே அன்பு செலுத்தினா அது பாவமாப்பா.''

''யார்மா சொன்னாங்க? அசோக்தான் மாப்பிள்ளைன்னு தெரிஞ்சிருந்தா கல்யாணத்துக்கு போகாம தவிர்த்திருக்கலாம்.''

''அசோக்கை விரும்பினது குற்றமா அப்பா. நான் நல்ல நிலையிலே இருக்கும்போது தானே விரும்பினேன். இப்படி அசிங்கப்பட்டு நான் இருப்பதற்கு செத்துப் போயிடலாம் போல இருக்குப்பா.''

அப்பா அதிர்ந்து போனார்.

## 12



லட்சுமி அழுகிறாள். அசோக் சாதாரணமாகத் தானே இருந்தான். எம் மனச அந்த வித்தியாசத்தைப் பார்க்கவே இல்லியே. திருப்பி, திருப்பி இதையே பேசி என் மனதை ஏன் புண்படுத்தணும்? நான் என்னவோ தப்பானவள் மாதிரி. தாங்க முடியலை...ப்பா'' சொல்லி



Vennila

விட்டு அழும் மகளைப் பாவமாகப் பார்க்கிறார் அப்பா. உலகத்தின் அத்தனை விஷயங்களும் மாறி விட்டன.

முந்தய தலை முறைகளுக்கு நியாயம், நேர்மை எல்லாம் தெரியும். இப்போது இருக்கும் தலைமுறைக்கு என்ன தெரியும்? நேர்மையாக இருந்தால் பைத்தியக்காரன் தான தருமம் செய்தால் அசடு. உண்மையைப் பேசினால் உருப்படாதவன் என்றெல்லாம் அல்லவா ஆகி விட்டது.

லட்சுமியின் தந்தைக்கு அசோக்கின் மேல் தாள முடியாத கோபம். இவனெல்லாம் என்ன பையன். சும்மா கிடந்த பெண்ணின் மனதில் ஆசையை தூண்டிவிட்டு... சே! அவனைக் கண்ட துண்டமாக வெட்ட வேண்டும் போல் தோன்றியது. நிச்சயமாக அவன் நல்லா இருக்க மாட்டான். மனது சபித்தது. நான் படற மாதிரி பத்து மடங்கு அவன் படணும். கடவுள் என்பவர் உண்மையாக இருந்தால் இது நடக்கணும்.

அவர் நினைத்தது நடந்ததோ இல்லையோ. பெண்ணைப் பற்றி கவலைப்பட்டு அவரின் ஆயுளும் தான் முடிந்து போனது. லட்சுமி தனியாகிப் போனாள். ஆறுதலாக இருந்த அப்பா சென்றதும் மனது மிகவும் சங்கடப்பட்டது. தனக்கு யார் ஆறுதல் அளிப்பார்கள்? இத்தனை பெரிய உலகத்தில் அவள் தனியாகத் தானே ஆகி விட்டாள். பெரியப்பா, சித்தப்பா உறவுகள் எல்லாம் எப்போதாவது ''கல்யாணம் பண்ணிக்கம்மா'' என்பார்கள்.

''நான் ஏதாவது வரன் பார்க்கட்டுமா?'' என்பார்கள். எல்லாமே நாளாக ஆக குறைந்து தான் போனது. சித்தப்பாவின் மகள்கள், மகன்கள், பெரியப்பாவின் வாரிசுகள், மாமனின் பிள்ளைகள், அத்தையின் வாரிசுகள் என்று எல்லோருக்குமே திருமணம் ஆனது. எல்லோர் வீட்டு திருமணத்திற்கும் போய் விட்டு வந்தாள். அவள் ஒற்றை மரமாக நின்றாள்.



நல்லவேளை துக்கம் அவளை அதிகம் அழித்து விடாமல் அவள் மனதைப் படிப்பில் செலுத்தி எம்.ஏ. வில் மட்டுமல்ல. பி.எட்டிலும் முதல் வகுப்பு பாஸ் செய்து விட்டாள். ஒரு நல்ல பள்ளியில் வேலை கிடைக்க, அவள் இன்று ஒரு புகழ்பெற்ற பள்ளியின் முதல்வர். அந்தப் பள்ளிக்கூடத்தில் இடம் கிடைக்காதா என்று அலைபவர்கள் அநேகம். புகழ் பெற்றவர்களின் பிள்ளைகள் வேறு அங்கே நிறைய படிப்பதால் அது மட்டுமல்ல. பள்ளியில் படித்தவர்களும் அமெரிக்காவில், ஆஸ்திரேலியாவில், ஜப்பானில், லண்டனில் பெரிய பெரிய வேலையில் இருந்ததால், அவளுடைய நிலைமையே மாறி விட்டது.

எங்கே சென்றாலும் 'பிரின்ஸி' என்ற அடையாளம். இத்தனை புகழ் பெற்ற நிறைய பணம் சம்பாதித்து, பள்ளியில் மிக அழகாக நிர்வாகம் செய்து, சிறந்த ஆசிரியர் என்று பெயரெடுத்து எல்லாம் செய்தும் நெஞ்சில் ஏதோ ஒரு வெறுமை. பழைய காதலை மறக்க முடியாமல் 'திருமணம் வேண்டாம்' என்று நிச்சயித்து இன்று ஒற்றை ஆளாக நிற்கும் அவலம். எத்தனையோ ஏழைப் பிள்ளைகளுக்கு படிப்பு, பண உதவி எல்லாம் செய்தும் அவளைச் சுற்றி ஏனோ வெறுமை தான். சென்னையில் அழகான பங்களா, கார் எல்லாம் இருந்தும், ஏனோ ஒன்றுமில்லாத நிலை.

அந்த அசோக்கை மறக்க முடியாமல் எத்தனை கஷ்டப் பட்டாள். அப்பா எத்தனை உபதேசம் செய்தார்.

''நீ நினைக்கற அளவிற்கு அவன் நல்லவன் இல்லைம்மா. விட்டிரு.''

''அப்பா நல்லவன். கெட்டவன்னு பார்த்து லவ் வராதுப்பா...''

''சரிம்மா. முதல்லே தெரியலை. இப்ப அவன் புத்தி தெரிஞ்சு போச்சு இல்லே. உன்னை மயக்

Vennila

கடைசியிலே உனக்கு கெட்ட பெயரையும் ஏற்படுத்திட்டு வேறு ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கிட்டானே இது நியாயமா? கிட்டாதாயின் வெட்டன மறன்னு கேள்விப் பட்டதில்லையா நீ. அவன் வேறொருத்தி புருஷன் இனிமேல் அவனை நினைக்கறது அசிங்கம் மட்டுமல்ல. தப்பும் கூட, விட்டுடு."

"இல்லேப்பா இப்ப இருக்கறவனை நான் நினைச்சுக் கூட பார்க்கலே. நான் லவ் பண்ணினது ஊருக்கு வந்த அந்த சின்ன பையனைத்தான். இப்ப இருக்கறவன் யாரோ."

"இது என்னம்மா பைத்தியக்காரத்தனமான பதில். இதுனால நஷ்டப்படறது உன் வாழ்க்கை. உனக்கு அது புரியலையா? நான் உன் அப்பாம்மா. நீ கொஞ்சம், கொஞ்சமா உன்னை இழந்து போறதை நான் எப்படிப் பார்க்கறது சொல்லு. எம் பொண்ணு நல்லா இருக்கணும்னு நான் ஆசைப்படக் கூடாதா? தப்பா? இருக்கற ஒண்ணோ ஒண்ணும் சரியாக செட்டில் ஆகாமல் தனிச்சு நின்னு ஏமாந்து நிற்கறதைப் பார்க்கச் சொல்லறியா?

ஏற்கனவே உன்னை எல்லோரும் அசிங்கப்படுத்தறாங்கன்னு சொன்னே. அந்த கெட்ட பெயர் போதாதா உனக்கு? நீ செஞ்சது தப்புன்னா இந்த பனிஷ்மெண்ட் பத்தாதா? இன்னும் வேணுமா?" அப்பா புலம்ப,

"உங்க வருத்தம், வேதனை எல்லாம் நியாயம்தாம்பா. ஆனா என்னால என் மனதை மாத்திக்க முடியலையே."

அப்பாவும் தன் பங்குக்கு எத்தனையோ சொல்லி மாய்ந்து கடைசியில் இறந்தே போனார். பிறகு அத்தனை அக்கறையில் அவளைக் கேட்பாரே இல்லை. இன்று அசோக் சுவாமி, சுவாமியாகி அவள் முன் வந்து நிற்கிறான். பிழியப் பிழிய அழுகிறான். பெண் ஏமாந்து விட்டாளே என்று துடிக்கிறான். தன்னைத் தெரிந்த கொள்ளவில்லை. அவளைத் தன்னால் மறக்க இயலவில்லை. அதனால்



தான் எத்தனையோ மாறி இருந்தும் அவனை அவளால் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. அன்று முழுவதும் ஏதோ யோசனையிலே கழிந்தது.

அடுத்த நாளும் சுவாமி வந்திருந்தான். முன் பக்கம் இருந்த நாலு தலை மயிர் அப்படியே கொத்தாக நீட்டிக் கொண்டிருந்தது. வழுக்கை மண்டை துடித்துக் கொண்டு இருந்தது. முகம் நீண்டு போய் கிழவனாகத்தான் காட்சி அளித்தான்.

"மேடம்" என்றவன் கண்களில் கண்ணீர்.

"சொல்லுங்க சுஷ்மா கிடைச்சாளா?"

"இல்லை மேடம். அவ இல்லை. எங்கே போனாள்னு தெரியலை. தயவு செய்து மன்னிச்சிடுங்க. கொஞ்சம் லேட் ஆனாலும் மன்னிச்சிடுங்க. அவளைக் கண்டு பிடிச்சு அழைச்சு வந்தா அப்புறம் சரி பண்ணிடுவேன். நீங்கதான் ஹெல்ப் பண்ணணும் மேடம்."

"ஓ.கே. பதட்டப்படாதீங்க. தேடி அழைச்சுகிட்டு வாங்க."

அவன் சென்ற சிறிது நேரத்தில் அவனின் மனைவி வருகிறாள்.

"மேடம்..."

"சொல்லுங்க..."

"எம் பொண்ணு இப்படி நடந்துப்பான்னு நினைக்கலே." நீங்க சொன்னதை சீரியஸா எடுத்துக்கலை. இது மாதிரின்னு கொஞ்சம் யோசிச்சிருந்தா பெட்டரா கண்ட்ரோல் பண்ணி இருப்பேன்."

"சாரி மேடம்" முகமெங்கும் அழுது அழுது வீங்கிப் போயிருந்தது.

"ஓ.கே. கவலைப்படாதீங்க. டீன் ஏஜ் சாக்கிரதையா இருக்கணும். என்ன பண்ண முடியும்?"

Vennila

"படிக்கற வயசுலே இது என்ன மேடம் லவ்னு."

"இந்த வயசு புரியாத வயசும்மா. இதுலே தான் லவ் வரும். இந்த டைம்ல பேரண்ட்ஸோட கான்ஸன்ட்ரேஷனும் குழந்தைங்க மேலே தான் இருக்கணும். இரண்டு பேரும் வேலைக்குப் போறதுனாலே, குழந்தைகளை கவனிக்க முடியறதுல்லே. அது நிஜம். அதுதான் அவுங்களை கண்ட வழியிலே போகச் சொல்லுது. குழந்தைகளுக்கு ப்ரீடம் தரலாம். ஆனா அவுங்க அதை மிஸ்யூஸ் பண்ணாம பார்த்துக்கணும். பேரண்ட்ஸ் ரொம்ப கவனமா தான் இருக்கணும். குழந்தைகள் கூட நண்பர்களாகத்தான் பழகணும். நாம அவுங்களை கண்காணிக்கிறோம்ங்கற விஷயமே அவுங்களுக்குத் தெரியக்கூடாது. ஜாக்கிரதையாத் தான் இருக்கணும். போயிட்டு வாங்க மிஸஸ் சுவாமி. உங்களுக்கு புது ஹெல்ப்பும் இந்த ஸ்கூல் செய்யும். பெண்ணை கண்டு பிடிச்சு அழைச்சுகிட்டு வாங்க, நல்லபடியா மாத்துவோம்" தலைமை ஆசிரியை சொல்ல,

"தேங்க்யூ மேடம்" என்றவாறே எழுந்திருக்கிறாள் சுஷ்மாவின் தாயார்.

ஒரு நிமிடம் நின்றவள், மெதுவாக நகர்கிறாள். மறுபடியும் திரும்பி வந்து "மன்னிச்சிடுங்க மேடம்." காலில் விழ சுபலட்சுமிக்கு தூக்கி வாரிப் போட்டது.

## 13

"எழுந்திருங்க மிஸஸ் சுவாமி. ஏன் என் கால்ல விழறீங்க. உங்க பெண் செஞ்ச தப்புக்கு நீங்க என்ன செய்வீங்க? அதுக்குப் போய் மன்னிப்பு கேட்பானேன்" பதறியபடி அவளைத் தூக்க,

"எம் பெண்ணுக்காக நான் மன்னிப்பு கேட்கலை. எம் புருஷன் செஞ்ச தப்புக்கு மன்னிப்பு கேட்கிறேன்."



"வாட்... என்ன... என்ன சொல்லறீங்க? உங்க புருஷனா?"

"தெரியும் மேடம் உங்க கதை எல்லாம் தெரியும். எம் மேரேஜ் போட்டோவிலே கூட நீங்க வந்திருக்கீங்க. அப்ப உங்களைப் பத்திச் சொல்லி எல்லோரும் கேலி செய்து பேசிகிட்டு இருந்தாங்க. அப்ப... என் புருஷன் பெரிய ஹீரோ. அவனைச் சுத்தி, சுத்தி ஒரு அழகான பெண் கூட ஏங்கி இருக்குன்னு எனக்குப் பெருமையாக இருந்தது. உங்களைக் கூட ஏளனமாகத்தான் பார்த்திருக்கிறேன். அப்புறம் எம் புருஷனோட வாழ ஆரம்பிச்சப்புறம்தான் அவர் எப்படிப்பட்டவர்னு தெரிஞ்சுது. அது தெரியறதுக்கு முன்னாலே எம் பொண்ணை ஸ்கூல்ல சேர்க்க வந்திருக்கேன். அப்ப நீங்க ஸ்கூல் டீச்சரா இருந்தீங்க. உங்களைப் பார்த்து முகத்தை திருப்பிட்டு போயிருக்கேன். உங்களைப் பார்த்தவுடனே ஒரே ஜெலஸ். இத்தனை அழகான பொண்ணு என் ஹஸ்பண்டை விரும்பி இருக்காளேன்னு வயித்தெரிச்சல். அப்புறம் என் புருஷனோட பழகப் பழகத்தான் அந்த ஆளோட திருட்டுத்தனம் புரிஞ்சுது. எந்தப் பொண்ணைப் பார்த்தாலும் வழிஞ்சுகிட்டு நிக்கறான். கல்யாணம் ஆகி பெண் பிறந்ததும் இந்தப் பழக்கம் மாறலே. எத்தனையோ பெண்ணுங்க மனசை கலைச்சு அவுங்களை நினைக்க வச்சு, இதெல்லாம் பாவம்னு அப்புறம்தான் தெரிஞ்சுது. அந்தப் பொண்ணுங்க மனசு உடைஞ்சு நிற்கும் போதுதான் உங்க நிலைமையும் புரிஞ்சுது. மன்னிச்சிடுங்க. அவர் செஞ்ச பாவம். என் பெண்ணுக்கு இப்படி ஆச்சு. அவர் இந்த வேதனையை உணரணும்னுதான் கடவுள் இப்படி பண்ணிட்டான் போலருக்கு. இவரால உங்க வாழ்க்கையே பாழாயிடுச்சு. நீங்க மனசுலே சபிச்சீங்கன்னா கட்டாயம் பலிச்சிடும்."

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஒரு நிமிடம் எரிச்சலுருகிறாள் லட்சுமி.

Vennila

''ஹலோ தயவு செய்து எதையும் தப்பா புரிஞ்சுக்காதீங்க.'' சொல்ல விழிக்கிறாள் மேனகா.

''என்ன சொல்லறீங்க மேடம்?''

''இத பாருங்க மேனகா. உங்க ஹஸ்பண்டை காதலிச்சது நிஜம். அவர் வார்த்தையை நம்பி அஞ்சு வருஷம் அவருக்காக காத்துக் கிடந்ததும் நிஜம். ஆனால் அது எப்படி நடந்தது தெரியுமா? இன்னிக்கு எனக்கு வயசு ஐம்பத்து ஆறு. காதல்ங்கறது என்னுடைய பதினாறு வயதிலே நடந்தது. பதினாறு வயசுலேந்து இன்னும் அஞ்சு வருஷம் சேர்த்துகிட்டீங்கன்னாகூட இருபது, இருபத்தொன்று வயதுக்குள்ளே எல்லா நினைவுகளும் அணைஞ்சு போச்சு. கிட்டத்தட்ட முப்பத்து நாலு வருஷம் நான் என்னுடைய ஸ்கூல், படிப்புன்னு வாழ்ந்துட்டேன். கல்யாணம் பண்ணிக்காதது உங்க புருஷனாலே இல்லே. முதல்லே கொஞ்ச நாட்கள் அதான் காரணமாக இருந்தது. அப்புறம் அப்படி கிடையாது.

நான், என் முன்னேற்றம்னு மனதை திருப்பிகிட்டேன். சாதாரண டீச்சரா இருந்தும் இன்று ஹெட்மிஸ்ட்ரஸ் லெவலுக்கு வந்திருக்கேன். பெஸ்ட் டீச்சர் அவார்ட் எல்லாம் வாங்கியாச்சு. எக்ஸ்சேன்ஜ் புரோகிராம்லே பல தடவை பல நாடுகளுக்கும் போயிட்டு வந்தாச்சு. இங்க பத்து வருஷமா எச்.எம்மா இருக்கேன். ஸ்கூலுக்கு ஒரு நல்ல பேரும் வாங்கி கொடுத்தாச்சு. என் சிந்தனைகள் எல்லாம் என்னுடைய ஸ்கூல், அதனுடைய பிள்ளைகள் அவ்வளவுதான். நான் கல்யாணம் பண்ணிக்காத காரணம் உம் புருஷன் மாதிரி ஒருத்தன் கிட்டே மாட்டிப்பேனாங்கற பயம்தான். எல்லா ஆம்புளைங்களையும் நான் கெட்டவன்னு சொல்லலை. ஆனா எனக்கு வருகிறவன் மட்டமா இருந்தா என்ன செய்ய? இதுதான் ரியல் காரணம். அதுனால நீங்களாவே எதையாவது



நினைச்சுகிட்டு உங்களையும் தாழ்த்திகிட்டு என்னையும் அசிங்கப்படுத்தாதீங்க'' மேனகா சிறிது நேரம் தயங்கி நின்றாள்.

மீண்டும் மெதுவாகக் கேட்கிறாள்.

''அவரால நீங்க ஏமாந்தது நிஜம் தானே மேடம். அதைத் தாங்க முடியாமல் வருத்தத்தில் இருந்ததும் நிஜம் தானே மேடம்.''

''லுக் மிஸஸ். மேனகா ஒண்ணைப் புரிஞ்சுக்கங்க. பாதையிலே முள்ளு இருக்கு. கவனிக்காம காலை வச்சிடறோம். குத்திடுது. அந்த வலி கொஞ்ச நாள் இருக்கத்தான் இருக்கும். என்னிக்கோ சின்ன வயசுலே குத்தினது உங்களுக்கு இன்னும் வலிக்குமா என்ன? உங்க புருஷன் முள் மாதிரி. கவனிக்காம ஏமாந்தது என் தப்பு. ஒரு தடவை விஷயம் புரிஞ்சவுடனே ஜாக்கிரதையாகத்தான் இருக்கிறேன். அதுனால என்னைப் பற்றி கவலைப்பட வேண்டாம். எனவே ரொம்ப தேங்க்ஸ்'' என்கிறாள்.

மேனகா மெதுவாக எழுந்து ''ரொம்ப சாரி மேடம்'' சொல்லி விட்டு கிளம்புகிறாள். அவள் போய் ரொம்ப நேரம் அந்த நினைவுகள் ஆக்கிரமித்தன. தான் உண்மையிலே இன்னும் அசோக்கை நினைத்துக் கொண்டிருக்கிறேனா என்ன? அதற்காகவா திருமணத்தைக் கைவிட்டேன். முதலில் அந்த எண்ணம் இருந்தது நிஜம் தான். இப்போதெல்லாம் அவன் நினைவு கூட வந்ததில்லை. பள்ளி பிள்ளைகள் என்றான பின் எந்த நினைவுகளும் அவள் மூளையில் வந்ததே இல்லை. அதுதான் நிஜம். ஏன் முதன் முதலில் இந்த பெண்ணை பள்ளியில் சேர்க்க வந்தபோது மாநிறமாக இருந்தாலும் சற்று பூசிய மாதிரி இருந்த மேனகாவை அடையாளம் தெரியவில்லை. எங்கேயோ பார்த்திருக்கிறேனே என்று மண்டையைக் குடைந்து கொண்டது நிஜம்.

Vennila

பின் சுவாமி ஒரு முறை பள்ளிக்கு வந்தபோது உண்மை தெரிந்தது. அதன் பிறகு அவள் அவர்களைப் பற்றி நினைக்கக்கூட இல்லை. இதுதானே நிஜம். தன்னைப் பாதிக்காத விஷயம் தேவை இல்லாமல் தன்னை பாதித்து விட்டது என்று நினைத்தவள் அடுத்து தன் வேலைகளை செய்ய ஆரம்பித்தாள். ஒரு பத்து நாட்கள் சென்றது. அந்தப் பெண் போன சுவடே தெரிய வில்லை. அந்தப் பெண் சுஷ்மாவைப் பற்றி மட்டும் லேசான கவலை இருந்தது. தான் மாட்டிக் கொண்ட மாதிரி இந்தப் பெண்ணும் அல்லவா மாட்டிக் கொண்டது. தானாவது மனதை மட்டும் பறி கொடுத்தோம். இந்த காலத்தில் போய் இந்தப் பெண் இப்படி நடந்து கொள் கிறதே. பத்தாவதில் மாநிலத்தில் முதலில் வர வேண்டும் என்று ஒவ்வொரு மாணவ, மாணவிகளும் துடிக்கும் போது இந்தப் பெண் ஏன் இப்படி? 'சரி ஒழியட்டும்' நினைத்துக் கொள்கிறாள்.

அன்று மாலை அவளின் பள்ளி ஆசிரியை ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொள்கிறாள்.

''மேடம் நான் பிப்ஸ்த் ஏ டீச்சர் பொன்னி பேசறேன்.''

''சொல்லும்மா'' என்கிறாள்.

''நம்ம ஸ்கூல் ஸ்டூடண்ட்ஸ் இரண்டு பேரும் எங்க வீட்டுப் பக்கமாக அலைஞ்சுகிட்டு இருந்தாங்க. விசாரிச்ச துலே அவுங்க ரெண்டு பேரும் காணோம்னு ஏற்கனவே கம்ப்ளைண்ட் இருக்கறது வேற தெரிஞ்சுது. நல்ல விதமா பேசி என் வீட்டிலே தங்க வச்சிருக்கேன்.''

''நீங்க ஒவுட்ஸ்கர்ட்ஸ்லே எங்கியோ இருக்கீங்க இல்லே.''

''ஆமாம் மேடம் தாம்பரம் தாண்டி உள் பக்கம் போகணும்.''



''ஓகே'' என்று அட்ரஸைக் குறித்துக் கொண்டவள், மேனகாவைத் தொடர்பு கொண்டு விஷயத்தைச் சொல்கிறாள்.

சதீஷின் தந்தைக்கும் விஷயத்தை சொல்லிவிட மேனகா அவளின் கணவன் சதீஷின் தாய் தந்தையர் பதறி அடித்துக் கொண்டு அவன் முன்னே வந்தனர்.

''வாங்க நானும் வரேன். போவோம்'' என்றபடி இரண்டு காரில் புறப்பட்டார்கள்.

## 14



வழியில் எல்லாம் சதீஷின் தந்தை பொறுமியபடி வந்தார். ''பொம்பளைங் களை அடக்க ஒடுக்கமா வளர்க்கணும்'' என்று ஆரம்பிக்க,

''ஸார் நோ கமெண்ட்ஸ் ப்ளீஸ்'' என்றவாறே அடக்கு கிறாள் சுபலட்சுமி.

''ஆமா பிள்ளை பொறுக்கியா இருக்கான். அதை அடக்கத் துப்பு இல்லை.''

சற்று சத்தமாக சுவாமி முணு, முணுக்க.

''சார் உங்களுக்கும் தான். வயசானவங்க புரிஞ்சுகிட்டு நடந்துக்கணும். நம்பளும் சின்ன பிள்ளை மாதிரி இருந்தா என்ன அர்த்தம்?'' என்றவள்,

''அப்புறம் உங்க நாலு பேருக்கும் சொல்றேன், தயவு செய்து குழந்தைகளைப் பார்த்ததும் திட்டறதோ, அடிக் கறதோ வேண்டாம். குழந்தைகளோட பேசுங்க. அவுங்க பயத்தைப் போக்குங்க. அவுங்க என்ன பண்ணனும்னு தைரியமா சொல்லுங்க. நல்லதை எடுத்துச் சொல்லுங்க. குழந்தைகள்தானே சரிபண்ணிடலாம்'' அவள் சொல்லச் சொல்ல நான்கு பேரும் மௌனமாக தலை அசைக்க, வண்டி தாம்பரம் போய் பின் உள்ளுக்குள்ளும் போக

Vennila

ஆரம்பித்தது. இரண்டு குடும்பத்தினரும் மிகுந்த தவிப்போடு அமர்ந்திருந்தனர். சுப லட்சுமிக்கு தான் அவனை காதலித்து கொஞ்சம், கொஞ்சமாக கெட்ட பெயர் சம்பாதித்தது எல்லாம் ஞாபகத்திற்கு வந்தது. மனதை இளக விடாமல் கல்லாக்கிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

வீட்டில் இரு பிள்ளைகளும் அமர்ந்திருந்தனர். இவர்களைப் பார்த்ததும் மிரண்டனர். சதீஷின் தந்தை சதீஷைப் பார்த்ததுமே இழுத்துப் பிடித்து அறைந்தார்.

''ஐயோ'' என்று தாவி மகனைப் பிடித்த சதீஷின் தாயாருக்கும் அடி விழுந்தது.

''சார் நில்லுங்க'' இவள் கத்து முன் சுவாமி பெண்ணை இழுத்து கீழே தள்ளி மிதித்தான்.

''ஓடுகாலிக் கழுதை.''

''சார் நில்லுங்க'' இருவரும் மாறி மாறி பிள்ளைகளை அடிக்க செய்வதறியாது திகைக்கிறாள். பின் ஒரு வித எரிச்சலோடு இரு குழந்தைகளையும் தன் பக்கம் நிறுத்திக் கொள்கிறாள்.

''போதும் சார். நிறுத்துங்க. குழந்தைகளுக்கு நல் வார்த்தைகள் சொல்லுவீங்க. புத்திமதி சொல்வீங்கன்னு பார்த்தா இப்படி அடிக்கறீங்க? இப்படீன்னு தெரிஞ்சா, இந்த பிள்ளைங்க இருக்கற இடத்தையே சொல்லி இருக்க மாட்டேன். ஓ.கே. சார் இவுங்களை நான் அழைச்சுகிட்டு போறேன்.''

''மேடம்'' இருவரும் பதற,

''ப்ளீஸ் சார் பர்மிஷன் கொடுங்க. இவுங்களை அழைச்சுகிட்டுப் போய் புரிய வைக்கிறேன். அதுக்குள்ளே உங்க கோபம் சாந்தமாகட்டும். சார் நான் கிளம்பறேன்'' அவள் பிள்ளைகளை அழைத்தபடி கிளம்புகிறாள்.

சிறிது நேரம் செய்வதறியாது இரு குடும்பத்தினரும் நின்று கொண்டிருக்கின்றனர். மறுபடியும் இருவரும் சண்டை பிடிக்க ஆரம்பித்தனர்.



''உம் பெண்ணை அடக்கி வைக்கத் தெரியலை. வந்துட்டான்.''

''யாரு நானா? என்னையா சொன்னே? பிள்ளையா பெத்து வச்சு இருக்கே? ஒன்பதாவது படிக்கறச்சே என்னய்யா லவ்?'' அவன் கத்த,

''டேய் பேசாதே. எம் பிள்ளை பாவம். அப்பாவி, அவனைப் போய் மாட்ட வைத்து'' சுவாமியின் சட்டையைப் பிடிக்க ரணகளம் ஆனது. இருவரின் மனைவிமார்களும் இருவரையும் சமாதானப்படுத்துகின்றனர்.

''போகலாம் வாங்க'' இருவரும் கிளம்பிச் செல்கிறார்கள்.

காரில் சுவாமி புலம்பிக் கொண்டே இருந்தான். பெண்டாட்டியை அடக்காத குறையாக மிரட்டுகிறான்.

''பெண்ணையாடி பெத்து வச்சிருக்கே. ஒன்பதாவது படிக்கும் போதே என்ன லவ் வேண்டியிருக்கு.'' அவன் எரிச்சலோடு கத்த,

''அப்படின்னா பதினொண்ணாவதுலே ஆரம்பிச்சா பரவாயில்லையா?'' மிக மிக மெதுவாக மேனகா கேட்க, பெண்டாட்டியை எரித்து விடுவது போல் பார்க்கிறான் சுவாமி. அவன் பார்வையை தவிர்த்தவாறே வெளியே பார்க்கிறாள் மேனகா.

இவன் மட்டும் பதினோறாவது படிக்கும்போதே காதல் விளையாட்டுகளில் ஈடுபடலாம். இவன் பெண்ணுக்கு வரக்கூடாதா?

அப்பனைப் போல்தான் அதற்கும் புத்தி இருக்கும். பல்லைக் கடித்துக் கொள்கிறாள். தவறை மொத்தமும் தன் மேல் வைத்துக் கொண்டு அடுத்தவரை சாடுகிறான். இவனின் ஜீன் தான் பெண்ணுக்கு வந்து பாடாய் படுத்துகிறது. எப்படியாவது அந்த ஹெட்மிஸ்ட்ரஸ் தன் பெண்ணை நன்றாக்கி விட்டால் போதும்.

Vennila

ஏனோ சுபலட்சுமியை நினைத்தால் பாவமாக இருந்தது. அவ்ளுக்கு அத்தனை தீங்கு செய்தும், தன் குடும்பத்துக்கு நன்மையே தான் செய்கிறாள். மெதுவாக பெருமூச்சு விடுகிறாள்.

சுவாமி பல்லைக் கடித்துக் கொண்டு இருக்கிறான். இங்கே சதீஷின் தந்தை சீறுகிறார்.

"வீட்டிலே என்ன செய்யறே? பையனைக் கூடவா பார்த்துக்க முடியாது" எரிச்சலுறுகிறாள். சதீஷின் தாய் ஏதோ யோசித்தவாறே அமர்ந்திருக்கிறாள்.

தன் பையன் சரியாகுவானா? டீன் ஏஜ் என்பதே புரியாத பருவம்தான். இதில் தான் இன்னும் சற்று கவனமாக பிள்ளையைப் பார்த்திருக்கலாம். அவளும் கண் மூடியவாறு மௌனமாக அமர்ந்திருந்தாள். சுபலட்சுமியுடன் காரில் அமர்ந்திருந்த சுஷ்மாவும், சதீஷும் பயத்தில் அழுது கொண்டிருந்தனர். தந்தையிடம் அடி வாங்கிய அவமானம், இப்படி மாட்டிக் கொண்டோமே என்ற வேதனை எல்லாம் சேர்ந்து இன்னும் நன்றாக அழ வைத்தது.

"ஷ்... எதுக்காக அழறீங்க?" பள்ளியின் முதல்வர் கேட்டதும், பயத்துடன் பார்த்த வண்ணம் அழுகையை அடக்கிக் கொண்டனர். இருந்தும் கண்களில் இருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது.

"வில் யூ ஸ்டாப் கிரையிங்." என்றவாறே சற்று அதட்டலாய் கூற இருவரும் மௌனமாயினர். பயத்துடன் கூனிக் குறுகி அமர்ந்திருந்தனர். தன் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறாள் லட்சுமி. வீட்டிற்குள் வரவே தயங்கி கூசிப் போய் நின்றனர்.

"கோ இன்ஸைட்" கத்துகிறாள் சுபலட்சுமி.

நடுங்கியபடியே உள்ளே போய் நிற்கின்றனர்.



"ஏதாவது சாப்பிட்டீங்களா?" கேட்க, பயந்து போய் பள்ளி முதல்வரையே பார்க்கின்றனர்.

உள்ளே குரல் கொடுக்க, சமையற்கார அம்மாள் இரண்டு டம்ளர் சூடான போர்ன்விடா எடுத்து வர, இரண்டு பேரும் பயந்தபடியே அருந்துகின்றனர்.

"சிட் டவுன்" சொல்ல மௌனமாக, சோபாவின் ஒரு மூலையில் அமர்ந்து கொண்டனர்.

"கமான் டெல் மீ என்னாச்சு?"

இருவரும் பயந்தபடியே முதல்வரையே பார்க்க,

"கமான் ஓபன் யுவர் மௌத். வாட் ஹேப்பண்ட்" கேட்க இருவரும் மௌனமாக இருக்க,

"கமான் ஸ்பீக்" கத்த மெதுவாக வாய் திறந்தனர்.

"மேடம்."

"கமான் ஸ்பீக் ஏன் இப்படிச் செய்தீங்க? ஸ்கூலுக்கு மட்டம் போட்டுட்டு இது என்ன வேலை? ஏற்கனவே டென் டேஸ் அட்டெண்டஸ் லேப்ஸ் தெரியும் இல்லே" சொல்லச் சொல்ல மறுபடியும் இருவரும் அழுகின்றனர்.

"இப்ப எதுக்கு அழறீங்க? என்ன ரீசன்? எதுக்கு ஓடிப் போனீங்க. லவ்வா" அவள் கேட்க, இருவரும் பயந்தபடியே அவளையே பார்க்கின்றனர்.

"ஏன் எதுக்கு அழுதீங்க? பயந்த மாதிரி பார்க்கறீங்க? கேக்கவே பயமா இருக்கா? கேக்கவே பயமா இருக்கற வேலையை நீங்க செய்யலாமா?"

இருவரும் தலை குனிந்தனர். சுபலட்சுமிக்கு பாவமாக இருந்தது. அன்பு வசப்படுவதும், காதல் வசப்படுவதும் இயல்பாக நிகழ்வது. இதில் பிள்ளைகளை குறை சொல்வானேன். இரண்டு பேரையும் தன்னருகே வரும்படி சொல்லி அருகே அமர்த்திக் கொண்டு உபதேசிக்கிறாள்.

Vennila

"என்ன சதீஷ் சுஷ்மாவை ரொம்பப் பிடிச்சிருக்கா?"

"ஆமாம்" என்று அவன் தலை ஆட்ட,

"உனக்கு?" அவள் சுஷ்மாவைக் கேட்க, சுஷ்மாவும் தலையை ஆமாம் என்ற பாணியில் ஆட்டியபடி தலை குனிகிறாள்.

"இத பாரு லவ் பண்றது தப்பில்லே. நியாயமா லவ் பண்றதுங்கறது நம்மை மைண்ட் பிராட் ஆகிறதை தான் காமிக்கிறது. ஆனால் லவ் பண்ற விதமும், பண்ற டைமும் தான் தப்பு. நீங்க எல்லாம் ஸ்கூல்ல படிக்கற பசங்கதானே லவ் பண்றதுக்கு காலம் இருக்கு. நேரம் இருக்கு. ஆனா படிக்கற காலங்கறது இதுதானே. இந்த டைமை யாராவது வேஸ்ட் பண்ணுவாங்களா? படிப்பை முடிச்சு அவுங்க, அவுங்க வேலைக்குப் போய் நிறைய சம்பாதிக்க ஆரம்பிச்சதும் லவ் பண்ண ஆரம்பிக்கலாமே. அதிலே ஒண்ணும் தப்பில்லையே."

பள்ளியின் முதல்வர் சொல்லச் சொல்ல இருவரும் மௌனமாகவே அவளைப் பார்த்தனர்.

"சொல்லுங்க. நான் சொல்றது கரெக்ட்தானே. லவ் பண்றதுக்கு நிறைய டைம் இருக்கே. ஒரு ஏஜுக்கு அப்புறம் லவ் தானே பண்ணிகிட்டு இருக்கப் போகிறோம். இப்ப படிக்கலாமே என்ன சொல்றீங்க?

நாளையிலேர்ந்து ஒரு நாள் கூட ஆப்ஸென்ட் ஆகாம ஸ்கூலுக்கு வரணும். ஸ்கூல் பாடங்களை ஒழுங்கா படிக்கணும். செய்வீங்க இல்லையா?"

கேட்க, இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்.

"என்னம்மா? என்ன சதீஷ்? என்ன விஷயம்? ஒருத்தரை ஒருத்தர் நிஜமாகவே நேசிக்கிறீர்களா? உங்க லவ் ட்ருவாக இருந்தால் நல்லா படிச்சு வேலைக்குப் போய் அப்புறம் செய்துக்கங்களேன்."



அவர்கள் பதில் பேசாமல் இருக்க,

"த... பாருங்க. நீங்க ரெண்டு பேரும் மைனர்ஸ். போலீஸ்லே மாட்டினா ஜெயிலுக்குப் போயிடுவீங்க. தெரியுமா? போலீஸ் கம்ப்ளைண்ட் கொடுக்கலாமா?" கேட்க, கேட்க இருவரும் முகமே இருளடைந்தாற் போல் விழிக்கின்றனர்.

## 15



"உங்களை பயமுறுத்தணும்னோ, எரிச்சல் பட வைக்கவோ நான் சொல்லலை. அந்தந்த நேரத்துலே செய்ய வேண்டியதை நாம செஞ்சுதாம்மா ஆகணும். படிக்கற நேரத்துலே படிக்கணும். விளையாடற நேரத்துலே விளையாடணும். எப்பவுமே அப்பா, அம்மா கையை எதிர்பார்க்கிற வாழ்க்கை என்ன வாழ்க்கை? சொல்லு. இப்ப உங்க அப்பா, அம்மா எல்லாம் சம்பாதிக்கிறாங்க இல்லே. அது மாதிரி நீங்க சம்பாதிக்க வேண்டாமா? உங்க தாத்தா, பாட்டி கிட்டயா துட்டு கேக்கறாங்க இல்லையே" கேட்க, கேட்க விழிக்கின்றனர்.

அவள் சொன்ன உண்மையும் புரிய லேசாக தலை குனிகின்றனர்.

"அவுங்க அவுங்க சம்பாதிக்கணும். இந்த பத்து நாள்லே பணம் இல்லாத கஷ்டத்தை அனுபவிச்சீங்க இல்லே. இப்ப பேரண்ட்ஸை எகெய்ன்ஸ்ட் பண்ணிகிட்டு கல்யாணம் பண்ணிகிட்டா உங்களுக்கு யார் ஹெல்ப் பண்ணுவாங்க? யார் பணம் கொடுப்பாங்க. சாப்பாட்டுக்கு என்ன செய்வீங்க?" கேட்க முகம் இன்னும் வெளிறினர்.

"ஆமா இந்த பத்து நாள்லே எங்கே சாப்பிட்டீங்க?"

முதலில் மௌனமாக இருந்தவர்கள் பின் மெதுவாகச் சொல்ல ஆரம்பித்தனர்.

Vennila

முதல் நாள் சாப்பாடு எடுத்துப் போயிட்டேன். அப்புறம் ஒரு ரெண்டு நாள் ஒண்ணும் கிடைக்கலே. அப்புறம் கைல இருக்கற பணத்தை வச்சு எப்படியோ டூ டைம்ஸ் சாப்பிட்டோம். அப்புறம் பணம் இல்லே. ஒன் டைம் தான் சாப்பிட்டோம்'' சதீஷ் சொல்ல,

''யெஸ் மேடம் ரொம்பப் பசிச்சுது. சில டைம்ஸ் எல்லாம் பசியிலே ரொம்ப அழுதோம்'' சுஷ்மா சொல்ல,

''இப்ப பணம் இல்லைன்னா எத்தனை கஷ்டம்னு பிராக்டிகலா தெரிஞ்சுகிட்டு இருப்பீங்க இல்லையா?''

இருவரும் மௌனமாக தலையசைத்தனர்.

மேடம் குளிக்கறதுக்கு கூட ஒரு இடம் இல்லே? நல்ல பாத்ரூம் இல்லே மேடம். டிரஸ் சேன்ஜ் பண்ணக்கூட ரூம் இல்லே மேடம்.'' சுஷ்மா சொல்ல, சொல்ல புன்னகைக்கிறாள் சுபலட்சுமி.

''எஸ் மேடம். ஒரு வீட்டுக்குப் போனோம். அங்கே பாத்ரூம் ஒரே ஸ்மெல். உள்ளே போகவே கஷ்டமா இருந்தது மேடம்.'' சதீஷ் கூற,

''இப்ப புரிஞ்சுகிட்டீங்களா? உங்க பேரண்ட்ஸ் வீடு எத்தனை நல்ல ரொம்ப சேஃபான பிளேஸ். அம்மா இதைச் சாப்பிடு, அதை சாப்பிடுன்னு கொடுத்துகிட்டே இருப்பாங்க இல்லே. அப்பா வேற கேட்கும் போதெல்லாம் பாக்கெட் மணி கொடுத்துகிட்டு இருப்பாரு இல்லையா? வீடு எத்தனை சுத்தமா ஜம்முனு இருக்கும்?''

''ஆனா எங்க வீட்டிலே பாக்கெட் மணி அப்பா கொடுக்கவே மாட்டார். அம்மா தான்'' சுஷ்மா கூற,

''சரிம்மா. இப்ப ஓடி வந்துட்டியே இனிமே பாக்கெட் மணி யார் கொடுப்பாங்க. நல்ல சாப்பாடு, நல்ல பிளேஸ் இதெல்லாம் இனிமே கிடைக்குமா? இனிமேலாவது, நான் சொல்றதைக் கேளுங்க. ஒழுங்கா ஸ்கூலுக்கு வாங்க.



க்ளாஸ் அட்டெண்ட் பண்ணுங்க. நல்லா படிங்க. நல்லா மார்க் எடுங்க. பெரியவங்களானப்புறம் கல்யாணம் செய்துக்கலாம். ஓகேவா. இப்ப ஒழுங்கா வீட்டுக்குப் போயிடுங்க. அப்புறம் ஸ்கூலுக்கு ரெகுலரா வாங்க.''

''மேம்...'' நடுங்கியபடியே இருவரும் குரல் கொடுக்கின்றனர்.

''என்னப்பா?''

''வீட்டுக்குப் போனா பனிஷ் பண்ணுவாங்க. அடிப்பாங்க மேடம். நாங்க இங்கேயே இருக்கோம்.''

''டூ நாட் பி எ ஸ்டுபிட்'' அவள் எரிச்சலுடன் பேச,

''சாரி மேடம்.'' சொல்லிவிட்டு இருவரும் அழ, சுபலட்சுமி அவர்களைத் தேற்றி விட்டு பேசுகிறாள்.

''நீங்க எல்லாம் மைனர்ஸ். பேரண்ட்ஸ்கூட தான் இருக்கணும். வேற யாருடனும் இருக்க முடியாது தெரியுமா?''

''மேம்'' இருவரும் ஆரம்பிக்க,

''நீங்க ரெண்டு பேரும் போங்க. ஏதாவது பிரச்சனை இருந்தா பார்க்கலாம். நான் உங்க இரண்டு பேர் பேரண்ட்ஸ் கிட்டேயும் கூப்பிட்டு சொல்லிடறேன். ஏதாவது பிரச்சனை பண்ணினாங்கன்னா எனக்குப் போன் பண்ணுங்க.''

இருவரும் மறுபடியும் 'மேடம்' என்று தயங்க,

''தப்பு பண்ணும்போது தான் பயம் இருக்கணும். நாட்நௌ.'' என்கிறாள் சுபலட்சுமி.

அன்று மாலை அவர்கள் இருவரும் பெற்றோரிடம் போய் சேர்ந்தனர். இருவரின் பெற்றோர்களை அழைத்து அவர்களுக்கு உபதேசம் செய்து, ஒழுங்காக குழந்தைகளை வைத்துக் கொள்ளும்படி சொல்லி அனுப்புகிறாள்.

''தேங்க்யூ மேடம். தேங்க்யூ.'' சுவாமி அரற்றுகிறான்.

''இதை மறக்கவே மாட்டேன்'' அழுகிறான்.

Vennila

சதீஷின் தாயும், தந்தையும் காலில் விழாத குறையாக நன்றி கூறிவிட்டு கிளம்பிச் செல்கின்றனர்.

ஆயிற்று ஒரு மாதம் ஓடியே போனது. சதீஷும் சுஷ்மாவும் ஒழுங்காக பள்ளிக்கு வர ஆரம்பித்தனர். அந்த மாத பரீட்சையிலும் இருவரும் நல்ல மதிப்பெண்கள் தான் பெற்றிருந்தனர். பார்த்து நன்றாகத்தான் பேசுகிறார்கள். சங்கடங்கள், சர்ச்சைகள் தீர்ந்ததால் இருவராலும் குறுகுறுப்பில்லாமல் பழக முடிந்தது. பழையபடி காதல், ஊதல் என்று சொல்லாமல் மற்றவர்களிடம் பழகுவது போல், சாதாரணமாக நண்பர்களாகத்தான் பழகினர்.

சுபலட்சுமி நினைத்துப் பார்க்கிறாள். தனக்கு வாழ்க்கையை புரிந்து கொள்ள எத்தனையோ வருடங்கள் ஆனது. ஆனால் இந்தக் காலப் பிள்ளைகள் புத்திசாலிகள். எதையும் நொடியில் புரிந்து கொள்ளும் சாமர்த்தியம் உடையவர்கள். நன்றாக இருக்கட்டும்.

மனதிற்குள் வாழ்த்தியவாறே திரும்ப,

''மேடம்'' என்றபடி ஒரு அழகான பெரிய சிகப்பு ரோஜாவைத் தருகிறாள் சுஷ்மா.

''தேங்க்யூ உனக்கு பர்த்டேவா?''

''நோ மேடம். இட் ஈஸ் பிரண்ட்ஷிப் டே மேடம்.'' சொல்லிவிட்டு வெட்கப்பட்டு அவள் ஓட,

''மேடம்'' என்றவாறே ஒரு பெட்டி முழுவதுமான சாக்லெட்டை நீட்டி ''ஹேப்பி பிரண்ட்ஷிப் டே மேடம்'' சதீஷ் சொல்லி விட்டு வெட்கத்தோடு சிரித்து விட்டு நகர, ஒரு நிமிடம் குழந்தைகளின் சிரிப்பில் தன்னை மறந்து பெரியதாக புன்னகைக்கிறாள் சுபலட்சுமி.

Vennila